பக்கங்கள்: இருபத்தெட்டு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 தை 21 வெள்ளிக்கிழமை (04.02.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 070



2 உடைக்கப்படும் சட்டவிரோத வீடுகள்


3 ஒற்றுமையாகச் செயற்படுவோம்


14 அடுத்த பலிக்கடா


22 இலங்கைப் பிரச்சினை தமிழகத் தேர்தலில்


25 அலட்சியம் செய்யாதீர்


## உயர்பாதுகாப்பு வலயங்களில் படிப்படியாக மக்கள் குடியமர்வு

### கூட்டமைப்புடனான பேச்சில் அரச தரப்பு நேற்று விளக்கம்

கொழும்பு, பெப்ரவரி04

**யாழ். குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் படிப்படியாக மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் எனவும், கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வவுனியா பயங்கரவாத புலனாய்வு திணைக்கள (TID) அலுவலகத்தில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் அரச தரப்புத் தெரிவித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சின் போது இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.**

அரசு - கூட்டமைப்பு இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நேற்றுப் நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றன. சுமார் ஒரு மணிநேரம் நீடித்த இப் பேச்சுக்களில் கூட்டமைப்பின் சார்பில் எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசு தரப்பில் சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க, அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ், நிமால் சிறிபால டி சில்வா மற்றும்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையாவோரில் சரத் பொன்சேகாவும் இடம்பெற வேண்டும்

கொழும்பு,பெப். 04

சுதந்திர தினத்தையொட்டி ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு இன்று விடுதலை செய்யப்படவுள்ள 1,500 சிறைக்கைதிகளின் பெயர்ப் பட்டியலில் சரத் பொன்சேகாவின் பெயர் முதலாவதாக இடம்பெற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி, அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை

(28 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கையே உண்மையான சுதந்திரம்



ஐக்கிய இலங்கை என்ற தேசமொன்றைக் கட்டியெழுப்புவதே சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், அதனை அர்த்தம் நிறைந்ததாக ஆக்கவும் உள்ள சிறந்த வழியாகும்.

-இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைவாழ் மக்கள் அனை வரும் 63ஆவது தேசிய சுதந்திர தினத்தைபெருமதிப்புடன் நினைவுகூரும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்காகவும், விடுதலைக்காகவும் செய்யப்பட்ட எல்லையற்ற அர்ப்பணங்கள் இன்றைய சுதந்திர தினக் கொண்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## 63ஆவது சுதந்திர தின நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் இன்று

கொழும்பு, பெப். 04

இலங்கையின் 63ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இன்று கதிர்காமம்-கந்துசிறிந்துபுரயில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கான ஏற்பாடுகளை பொது நிர்வாக அமைச்சு மேற்கொண்டுள்ளது. சுதந்திரதின நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட உரையாற்றவுள்ளார்.

சுதந்திர தின நிகழ்வின்போது ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் முகமாக 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட உள்ளன. இதனையடுத்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையும், 1,500 இராணுவத்தினர், 300 விமானப் படையினர், கடற்படையினர், பொலிஸார் மற்றும் 250 சிவில் பாதுகாப்பு படையினர் கலந்துகொள்ளும் அணிவகுப்பு மரியாதையும் இடம்பெறும்.

சுதந்திரதின நிகழ்வுகளில் தென்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மாவட்டத்தில் வரலாறு காணாத மழை

வவுனியா, பெப்.4

வவுனியா மாவட்டத்தில் தொடரும் வரலாறு காணாத மழை காரணமாக அங்கு நூற்றுக்காணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் அவர்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குளங்கள், ஆறுகள் என்பன உடைப்பெடுக்கும் அபாயமும் தோன்றியுள்ளது.

கடந்த சில நாள்களாக தொடரும் மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 13 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் பாதிக்கப்புக்குள்ளாகி உள்ளனர். 747 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

வவுனியாவில் சின்னத்தம்பனை, கந்தசாமி நகர், தட்டாங்குளம் ஆகிய பகுதிகளுக்கான வெளித்தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகளிலும் பொது

(27 ஆம் பக்கம் பார்க்க)

## ஏ-9 போக்குவரத்துத் தடை கனந்தலாவ குளம் உடைந்தது

யாழ்ப்பாணம், பெப். 04

மதவாச்சிக்கும் அநுராதபுரத்துக்கும் இடையே றம்பவ என்ற இடத்தில் உள்ள கனந்தலாவ குளத்தின் அணைக்கட்டு நேற்றுப் பிற்பகல் உடைந்தது. இதனால் குளத்து நீர் ஏ-9 வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதால் அந்த வீதியூடான போக்குவரத்து நேற்று பிற்பகலில் இருந்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் இந்த அணைக்கட்டு நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் உடைந்தது. இதனால் ஏ-9 வீதியை மேவி சுமார் 10 அடி உயரத்துக்கு வெள்ள நீர் பாய்ந்தது. வெள்ளத்தில் சில வாகனங்கள் சிக்கித் தடம்புரண்டன. எனினும் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை.

இதனையடுத்து இப்பகுதி ஊடான போக்குவரத்து நேற்றுப் பிற்பகலில் இருந்து தடைப்பட்டுள்ளதாக மதவாச்

(28 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் பாதிக்கப்பட்டவர்கள் 134 முகாம்களில்

கொழும்பு, பெப். 4

நாட்டில் பல மாவட்டங்களிலும் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழையால் இதுவரை ஐந்துபேர் பலியாகியுள்ளனர். ஏழுபேர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்துக்கே அதிக பாதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்து நாள்களுக்கு மேலாக நீடிக்கும் அடைமழையால் 26ஆயிரத்து 586

(28 ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. தலைமையில் புனர்வாழ்வுக் கழகம் முழங்காவிலில் அதற்கு 100 ஏக்கர் நிலம்

கொழும்பு, பெப். 04

இலங்கையில் தடை செய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கே.பியின் தலைமையின் கீழ் மீண்டும் இலங்கையில் செயற்பட உள்ளது. இந்த அமைப்புக்குப் பூநகரி முழங்காவிலில் 100 ஏக்கர் நிலத்தை வழங்க அரசு தீர்மானித்துள்ளது என்று ஐ.தே.கட்சி எம்.பி தயாசிறி ஜயசேகர நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராக இப்போது அரபு நாடுகளில் மக்கள் போராட்டம் வெடித்துள்ளது. ஹெய்ட்டியில் 30

(28 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசின் கூற்றுக்கு தி.மு.க. கடும் கண்டனம்

சென்னை, பெப்.4

இந்திய மீனவர்கள் கடற்பரப்பில் சுட்டுக்கொல்லப்படுவதற்கு இலங்கைக் கடற்படையினர் காரணம் அல்ல என்ற இலங்கை அரசின் கூற்றைத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி தலைமையிலான தி.மு.க. பொதுக்குழு வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான மு.கருணாநிதி தலைமையில் தி.மு.க. பொதுக்குழு நேற்றுக்காலை கூடியது. இதன்போதே இந்தக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

(27 ஆம் பக்கம் பார்க்க)




உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021 2229933
தொலைநகல்: 021 2229944
செய்தி/பக்கங்கள்:
021 5679933
021 5679944
விளம்பரம்: 021 5671111
விநியோகம்: 021 5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# அம்பாறையில் வெள்ளத்தால் 2,759 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, பெப்.4

அம்பாறையில் 2ஆயிரத்து759 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து737 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 86 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

51 தற்காலிக முகாம்களில் 2ஆயிரத்து 749 குடும்பங்களைச் சேர்ந்த 10ஆயிரத்து 083 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை பெரியநீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான கிராமங்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கல்முனைக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் இடம்பெற வில்லை. ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்திருந்த போதிலும் மாணவர்கள் வருகை தராததால் பாடசாலை நடைபெறவில்லை.

அநேகமான பாடசாலைகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதேவேளை, வெள்ளம் அதிகரிக்க அதிகரிக்க இடம்பெயர்கின்ற மக்கள் பாடசாலையை நோக்கியே செல்கின்றனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.தௌபீக், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.அப்துல் ஜலீல், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எல்.ஏ. றசீக் வெள்ளம் ஏற்பட்டுள்ள பாடசாலைகளைச் சென்று பார்வையிட்டனர். திருக்கோவில் பிரதேச மக்களில் மொத்தமாக 639 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 558 பேர் 6 நலன்புரி நிலையங் களில் உள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள், பாண் என்பன அரச சார்பற்ற அமைப்புகளால் வழங்க ப்படும் வேளை யில், அரசினால் இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக் கின்றனர். இது போன்று பொத்துவில் பிரதேசத்தில் 950 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 440 பேர் 7 முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மாத்தளையில் 82 குடும்பங்களைச் சேர்ந்த 332 பேரும், பதுளையில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 404 பேரும் பாதிக்கப் பட்டுள்ளனர். ஒரு தற்காலிக முகாமில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 40 பேர் தங்கவைக் கப்பட்டுள்ளனர். மண்சரிவால் பெண்ணொருவர் பலியாகி உள்ளார்.

நுவரெலியாவில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 372 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு தற்காலிக முகாமில் 37 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கண்டியில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த பத்துப் பேரும், அநுராதபுரத்தில் 143 குடும்பங்களைச் சேர்ந்த 482 பேரும், பொலன்னறுவையில் 190 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஐந்து தற்காலிக முகாம்களில் 170 குடும்பங்களைச் சேர்ந்த 397 பேர் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் 13 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள் ளனர். 667 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 3 ஆயிரத்து 224 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (த-சி)




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் மழை பெய்வதற்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

## இலங்கை மீனவர்கள் 91 பேர் நேற்று விடுதலை

இந்தியக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 91 பேர் நேற்று புதன்கிழமை 17 படகுகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ் மீனவர் பிரச்சினைப்பற்றிப் பேசுவதற்காக இலங்கை வந்து இரண்டு நாள்களின் பின் இது நடந்துள்ளது என அதிகாரிகள் கூறினர்.

இந்த மீனவர்கள் கடந்த வருடமும் இந்த வருடமும் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் இந்திய கடலில் அத்துமீறி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் இன்னும் 9 மீனவர்களும் 4 படகுகளும் விடுவிக்கப் படவில்லை. (த-10)



மாளிகாவத்தை தொடர்மாடி வீடுகளுக்கு முன்னால் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த கட்டடங்கள் நேற்றுக்காலை நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் இடித்து அகற்றப்பட்டன.

## கொழும்புத் துறைமுகத்தில் வெடிவிபத்து

கொழும்பில் கப்பல் கட்டும் தளமொன்றில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் சிறிய காயங்களுக்குள்ளான 10 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பணியாளர்கள் கப்பலொன்றை திருத்தும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில், எரிவாயு தாங்கியொன்று வெடித்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்த 10 பேரும் ஆபத்தான கட்டத்தை தாண்டிவிட்டதாகவும் வைத்திய சாலை வட்டாரங்கள் குறிப்பிட்டன.

# ஆணையாளரின் அறிவுரைப் படியே அரச தரப்பின் வேட்புமனு நிராகரிப்பு

தேர்தல் ஆணையாளரின் அறிவுரைக்கு அமையவே யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பு மனுநிராகரிக்கப் பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியொன்றின் பெயரைக் குறிப்பிட்டு வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டமையினாலேயே அந்த வேட்பு மனுவைத் தேர்தல் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமையவே நிராகரிக்கப்பட்டது என்றார்.

இந்த விடயம் தொடர்பாக தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில், 10 ஆவது இடத்தில் ஆங்கிலத்தில் (United Peoples Freedom Alliance) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் தமிழில் 10 ஆவது இடத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ். தேர்தல் மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பு மனுவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எனத் தமிழில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் முதலில் தேர்தல் ஆணையாளரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட வேட்பு மனுவை நிராகரிக்குமாறு தேர்தல் ஆணையாளரே உத்தரவிட்டிருந்தார். அதே போன்றே யாழ். மாவட்டத்திலும் குறித்த வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது என்றார். (த-15)

## கட்டணம்செலுத்தும் திட்டம் ரத்து

மது அருந்திவிட்டு விபத்தில் சிக்குபவர்களிட மிருந்து அரச வைத்தியசாலைகளில் 2,000 ரூபா அறவிடும் திட்டம் வைத்தியர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படும் எனவும் பணம் அறவிடுவது வைத்திய நெறி முறைகளை மீறும் செயல் எனவும் வைத்தியர்கள் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டியதை அடுத்து சுகாதார அமைச்சு இத்திட்டத்தை இடைநிறுத்தியுள்ளது என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த-10)

# நிகழ்வுகள்

**பொதுக்கூட்டம்**

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். வணிகர் கழகத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.165 மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் இந்த வருடத்திற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு இடம் பெறவுள்ளதால் வர்த்தகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகத் தலைவர், செயலாளர் அறிவித்துள்ளனர். (ற)

**வாராந்த இசை நிகழ்வு**

வடமராட்சி, பெப்.04

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டு பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்று வரும் வாராந்த நிகழ்வான பக்திப் பாடல்கள் பக்கவாத்தியம் சகிதம் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ற-236)

**கலந்துரையாடல்**

யாழ்ப்பாணம், பெப்.04

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் ஏற்பாட்டில் நடத்தப்படும் கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்ட உத்தியோகத்தர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் தலைவர் இ. இராஜராம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் 2011 ஆம் ஆண்டுக்கான நடைமுறைப்படுத்தப்படவுள்ள கல்வி விஸ்தரிப்பு வேலைத் திட்டங்கள் பற்றி ஆராய்தல், இம் மாதம் நடை முறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் பற்றித் தீர்மானித்தல் போன்றன இடம் பெறும்.

இக் கலந்துரையாடலுக்கு வருகை தரும் அனைத்து கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்களும் 2011 ஆம் ஆண்டில் தங்கள் சங்கத்தில் நடைமுறைப்படுத்துவதற்கெனத் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் பிரதி ஒன்றினையும் எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-311)

# நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் ஒற்றுமையாகச் செயற்படுவோம்

## பிரதமர் ஜயரட்ன கூறுகிறார்



சந்தோஷமான, சௌபாக்கியம் மிக்க நாட்டைக் கட்டி எழுப்பும் முயற்சியில் நாம் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் நிதானமாகவும் ஈடுபடுவோம் என பிரதமர் தி.மு.ஜயரத்ன தெரிவித்தார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இடம்பெயர்ந்தோர் சகலரையும் மீளக் குடியேற்றுவதன் மூலம், அவர்களின் வீடுகளை மீண்டும் நிர்மாணிப்பதன் மூலம், அவர்களின் கிராமங்களைப் புனரமைப்பதன் மூலம், அவர்களது வாழ்க்கைத் தொழில்களை மீளக் கட்டியெழுப்புவதன் மூலம் அரசு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஸ்திரப்படுத்தியுள்ளது.

இந்த மாகாணங்களின் கீழ் கட்டுமான வசதிகளை மேம்படுத்தும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; இன்னும் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகளின் ஊடாக அந்த மாகாணங்களில் துரித பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தலாம்.

அயல்நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது தேசிய வருமானம் 8%என்ற வருடாந்த உயர் பொருளாதார வளர்ச்சி வேகத்தையும் 2,053 அமெரிக்க டொலர்களைக் கொண்ட தனிநபர் வருமானத்தையும் கொண்டிருப்பதை நாம் பெருமிதத்துடன் கூறிக்கொள்ள முடியும்.

மக்களின் கூட்டு முயற்சி, ஒற்றுமை, எதையும் தாங்கிக் கொள்ளும் தன்மை என்பவற்றின் மூலம் வெள்ளம், மண்சரிவு, கோடை போன்ற இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் தற்காலிக பின்னடைவுகளை எம்மால் இலகுவாக வெற்றி கொள்ள முடியும். எமது மக்களுக்கு துரித சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியைப் பெற்றுக்கொடுப்பதற்காகத் தற்போது நிலைநாட்டப்பட்டிருக்கும் சமாதானம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை மேலும் பலப்படுத்தல் வேண்டும் - என்றுள்ளது. (த-சி)

# யாழ். குடாவிலும் சீரற்ற காலநிலை

யாழ்ப்பாணம், பெப்.04

யாழ். குடாநாட்டில் அவசர கால நிலைமை நடைமுறைப் படுத்தப்படாத போதும் தொடர்ச்சியாக இங்கும் சீரற்ற காலநிலையே நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுதியுள்ளதாக அரச அதிபர் திருமதி மெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இலங்கை முழுவதும் சீரற்ற காலநிலையே தொடர்ச்சியாக இருக்கும். இடி முழக்கம் மற்றும் கடும் காற்றுடன் கூடிய கன மழை என்பன தொடர்ச்சியாக 24 மணி நேரத்துக்கு இருக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் கடல் கொந்தளிப்பாக இருக்குமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-15)

# யதார்த்தபூர்வமான சுதந்திர இலங்கை மலரவேண்டும்

## ரணில் வாழ்த்துச் செய்தி



கொழும்பு, பெப். 04

மீண்டும் யதார்த்தபூர்வமான சுதந்திர இலங்கையை மலரச் செய்வதே மக்களின் பிரார்த்தனையாகும். சுதந்திரமாக சிந்திக்கக்கூடிய, பேசக்கூடிய, சுதந்திரமாக வாழக் கூடிய நாடு ஏழ்மையிலிருந்தும் தொழில் வாய்ப்பில்லாத நிலையிலிருந்தும் மீளவேண்டும். இங்குள்ள பொருளாதார அபிவிருத்தியின் பயன் மக்களுக்குக் கிடைக்க இந் நாட்டுக்காக இச் சுதந்திர தினத்தில் பிரார்த்திப்போம்.

-இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தது டி.எஸ். சேன நாயக தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

ஜனநாயக சுதந்திரம் பெற்றுக் கொடுத்த வழி மற்றும் சுதந்திரத்தின் பின்னர் நாடு வழி நடத்திச் செல்லப்படும் திசை தொடர் பாக தெளிவுபடுத்தும் எமது கட்சியின் முதலாவது கொள்கைப் பிரகடனத்தில் ஐந்து வகை சுதந்திரங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஜனநாயக ஆட்சியின் கீழ் மக்களுக்கு வாழும் சுதந்திரம், தொழில்பெறும் சுதந்திரம், அறியாமையிலிருந்து சுதந்திரம் மற்றும் நோயிலிருந்து விடுபடும் சுதந்திரம் ஆகியவையே ஐந்து வகை சுதந்திரங்களாகும்.

சுதந்திரம் பெற்று 63 வருடங்களின் பின்னர் இந்த ஐந்து வகை சுதந்திரங்களையும் எவ்வளவு தூரம் எம்மால் நிறைவேற்றிக் கொண்டுள்ளோம் என்பதை ஆழமாக ஆராய்ந்து பார்ப்பதற்கு இது உகந்த நேரமாகும்.

நாட்டின் அனைத்து மக்களுகளுக்குமிருந்த ஜனநாயக உரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் ஒடுக்கப்பட்டு, ஏகாதிபத்தியம் தலைதூக்கியுள்ளது. நாட்டின் நிர்வாகம் மிக மோசமான நிலைக்குத் தலைவிரித்தாடுகின்றது. எந்தத் துறையிலும் பயனுள்ள அபிவிருத்தி ஏற்படாததால் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்துள்ளது.

எனவே, யதார்த்தமாக சுதந்திரக் காற்றை மக்கள் சுவாசித்து வ்ளமாக வாழ பிரார்த்திப்போம் - இவ்வாறு அச் செய்தியில் கூறப் பட்டுள்ளது. (த-சி)

# யாழ்ப்பாணத்திலும் இன்று சுதந்திர தின நிகழ்வுகள்

இலங்கையின் 63ஆவது சுதந்திர தினம் யாழ். மாவட்ட செயலகம் உட்பட சகல அரச திணைக்களங்களிலும் இன்று வெள்ளிக் கிழமை கொண்டாடப்படவுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இன்ற காலை 8.30 சகல அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடியை அலுவலகத் தலைவர்கள் ஏற்றி வைப்பார்கள் எனவும், அதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டுமெனவும் பொதுநிர்வாக உள்நாட்டு அலுவலகள் அமைச்சு அறிவுறுத்தியுள்ள தாகத் தெரிவித்தார்.

சுதந்திர தினத்துக்காக சகல அரச அலுவலகங்களையும் அலங்கரிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் சுந்திரதின நிகழ்வில் வடமாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (த-9-15)



தமிழ் அறிஞரும் கிளிநொச்சி, ஊர்காவற்றுறை தொகுதிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பண்டிதர் க.பொ.இரத்தினத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அஞ்சலி நிகழ்வும் நேற்றுமுன்தினம் வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன. நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நினைவுரை ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படத்தில் காணலாம்.

# திருகோணமலைக்கான போக்குவரத்து ஸ்தம்பிதம்

திருகோணமலை மாவட்டத்துக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையிலான தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

திருமலை - கண்டி 96ஆவது, 97ஆவது மைல்கல் பால வீதிகளிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குப் பயணம் செய்ய முடியாத அளவு வெள்ளநீர் பாய்கிறது. பாலத்தின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது. இந்நிலையில் திருகோணமலைக்கான போக்குவரத்தும் முள்ளிப்பொத்தானை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் வெள்ளப்பெருக்கால் படுவான்கரை - எழுவான்கரைக்கும் இடையிலான பட்டிருப்பு வீதியூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

வெல்லாவெளி - மண்டூர் வீதி, வெல்லாவெளி - வக்கியெல்லை வீதி நீரில் மூழ்கியுள்ளது. இதனால் போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குமரன் சொலமன் வீதி, சரஸ்வதி வித்தியாலய வீதி, 9ஆம் வட்டார தேவாலய வீதி ஆகியன நீரில் மூழ்கியுள்ளன.

மலையகத்தில் கண்டி - நுவரெலியா வீதியுடனான போக்குவரத்து மண்சரிவு காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் அங்கு பனி மூட்டம் காணப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது.

### படையினர் படகுச் சேவை

வெள்ள அனர்த்தங்களில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்கும் பணிகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் இலங்கைத்துறை முகத்துவாரம், முற்றுச்சேனை, ஈச்சிலம்பற்று சந்தி, வட்டவான், மாவடிச்சேனை, பூநகரி ஆகிய பகுதிகளில் படகுச் சேவைகள் நடைபெறுகின்றன. அங்குள்ள மக்கள் படகுகள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் ஆணைகட்டிய வழி, வேத்துச்சேனை, நாதனாவெளி, சின்னவத்தை ஆகிய பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இங்குள்ள மக்களை படகுகள் மூலம் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் மேற்கொண்டு வருகிறார்.

# திருக்கோவிலில் 2மீனவர் பலி

கொழும்பு, பெப். 4

திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த இரு குடும்பஸ்தர்கள் நேற்றுக் காலை 6 மணி அளவில் வள்ளம் புரண்டதில் பலியாகி உள்ளனர் என திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.பி.சமிந்த எதிரி சூரிய தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக கடல் மோசமான நிலையில் இருந்தது. இதனை அடுத்து திருக்கோவில் பிரதேசத்தில் ஒலிபெருக்கி மூலம் கடற்றொழில் செய்கின்ற மீனவர்களுக்குக் கடலுக்குப் போகவேண்டாம் என பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள், பொலிஸார் ஆகியோர் அறிவித்தல் விடுத்தனர்.

அதை மீறி நேற்றுக்காலை 6 மணி அளவில் மீன்பிடிக்கச் சென்ற சின்னத்தம்பி தணிகாசலம் (வயது - 58), பாலகிருஷ்ணன் நாகராஜா (வயது - 51) ஆகியோர் வள்ளம் புரண்டதில் பலியாகினர். இருவரில் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள் ளது.

மக்களின் நலன்கருதி அறிவித்தல்கள் பொலிஸாரால் வழங்கப்படும்போது அதன்படி மக்கள் நடந்து கொள்ள வேண்டும் எனத் தான் கேட்டுக் கொள்கிறார் என ஈ.பி. சமிந்த எதிரிசூரிய தெரிவித்தார்.

(த-சி)

# மீனவர் படுகொலையை எத்தனை காலம் தான் பேடித்தனமாக வேடிக்கை பார்க்கும் இந்தியா

## சீற்றத்துடன் வேடிக்கை பார்க்கும் இந்தியா

வன விலங்கின் உயிர் மீது கூட அதிக அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் இந்திய அரசு, எல்லை பிடிபடாத கடல் பிரதேசத்தில் மீனவர்களின் உயிர்கள் தொடர்ந்து பறிக்கப்படுவதை 'இருநாட்டு நல்லுறவு' என்ற பெயரால் இன்னும் எத்தனை காலம் பேடித்தனமாக வேடிக்கை பார்க்குமாம்? என்று கேள்வி எழுப்பி உள்ளது தமிழ் நாட்டில் இருந்து வெளியாகும் 'ஆனந்த விகடன்' பத்திரிகை.

அதனது தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ள விடயத்தின் முழு விவரம் வருமாறு:-

''இனி ஒருவரையும் சாக விட மாட்டோம்... தமிழக மீனவர்கள் கொலையைத் தடுக்க, இலங்கையுடன் புதிய ஒப்பந்தம் போடுவோம்'' என்று கொழும்பு செல்லும் வழியில் இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் நிருபமா ராவ் கூறிவிட்டுச் சென்றார்.

இலங்கைக் கடற்படையின் அராஜகத் தாக்குதலில் 500 ஆவது மீனவர் சாகட்டும் என்று காத்திருந்து, அதைக் கொண்டாடவா? இந்தப் பயணமும் அறிவிப்பும். ஒருவரையும் சாக விடாத அளவுக்கு ஓர் ஒப்பந்தத்தைப் போட முடியும் என்பது உண்மையானால், ஏன் இத்தனை தாமதம்?

இலங்கை - இந்திய அரசுகளுக்கு மத்தியில் நிலவி வரும் விநோதமான நட்பு உணர்வு, சாமானியர்கள் தொடங்கி தலைவர்கள் வரையில் எத்தனையோ உயிர்களுக்குச் சமாதி கட்டியிருக்கிறது. உலகமே கொதித்துக் கண்டித்தபோதும், துளிகூட அலட்டிக்கொள்ளாமல், தோளில் கை போட்டுக் கொண்டு பொருத்தமான பொய்களைச் சொல்லிச் சமாளிப்பதில் இந்த இரு அரசுகளின் ஒற்றுமை உணர்வுக்கு ஈடு இணையே கிடையாது.

இறந்த மீனவரின் குடும்பத்துக்கு நிவாரணத் தொகை, அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு அரச வேலை என்பதுதான் எப்போதும் நிறைவேற்றப்படும் சடங்கு சம்பிரதாயம். இப்போது தேர்தல் நெருக்கம் என்பதால், வீடு தேடிச் சென்று ஆறுதல் சொல்வதும், 'மீனவ சமுதாயத் தலைவர் சிங்காரவேலரின் 151 ஆவது பிறந்த நாள் விழாவை அரசே கொண்டாடும் என்று அறிவிப்புச் செய்வதுமாக, சற்றே சிறப்புக் காட்சிகள் கொண்ட அரசியல் நாடகங்கள் அரங்கேறுகின்றன!

தனியார் நிலத்தில் மேய வரும் காட்டு விலங்குகள், மின் வேலியால் தாக்குண்டு இறந்து போனால், நிலத்தின் உரிமையாளரைக் கைது செய்து, நீதியின் முன் நிறுத்துகிறது அரசு.

வன விலங்கின் உயிர் மீதே இத்தனை அக்கறை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் நம் அரசு, எல்லை பிடிபடாத கடல் பிரதேசத்தில் மீனவனின் உயிர்கள் தொடர்ந்து பறிக்கப்படுவதை 'இருநாட்டு நல்லுறவு' என்ற பெயரால் இன்னும் எத்தனை காலம் பேடித்தனமாக வேடிக்கை பார்க்குமாம்?

# இராணுவ நீதிமன்றம் பற்றிய தீர்ப்பை மீள் பரிசீலனை செய்யக் கோரிக்கை

## பிரதம நீதியரசருக்கு சட்டத்தரணிகள் மனு

கொழும்பு, பெப்.3

இராணுவ நீதிமன்றம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய விளக்கத் தீர்ப்பு தொடர்பாக மீள் பரிசீலனை செய்வதற்கு உயர் நீதி மன்றத்தின் முழு அளவிலான ஆயம் ஒன்றை நியமிக்கும்படி கொழும்பு ஹல்ஸ்ட்ரொப் சட்டத்தரணிகள் பிரதம நீதியரசருக்கு கோரிக்கையொன்றை விடுக்கவுள்ளார்கள்.

இந்தக் கோரிக்கையடங்கிய மனு ஒன்றில் அந்த வழக்கறிஞர்கள் நேற்றுமுன்தினம் கையொப்பம் இடுவதில் ஈடுபட்டிருந்தனர்.

நீதித்துறையின் சுயாதீனத்தைக் காப்பாற்றவும் சட்ட ஆட்சியை நிலை நிறுத்தவும் தாங்கள் இந்த நடவடிக்கையில் இறங்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இந்தவிதமான உயர் நீதிமன்றத்தின் விளக்கமானது அரசமைப்பு அபிவிருத்திக்கு மிகவும் தூர விலகியிருப்பதாவும் அரசியல் நோக்கம் கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இவ்விதமான விளக்கமானது சட்டத்துறையின் மீது உள்ள நம்பிக்கையையும் அதன் சுயாதீனத்தையும் நிலைநாட்டமுடியாத ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

உயர் நீதிமன்ற தீர்ப்பினை மதிக்கும் அதே வேளை அதனை மீள்பரிசீலனை செய்யுமாறு பிரதம நீதியரசரை அவர்கள் கோரியுள்ளனர். நீதித்துறையின் சுயாதீனமானது மக்கள் இறைமையின் ஒரு பகுதியாகும். எனவே அந்த இறைமையை இராணுவ நீதிமன்றம் ஒன்றிடம் கையளிப்பது செல்லுபடியாக மாட்டாது. எனவே உயர் நீதிமன்றத்தின் விளக்கமானது இராணுவ நீதிமன்றம் ஒன்று தலையீடு செய்வதற்கு வழிவகுப்பதாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

## திறந்த பல்கலை மாணவருக்கு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா (2010/2011) ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி நெறிக் கலந்துரையாடல் வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ளது.

யாழ். பிராந்திய நிலையத்தில் பிற் பகல் 2 மணிக்கு நடைபெறும் இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர் களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

## சைக்கிள் 'தகடு'

வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம் உப அலுவலகத்தினர் சைக்கிள்களுக்குரிய இவ்வாண்டுக்கான தகடுகளை வழங்கி வருகின்றனர். (ஒ-28)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2196 திகதி 02-02-2011
ஆங்கில எழுத்திற்கும் V
வெற்றி எண்கள்
15 23 55 69
போனஸ் இல:
65
ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 187250 | 20/- | 3,745,000/- |
| 2 இல | 13301 | 100/- | 1,330,100/- |
| 3 இல | 289 | 1,000/- | 289,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7545 | 40/- | 301,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 547 | 1,000/- | 547,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 08 | 10,000/- | 800,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,000,000/- | - |
| 1 இல + போனஸ் இல | 8913 | 100/- | 891,300/- |
| 2 இல + போனஸ் இல | 421 | 500/- | 210,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 317 | 200/- | 63,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,776,100/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 218618 | | 10,376,100/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 202788755-9-05 |
| புத்தளம் | 202775709-2-12 |
| கேகாலை | 202780125-9-11 |
| கம்பஹா | 202778554-7-07 |
| கண்டி | 202778711-8-49 |
| குருநாகல் | 202774722-4-47 |
| அம்பாறை | 202780873-5-44 |
| மட்டக்களப்பு | 202798363-2-39 |
| மாத்தறை | 202777036-7-12 |
| காலி | 202784253-7-31 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.10,510,825/-
பச்சை நிற டிக்கட்டுகள் 2011 பெப்ரவரி 05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

## மருதங்கேணி வைத்தியசாலைக்கு நிதியுதவி

பருத்தித்துறை, பெப்.4

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி, மாவட்ட வைத்தியசாலை விடுதிகளைப் புனரமைப்பதற்காக 24.1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் இவ்வைத்தியசாலை புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு "நிக்கோட்" திட்டத்தின் கீழ் இந்த வைத்தியசாலையின் பிரவசவிடுதி, ஆண்கள், பெண்கள் விடுதி என்பனவும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது.

பின்னர் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இவ்வைத்தியசாலை முற்றாக சேதமடைந்த நிலையில் தற்போது மீளத் திருத்தியமைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (10-190)

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னலட்சுமி ஏரம்பமூர்த்தி

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி ஏரம்பமூர்த்தி நேற்று (03.02.2011) மு.ப.10.30 மணியளவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-தங்கம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை- இராசம்மா தம்பதியரின் மூத்தமருமகளும் காலஞ்சென்றவர்களான திருமதி சின்னத்தங்கம், செல்லத்துரை மனோன்மணி, சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் அருமை சகோதரியும் செல்வராணி காலஞ்சென்ற நாகேஸ்வரன் மற்றும் தவனேஸ்வரன் (கனடா), யோகராணி (அவுஸ்திரேலியா), இந்திராணி (கனடா), திலகராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், நவீனராஜா, நந்தினி, கமலாம்பிகை, மோகனராஜா ஜெயக்குமாரன், தினகரன் ஆகியோரின் அன்பு மாமியும் நயனி (கனடா), ஜனனி (இந்தியா), கயீவன் (கனடா), சுஜீவன் (இந்தியா), சுபோதினி (அவுஸ்திரேலியா), ஆரணி (கனடா), மனோஜன் (அவுஸ்திரேலியா), வினோஜன் (அவுஸ்திரேலியா), வித்தியா (கனடா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், சிவான் (கனடா), கட்சனா (இந்தியா), ஸ்கந்தா (அவுஸ்திரே லியா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சங் கரத்தை வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
நவீனராஜா (மருமகன்).

முருகன் கோயில் வீதி,
சங்கரத்தை.

உதயன்

# 63 ஆவது சுதந்திர தினம் புதிய சிந்தனைக்கு வழி வகுக்குமா?

இலங்கை நாடு இன்றைய தினம் அதன் 63ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்றது.

நாட்டு மக்கள்-சிங்களவர், தமிழர்,இஸ்லாமியர் மற்றும் பறங்கியர் என பல மொழிகள், பல சமயங்கள், பல கலாசார விழுமியங்களை அனுசரிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பெற்றுக் கொண்டது இந்த நாட்டின் சுதந்திரம். 63ஆண்டுகளுக்கு முன் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை இலங்கையரிடம் ஒப்புவித்துவிட்டு ஒதுங்கிக் கொண்ட அன்றைய நாள்களில் இந்த மக்கள் அனைவரும் தமக்கு ஒரு நல்ல எதிர்காலம் மலரப் போகின்றது, அவரவர் தம்தம் தனித்துவங்களைப் பேணிக்கொண்டு சமாதானமானதொரு சக வாழ்வினைக் மேற்கொள்ளலாம் என்று தான் நம்பினார்கள்.

அந்த வகையில் மக்கள் ஆட்சி மலர்வதற்காக ஏனைய நாடுகளில் போன்று இங்கேயும் தோற்றுவிக்கப்பட்டிருந்த அரசியல் கட்சிகள் சகல மக்களையும் ஒன்றிணைப்பதற்குப் பதிலாக இன ரீதியிலும் மொழி ரீதியிலும் சமய ரீதியிலும் சிந்திக்கத் தலைப்பட்டு சகவாழ்வுத் தன்மை சிதறிப் போகக் காரணமாகி விட்டன. பெயரளவில் ஒற்றுமை, ஐக்கியம் என்று கூறிக் கொண்ட கட்சிகள் பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வருவதற்காக பேரினவாதக் கட்சிகளாக மாறின. சமத்துவம், சமதர்மம் பற்றி பேசியவர்களும்கூட இந்த பேரினவாத அரசியல் சூறாவளிக்குள் அடித்துச் செல்லப்பட்டு விட்டனர்.

இந்த நிலைமையில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டில் தமக்கு உரிய பங்கினை- உரிமையைக் கேட்கத் தொடங்கினார்கள். அவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதால் உண்ணாவிரதங்கள், ஆர்ப்பாட்டங்கள், நெடும் பயணங்கள், சத்தியாக்கிரகங்கள் என சாத்வீகப் போராட்டங்களை அவர்கள் நடத்த தலைப்பட்டனார்.

சாத்வீகப் போராட்டங்கள் நடத்திய நிராயுத பாணிகளான மக்களை அதிகாரத்திலிருந்தவர்கள் ஆயுதப் படைகளையும், காவல் துறையினரையும் கொண்டு அடித்து, உதைத்து, துப்பாக்கியால் சுட்டு கண்மூடித்தனமான அடக்கு முறைகளைப் பயன்படுத்தி ஒடுக்கிவிட முனைந்தார்கள்.

அதோடு நிற்கவில்லை. நாடு முழுவதிலும் தமிழ் மக்கள் பேரினவாதிகளால் பெருங்கொடுமைகளுக்குட்படுத்தப்பட்டனர். ஒரு தடவையல்ல, பல தடவைகள் இவ்வாறு நடந்தது. இதன் விளைவாகவே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் முளைத்தது.

இதற்கிடையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முடிவுகட்டவும், அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் என பல கட்சிகள், பல தலைவர்கள் தமிழ் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களும் கிழித்தெறியப்பட்டன.

கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்டுவிட்ட இன்னல்களை இங்கு நாம் விரிவாக ஆராய்வதற்கு முற்படப் போவதில்லை. அவையெல்லாம் பழசாய், பழங்கதையாய்ப் போய்விட்டன.

இவ்வளவும் நடந்து முடிந்ததின் பின்னரும் தமிழர் பிரச்சினை ஏதோ கடந்த 30 ஆண்டு கால சரித்திரம் போன்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் பேசி வருகிறார்கள். ஆயுதம் தூக்கிப் போராடிய அமைப்பு ஒழிக்கப்பட்டு விட்டாலும் 60வருடங்களுக்கு மேலான இனப்பிரச்சினைக்கு அதனால் முடிவு ஏற்பட்டு விட்டது என்று சொல்ல முடியுமா?

உண்மையில் தென்னிலங்கை தலைவர்களும் அரசியல் வாதிகளும், கட்சிகளும் மனமார இந்த நாட்டில் அமைதி திரும்ப வேண்டும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும், இனங்களுக்கிடையில் சௌஜன்யம் நிலவ வேண்டும் எனக் கருதுவார்களானால் மிக எளிதாக அதற்குத் தீர்வு கண்டுவிடலாம்.

கடந்த காலங்களில் அமரர் டி.எஸ்.சேனநாயக்க முதல் சமீபகாலத்தில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வரையில் தமிழர் தரப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தியிருக்கிறார்கள். இவர்களில் சிலர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் எல்லாம் அம்போ என்று ஆகிவிட்ட நிலையில் இப்பொழுது இந்தியாவின் நிர்பந்தத்தின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தரப்பில் தமிழர்களுடனான இரு தரப்பு பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. .

இதிலாவது ஒரு பகுதி தீர்வு காணப்படுமானால் அரசாங்கத்தில் இணைந்துள்ள ஏனைய கட்சிகள், எதிர்த் தரப்பிலுள்ள ஐ.தே.கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்றவை அதனை ஏற்றுக் கொள்ளுமா என்று சொல்ல முடியாது.

தீர்வுத்திட்டம் ஒன்று ஏற்பட்டாலும் கூட அதனையே அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்காக எதிர்கட்சிகள் தமது பகடைக் காயாகப் பயன்படுத்திக் கொள்ளும்.தமிழருக்கு பிரச்சினையொன்றும் இல்லை, தீர்வுத் திட்டம் ஒன்றும் அவர்களுக்குத் தேவையில்லை என்ற வகையில் எல்லாம் சில எதிர்க்கட்சித் தலைவர்கள் அண்மைக் காலத்தில் கூறியிருக்கிறார்கள்.

எனவேதான் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நிலைத்து நிற்கக் கூடியதான- நாட்டில் நிரந்தர இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான ஒரு தீர்வுத் திட்டத்தினை வழங்குவதற்கு தென்னிலங்கைக் கட்சிகளும் தலைவர்களும் மனதார விரும்பினால் இது பற்றி அவர்களுக்குள் ஓர் இணக்கப்பாடு- ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும். அதன் மீது தமிழர் தரப்புடன் பேச வேண்டும் -என்று கூறுகின்றோம்.

63ஆவது சுதந்திர தினம் கதிர்காமத்தில் கொண்டாடப்படுவது இந்த நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு நல்ல அறிகுறியாக அமையும் என்று எதிர்பார்ப்போம்.

# யாழ். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரிக்கை

### ஜனாதிபதிக்கு பகிரங்கக் கடிதம்

கொழும்பு, பெப் . 04

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள வெள்ளிக்கிழமை அமைப்பு, மக்களின் பாதுகாப்பையும் மனிதஉரிமைகளையும் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக இந்த அமைப்பின் சார்பில் அரச சமாதான செயலக முன்னாள் பணிப்பாளரும், மூத்த இராஜதந்திரியுமான ஜெயந்த தனபால பகிரங்கக் கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு எழுதியுள்ளார். அந்தப் பகிரங்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வெள்ளிக்கிழமை அமைப்பு, சமூக, பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்த அரசுக்கு எப்படி உதவலாம் என்பது பற்றியும், நல்லாட்சியை உறுதிப்படுத்தவும், தேசியப் பிரச்சினையை தீர்ப்பது பற்றியும் தொடர்ச்சியாக சந்தித்துக் கலந்துரையாடி வருகிறது.யாழ்ப்பாணத்தில் கொலைகள், ஆள்கடத்தல்கள் போன்ற அதிகரித்து வரும் வன்முறைகள் தொடர்பாகக் கிடைக்கும் தகவல்களையிட்டு நாம் ஆழ்ந்த அதிர்ச்சியடைந்துள்ளோம்.

இந்தப் பகுதிகளில் ஆயுதப்படையினர் வலுவாக நிலை கொண்டுள்ள சூழலில்தான் இந்தச் சம்பவங்கள் நடந்தேறுகின்றன என்பது முக்கியமானது. இவை அனைத்தும் தனிப்பட்ட ரீதியானவை அல்ல. இன்று நாடு எதிர்கொள்கின்ற முக்கிய சவால் சமாதானத்தை வெற்றி கொள்வதாகும். இந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் நீண்ட காலமாக ஆயுதப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள். அரசு அவர்களின் பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யத் தவறினால், போருக்குப் பிந்திய சமூக மாற்றங்கள், அபிவிருத்தி, அமைதி ஆகியவற்றைப் பாதிக்கும் வகையில் அமைந்துவிடும். இந்த விடயத்தில் கவனம் செலுத்துவீர்கள் என்று நம்புகிறோம்.- என்றுள்ளது. (ம)

# சுதந்திர தினத்துக்கு வாழ்த்து தெரிவித்தது அமெரிக்கா

இலங்கை இன்று சுதந்திர தினத்தை கொண்டாடவுள்ளநிலையில், அமெரிக்கா இலங்கைக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலரி கிளின்ரன் இது தொடர்பில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

ஜனநாயகமான ஆட்சித் தொடர்பில், அமெரிக்காவும் இலங்கையும் புரிந்துணர்வுடன் கூடிய உறவினையும், பொறுப்புப்பகிர்வினையும் கொண்டிருப்பதாக அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் யுத்த நிறைவைத் தொடர்ந்து இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதன் ஊடாக, இந்த உறவினைத் தொடர்ந்தும் பேண முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இந்த உதவிகள் சமாதானம், சுபீட்சம், நீதி மற்றும் ஜனநாயகம் என்பன இலங்கையின் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் அமையும் என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் கடந்த 2009 ஆம் ஆண்டு விரிசல் ஏற்பட்டிருந்தமையை ஏ.எப்.பி இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம)


# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதியுதவி

இலங்கைக்கு 216.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதாக சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது. யுத்தத்தின் பின்னர் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக வழங்கப்படவுள்ள 2.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியில் கடந்த 18 மாதங்களில் வழங்கப்படும் புதிய நிதி உதவி இதுவாகும்.

யுத்தத்தின் பின் இதுவரை மொத்தமாக 1.5 பில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி உதவி மூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளன. பெரும் பொருளாதார அபிவிருத்திகள் சாதகமான முறையில் தொடர்கின்றன என சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் நவோயுகி ஷினாஹாரா தெரிவித்துள்ளார். (ம)

# முக்திக்கு வழி பக்தி

ஈரமுள்ள நெஞ்சமே கடவுளின் இல்லம் உலகெங்கும் வியாபித்துக்கிடக்கும் மதங்கள் எத்தனையோ இருந்த போதிலும், இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதையும் அவன் அறத்தின் வடிவிலேயே உள்ளான் என்பதையும் மிகமிக நுட்பமாக அறிவு பெற்றவர்களே புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீதி நூல்களிலன்றி வேறெங்கும் காணமுடியாது.




தர்மத்தையே பெரு வாழ்வாகக் கொண்ட நீதிநூல்கள் மதங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காது தர்மதத்தையும் மானிட வாழ்வின் பொதுப்படையான தேவைகளையும் வலியுறுத்தி நிற்கின்றன.

அதில் திருமந்திரம் கூறும் தர்மத்தை நோக்குவோம்.

கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன் நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம் படுவது செய்யின் பசுவது வாமே

மனிதன் கெட்டழிந்து போவதும் நன்றெய்தி வாழ்வதும் அழியாத புகழுடைய இறைவனின் செயலாகும்.

அவன் நீதியற்ற செயல்களைச் செய்பவரை விரும்பமாட்டார். நல்வர்க்கு ஒன்றைக் கொடுப்பது வறியவர்க்கு ஈவதுமாகிய அறத்தை நினைப்பீர்களாக.

அதுவே அழியாத இன்பமாகிய வீடுபேறு காண வழியாகும்.

இதனாலேயே ஈரமுள்ள நெஞ்சமே கடவுளின் இல்லம் என்று சொல்லப்படுகின்றது.

(நன்றி:-ஞானச்சுடர்)

# தேசிய வீடமைப்புக் கடன் திட்டம் இனி தனியார் துறையினருக்கும்

யாழ்ப்பாணம்,பெப்.4

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீடமைப்புக் கடன் இனிமேல் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது. இதற்கான பணிப்புரை வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸவினால் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எஸ். நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அரச ஊழியர்களுக்கு வீடமைப்புக் கடனாக 3 லட்சம் ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற மாவட்ட முகாமையாளர்களுடனான கலந்துரையாடலில் வீடமைப்பு அமைச்சர் தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் இத்தகைய கடனை வழங்குவதற்கு அனுமதியினை வழங்கியுள்ளார்.

அத்துடன் இது வரை காலமும் 3 லட்சம் ரூபாவாக இருந்த கடன் தொகை 5 லட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடனைப் பெற விரும்புகின்ற அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் தத்தமது பிரதேச செலயத்தில் உள்ள தொழில் நுட்ப உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (ஐ-9)

# திருமலையிலிருந்து முற்றாக வெளியேறின அலுவலகங்கள்

யாழ்ப்பாணம், பெப்.4

வடக்கு மாகாண சபை அலுவலர்கள், திணைக்களங்கள், அமைச்சுக்கள் என அனைத்தும் திருகோணமலை வரோதய நகரில் இருந்து முற்றாக வெளியேறி யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தனித்தனியாகப் பிரிந்த பின்னர் வடக்கு மாகாணத்துக்கான அரச செயலகங்கள் திருகோணமலை வரோதய நகரில் உள்ள ஏ.பி.சி கட்டடத்தில் இயங்கிவந்தன.

தற்போது அனைத்துச் செயலகங்களும் ஆளுநரின் பணிப்பின் பேரில் குடாநாட்டின் பல்வேறு கட்டடத் தொகுதிகளிலும் சேவைகளை ஆரம்பித்துள்ளன.

ஆனால் புதிய இடத்தில் சேவை ஆரம்பிக்கப்பட்ட திணைக்களங்கள் அமைச்சின் விலாசம், தொலைபேசி இலக்கங்களை சம்பந்தப்பட்ட செயலாளர்கள் வெளியிடவேண்டும் எனவும் அரச அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சபை அலுவலகங்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல்வரோதய நகரில் உள்ள ஏ.பி.சி கட்டடத்தில் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-302)

# யாழ்.முற்றவெளியில் தேங்கியுள்ள பொலிதீன்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.முற்றவெளிப் பகுதியில் பொலிதீன் பைகள் அதிகளவில் தேங்கிக் கிடப்பதால் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாகத் தனியார் பஸ் தரிப்பிடத்துக்கு அருகிலுள்ள கொள்கலனில் கொட்டப்பட்ட கழிவுப் பொருள்களில் உள்ள பொலிதீன்களே காற்றினால் வீசப்பட்டு நாலாபக்கமும் அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் பொலிதீன் பாவனைக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகராட்சிமன்றம் அறிவித்தல் விடுத்தும் கூட பொலிதீன்களே அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொள்கலத்தில் கொட்டப்படும் இந்தக்கழிவுப் பொருள்களை பொலிதீனுடன் சேர்த்து கால்நடைகள் உண்டுவருவதாகவும் இந்தப் பொலிதீன்களை உண்ட கால்நடைகள் சில நோய்களுக்கு இலக்காவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-26)

## புதிய கலாசாரம்...



அபிவிருத்தி: வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைக்குட்பட்ட சத்திய காட்டு சந்தைப் பிரதேசத்தில் 100 மரம் நடும் பணி அண்மையில் பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி மங்கள விளக்கேற்றுகின்றார். (302)

# மணமகன் 35 லட்சத்துடன் தலைமறைவு

யாழ்ப்பாணம்,பெப்.4

லண்டனிலிருந்து வந்த இளம் பெண்ணைத்திருமணம் செய்து கொண்ட வாலிபன் மறுநாள் அதிகாலை 35 லட்சம் ரூபா பணத்துடன் தலைமறைவாகிய சம்பவமொன்று பண்டத்தரிப்பு, பிரான்பற்று பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பகுதியைச்சேர்ந்த பெண் ஒருவர் நீண்ட காலம் லண்டனில் தொழில் புரிந்து விட்டு அண்மையில் இங்கு வந்தார். கடந்த வாரம் மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞனுக்கும் இந்தப் பெண்ணுக்கும் திருமணம் நடந்தேறியது.

அன்றிரவு அங்கு தங்கிய இளைஞன் மறுநாள் அதிகாலை அவருக்கு சீதனமாக வழங்கப்பட்ட 35 லட்சம் ரூபா பணத்துடன் தலைமறைவாகியுள்ளார்.

தற்போது இவரைத் தேடி பெண்ணின் உறவினர்கள் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-100)

# நெல் அறுவடை இயந்திரங்களை கொள்வனவு செய்வதில் ஆர்வம்

நாவற்குழி,பெப்.4

குடாநாட்டு வயல்களில் நெல் அறுவடை செய்யும் காலப்பகுதி நெருங்கி வருவதைத் தொடர்ந்து அறுவடை, சூடடிக்கும் தன்மையுள்ள இயந்திரங்களின் கொள்வனவில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

தென்பகுதி வர்த்தகர்கள் யாழ் நகருக்கு இவற்றை எடுத்து வந்து விற்பனை செய்வதைக் காணமுடிகின்றது.

வயல் அறுவடைக்கு ஒரே நேரத்தில் பெருமளவு தொழிலாளர் தேவைப்படுவதால், சிரமத்தைத் தவிர்க்க இந்த இயந்திரங்கள் உதவுமெனக் கூறுகின்றனர்.

இதேவேளை மழையுடன் கூடிய காலநிலையால் நன்கு முற்றிய நெற்கதிர்கள் பாதிக்கப்பட்டு தாம் நஷ்டமடைய வேண்டிய நிலை தோன்றலாமென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஐ-121)

# தெற்கு வெள்ளம் காரணமாக குடநாட்டில் ந.எண்ணெய் விலை உயர்வு

நவாலி,பெப்.4

குடாநாட்டில் நல்லெண்ணையின் விலை கடந்த முதலாம் திகதி முதல் 380 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்டுள்ள தொடர் மழை காரணமாக தென்பகுதியிலிருந்து எடுதுவரப்படும் எள்ளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக இங்கு எள்ளைக் கையிருப்பில் வைத்திப்போர் அதன் விலையை அதிகரித்துள்ளனர். இதனால் நல்லெண்ணை வடிப்போர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக நீண்ட காலமாக 350 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நல்லெண்ணையின் விலை தற்போது 380 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆனைக்கோட்டையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எண்ணெய் விற்பனை செய்யப்படுவதுடன் பிரபல எண்ணெய்க் கடைகளும் இங்கு மூடப்பட்டிருப்பதையும் காணமுடிகின்றது. (ஐ-100)

# கோயில் குடியிருப்பில் விழிப்புக்குழு

தென்மராட்சி, பெப்.4

தென்மராட்சி பிரதேசத்தின் கோயிற்குடியிருப்பு பிரிவுக்கான விழிப்புக்குழு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பகுதி படையினரின் ஏற்பாட்டில் கச்சாய் வீதி, ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் விழிப்புக்குழு உருவாக்கப்பட்டது. (ஐ-207)

# வடிகாலமைப்புக்கு கொடுப்பனவு வழங்கினால் நவாலி தெற்குக்கு குடிதண்ணீர் கிட்டும்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவை வழங்கினால் மட்டுமே நவாலி தெற்குப் பகுதிக்கு குழாய் மூலமாக குடிதண்ணீர் வழங்கப்படும்.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் பிராந்திய முகாமையாளர் எந்திரி பா.தவேந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

## சபையின் முகாமையாளர் தெரிவிப்பு

அவர்மேலும் தெரிவிக்கையில்-

பொக்கணையூடாக குழாய் மூலம் நவாலி வடக்கு வரை கொண்டுவரப்பட்ட குடிதண்ணீர் நவாலி கொத்துக்கட்டி வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நவாலி தெற்குப் பகுதியில் இதுவரை இரண்டு பொதுத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால் பொதுத்தொட்டியை அமைத்த மக்கள் ஒருங்கிணைந்து ஒவ்வொரு பொதுத் தொட்டிக்கும் 22 ஆயிரத்து 740 ரூபாவை யாழ்.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கட்டவேண்டும்.

அவ்வாறு கட்டடினால் மட்டுமே நவாலிதெற்குப் பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்க முடியும் என்றார். (ஐ-302)

# கொள்ளையர்களை பிடிக்க படையினர் புதிய உத்தி

நாவற்குழி, பெப்.4

குடாநாட்டின் சில பிரதேசங்களில் திருட்டுக் குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையானோர், விளக்கமறியலில் இருந்து வந்தோர் விவரங்களைப் படையினர் திரட்டி வருகின்றனர்.

அவ்வாறானவர்களின் பகல், இரவு நேர நடமாட்டங்கள் குறித்துத் தினந்தோறும் தகவல் பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

பொதுமக்களும் இந்தச் செயற்பாட்டுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்.

அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து அவற்றைத் தடுக்க தாம் இந்த உத்தியைக் கையாள்வதாக உள்ளூர் படையதிகாரரி ஒருவர் தெரிவித்தார்.

பொதுமக்களின் சிறப்பான ஒத்துழைப்பு இந்த விடயத்தில் கிடைப்பதால் குடாநாட்டின் சகல பிரதேசங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும் சாத்தியமுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ-121)

## மோட்டார் சைக்கிளில் ஏற்றிச்செல்லும் குழந்தைகளுக்கு 'ஹெல்மட் அணியவேண்டும்

யாழ்ப்பாணம்,பெப்.04

மோட்டார் சைக்கிள்களில் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் பெற்றோர் குழந்தைகளுக்கு 'ஹெல்மட்' அணிவிக்கவேண்டும்.

யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக போக்குவரத்துப் பொலிஸார் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மோட்டார் சைக்கிளில் குழந்தைகளைப் பெற்றோர் அழைத்துச் செல்லும் போது, சிறுவர்களுக்கு 'ஹெல்மட்' அணிவிக்க வேண்டும் என்பது சட்டப்படி நடைமுறையில் உள்ளது.

இந்த நடைமுறையை பெற்றோர் கடைப்பிடிக்காத காரணத்தால், விபத்துக்களில் குழந்தைகள் காயம் அடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தைகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கு 'ஹெல்மட்' அணிய வேண்டும். இந்த நடைமுறையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நல்லூர் பிரதேச சபை இன்று ஜனாதிபதி விருது பெறுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.4

தேசிய மட்டத்தில் மிகச் சிறப்பாக இயங்கும் பிரதேச சபைகளில், யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேசசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டில் சிறப்பாகச் செயலாற்றிய பிரதேச சபைகளுக்கு 'சுவர்ணபுர' என்னும் ஜனாதிபதி விருது இன்று வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் இந்த விருதை நல்லூர் பிரதேச சபை பெறுகின்றது.

சுதந்திரதினமான இன்று 'தேசத்தின் மணிமகுடம்' என்ற பெயரில் குருநாகலில் இடம் பெறும் கண்காட்சியில் இந்த விருது வழங்கப்படவிருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து நல்லூர் பிரதேச சபை மட்டும் இந்தக் கண்காட்சியில் பங்கேற்கின்றது. (ஐ-7,313)

## வங்கிக் கணக்கில் பணம் இல்லாதபோது காசோலை வழங்கிய நபர் கைதானார்

தென்மராட்சி,பெப்.04

வங்கிக் கணக்கில் பணம் இல்லாத நிலையில் பெருந்தொகையினை காசோலையாக வழங்கிய நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

மீசாலை வடக்கைச் சேர்ந்த ஒருவர் தனியார் வங்கி ஒன்றின் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை ஒரு வருக்கு வழங்கியுள்ளார். காசோலையைப் பெற்றவர் அதனைத் தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளார். காசோலைக்குரிய கணக்கில் பணம் இல்லையென குறித்த வங்கி காசோலையை வைப்பிலிட்ட வங்கிக்குத் திருப்பி அனுப்பியது.

இது தொடர்பாக காசோலை வைப்பிலிட்டவருக்கு அறிவித்ததையடுத்து அவர் குறிப்பிட்ட நபர் தன்னை ஏமாற்றி விட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதனையடுத்து பொலிஸார் இந்த நபரைக் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டத்தரணி செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை பிணையில் விடுமாறு மனுதாக்கல் செய்தார். இதனையடுத்து 5 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனுமதித்த நீதிவான், மாதத்தின் இரண்டாவது, நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடுமாறு உத்தரவிட்டு வழக்கை மார்ச் எட்டாம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஜ-207)

ஆரம்பம்...



புதிய இணைவு: மாதகல் சென். தோமஸ் றோ.க பெண்கள் பாடசாலையில் இடம்பெற்ற கால் கோள் விழாவில் ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்களுடன் மாணவர்கள்.

## வடமராட்சியில் பாடசாலைகளுக்கு தளபாடங்கள்

வடமராட்சி,பெப்.04

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள இரு பாடசாலைகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வலயக் கணக்காளர் ஏ.கிரிதரன் தொரிவித்துள்ளார்.

குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,அம்பன் அமெரிக்கமிசன் தமிழ்கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கே இவை வழங்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கான மேசை, கதிரைகளும் ஆசிரியர்களுக்கான மேசை, கதிரைகளும் வழங்கப்படவுள்ள தளபாடங்களில் அடங்குகின்றன. (த-236)

## நாளைய மின் வெட்டு விவரம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

உயரழுத்த மின்மார்க்கங்களில் மின் வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களுக்கான மின் விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபை அறிவித்துள்ளது. (ஜ-311)

## ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிக்கு விரைவில் பாடசாலை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்டத்தில் புதிய தொழில் பயிற்சிகளை விரிவுபடுத்தும் முகமாக இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை, ஹோட்டல் முகாமைத்துவப் பயிற்சிப் பாடசாலை ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாடசாலையில் பகுதி நேரமாகவும், முழு நேரமாகவும் பயிற்சி நெறிகள் இடம்பெறும்.

உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஹோட்டல் பராமரிப்பாளர், ஹோட்டல் மேற்பார்வையாளர், உபசரணையாளர், நவீன சமையலாளர் ஆகிய கற்கை நெறிகள் அதி முக்கியத்துவம்பெறும். பயனாளிகளை இணைப்பதற்கு உகந்ததாக முன்சொன்ன பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற விரும்புபவர்கள், மாவட்ட இணைப்பாளர், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்துள்ளார். (ம-7)

## மதிலேறிக் குதித்த இளைஞன் துரத்திப் பிடிக்கப்பட்டார்

வண்ணை,பெப்.4

பூட்டி இருந்த வீட்டினுள் மதிலேறிக் குதித்த திருடனை அங்கே படுத்திருந்த இளைஞன் கண்டு துரத்தியதைத் தொடர்ந்து மேலும் பலரால் துரத்திப் பிடிக்கப்பட்டான்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ். வண் வடமேற்கு பத்திரகாளி கோயில் வீதியில் நடைபெற்றது.

பிடித்த திருடனை கேசவில் பிள்ளையார் கோயில் முன் வீதியில் கட்டி நையப்புடைத்த அந்தப் பகுதி மக்கள் படையினருக்கு அறிவித்தனர் படையினர் எடுத்த நடவடிக்கை காரணமாகப் பின்னர் பொலிசாரிடம் திருடன் நண்பல் 12 மணியளவில் ஒப்படைக்கப்பட்டார்.

திருடனைப் பார்வையிட பெருமளவில் கூடிய மக்கள் விழிப்புணர்வாகச் செயற்பட்டதால் திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டதாக மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

பட்டப்பகலில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவது குறித்து மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர். (ஜ-160)

## தேசியக் கொடியேற்றி மின் குமிழால் அலங்கரிக்கவும்

வலி வடக்கு,பெப்.4

இலங்கையின் 63 வது சுதந்திர தினத்தையொட்டி அனைத்து அரச திணைக்களங்கள் மற்றும் அரச கட்டடங்களில் தேசியக் கொடிகள் ஏற்றி சுதந்திர தினத்தைக் கொண்டாட நடவடிக்கையெடுக்க வேண்டும். பொது நிர்வாக உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சுமேற்கண்ட சுற்றுநிரூபம் மூலம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதுடன் கட்டடங்கள் மின் குமிழ்கள் கொண்டு அலங்கரிக்கப்படுவதுடன் சிரமதானப்பணிகளும் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-86)

## பருநவீன சந்தையின் 2 ஆவது மாடிக் கட்டடப் பணி

வடமராட்சி,பெப்.4

பருத்தித்துறை நவீன சந்தையின் இரண்டாம் கட்ட மாடிக் கட்டடப் பணிகள் இம் மாதம் முதற் பகுதியில் ஆரம்பமாகவுள்ளன.

மாடிக்கட்டடத்தைக் கட்டி முடிப்பதற்கென வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 44 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக பருத்தித்துறை நகரில் நவீன சந்தை ஒன்று இல்லாத நிலையில் நவீன சந்தை ஒன்றை கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. முதலாம் கட்டமாக நவீன சந்தையின் கட்டட வேலைகள் 'நெக்டெப்'நிறுனத்தின் அனுசரணையுடன் 110 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சந்தையின் இரண்டாம் கட்டமாக மாடிக் கட்டடத்தையும் கட்டி முடித்த பின்னரே புதிய நவீன சந்தையை திறக்க வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் எடுத்த நடவடிக்கையினால் இரண்டாம் கட்டமாக மாடிக் கட்டடத்தை கட்டி முடிப்பதற்காக 44 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாடிக்கட்டட வேலைகளை தனியார் ஒப்பந்த நிறுவனம் ஒன்று பொறுப்பேற்றுள்ளது. இந்த நிறுவனம் இம்மாதப் பிற்பகுதியில் கட்டட வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கட்டட வேலைகள் வடமாகாண கட்டடத்திணைக்களத்தின் மேற்பார்வையில் நடைபெறும். (236)

# வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனையில் மருத்துவர் பணியில் இல்லாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் 25 ஆண்டுகளாகப் பணிபுரிந்த மருத்துவர் 2006ஆம் ஆண்டு மாற்றலாகிச் சென்றதிலிருந்து இன்றுவரை நிரந்தர மருத்துவர் இம் மருத்துவமனைக்கு நியமிக்கப்படாததினால் வன்னிணேரிக்குளம், ஜெயபுரம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய கிராமங்களில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் மருத்துவ நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கிராமங்களில் வசிக்கும் மக்கள் அக்கராயன் மருத்துவமனையினை நாடவேண்டிய நெருக்கடி நிலையில் உள்ளதால் வன்னேரிக் குளத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வன்னேரிக்குள மக்கள் அக்கராயன் மருத்துவமனைக்குச் செல்லும் பாதை சீரின்மையாலும் விச ஜந்துக்களின் நடமாட்டம் அதிகமாக இருப்பதாலும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு மேலும் கேட்டுக்கொள்கின்றனர். ()

# கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன

கிளிநொச்சி, கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக்கு உட்பட்ட பரந்தன், உமையாள்புரம் கடற்றொழிலாளர்களுக்கான கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக்கு உட்பட்ட உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் உள்ள கடற்றொழில் உபகரணங்கள் எவையும் இல்லாமல் மீளக் குடியமர்ந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளில் 10 பயனாளிகளுக்கு சிறு மீன்பிடிப்படகுகளும் 10 பயனாளிகளுக்கு வலைகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'பிறக்ரிக்கல் அக்ஷன்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் வழங்கப்பட்ட இந்த கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்தவாரம் பரந்தனில் அமைந்துள்ள கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசத்தில் சமாசத்தின் பொது முகாமையாளர் இ. கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மகேசு சந்திரகுமார், பிரக்டிக்கல் அக்ஷன் நிறுவனத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் கலாநிதி விசாக்காகிதல்லகே, மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், அனர்த்த முகாமைத்துவப் பிரிவுப் பணிப்பாளர் வைரமுத்து, கடற்றொழிலாளர் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி மற்றும் படையதிகாரிகள் சமாசத்தின் தலைவர், நிர்வாக உறுப்பினர், கடற்றொழிலாளர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேற்படி நிகழ்வில் ஒருலட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்கள் தலா ஒவ்வொரு கடற்றொழிலாளருக்கும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச எல்லைக்குட்பட்ட உமையாள்புரம், பரந்தன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் நூற்றுப்பத்துக்கும் அதிகமான கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் உபகரணங்கள் இல்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# மீளக்குடியமர விரும்பும் குடும்பங்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பாதுகாப்புப் படையினரால் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மீளக் குடியமர விரும்பும் குடும்பங்களை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் என். கோணேஸ்வரன் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவுமாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள 19 கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் இதுவரை 6 பிரிவுகளில் மட்டும் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமரப் பாதுகாப்புப் படையினர் அனுமதித்துள்ளதாகவும் ஏனைய பிரிவுகளில் கண்ணிவெடி அகற்றும் பணி தொடர்வதால் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் விஸ்வமடு மேற்கு, விஸ்வமடு கிழக்கு, மாணிக்கபுரம் ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலிருந்தும் இடம் பெயர்ந்த அனேகமான குடும்பங்கள் இதுவரை மீளக் குடியமர முன்வரவில்லை - என்றும் தெரிவித்தார். (115)

# வன்னியில் போக்குவரத்து சீரின்மை

வன்னிமாவட்டத்தில் தொழில் புரியும் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்த அரச ஊழியர்கள் ஒழுங்கான போக்குவரத்து இல்லாமையால் பல சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி வீதிகள் பல பெரியளவில் சேதமடைந்துள்ளதால் அவ் வீதியூடாகப் பயணஞ்செய்யும் தனியார், அரச பேருந்துகள் நேரத்துக்கு வருவதில்லை என்றும் சில வேளைகளில் வராமல் விடுவதாகவும் அரச ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் பாடசாலை செல்லும் வெளிமாவட்ட ஆசிரியர்கள் தொடக்கம், அரச உத்தியோகத்தர்கள் வரை நேரத்துக்குச் சென்று தமது கடமையைப் பெறுப்பெடுக்க முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேரத்துக்குக் கடமையை ஏற்க முடியாதுள்ள காரணத்தால் அரைநாள் விடுமுறை எடுக்க வேண்டியுள்ளதாவும் தகுந்த நேரங்களில் விடுமுறை எடுக்க முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அதிகாரிகள் அன்றைய நாள் அலுவலகம் வருவார்களாயின் நேரம் பிந்திய அலுவலர்கள் அலுவலகம் செல்ல முடியாது. அதனால் ஓட்டோ பிடித்துச்செல்வதனால் செலவு ஏற்படுவதாகவும் இதனால் எமது பகுதிக்கு மாற்றம் செய்து தரும்படி மேலிடத்துக்குக் கடிதம் போட்டும் எந்தப் பலனும் எட்டப்படவில்லை என மேலும் தெரிவிக்கின்றனர்.

# கிளிநொச்சி குஞ்சுக்குளம் பாடசாலை மூடப்பட்டுள்ளது

கிளிநொச்சி குஞ்சுக்குளம் பாடசாலை மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்வுகளுக்கு முன்னர் இப்பாடசாலை புதிய இடமொன்றில் இயங்கிவந்ததாகவும் தற்போது இயங்காத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் குஞ்சுக்குளம் பாடசாலையினை புதிய இடத்தில் அமைக்குமாறும் அக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். இப் பாடசாலை மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாமல் உள்ளதால் அம் மாணவர்களின் அறிவூட்டல் கணிப்பீடும் குறைந்து விடும்.

இதனால் அந்த மாணவர்கள் கல்வியில் உயர்வைப் பெறும் நிலையும் தடைப்படும் என்றும் அப் பாடசாலை மாணவர்களின் பொற்றோர்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அம் மாணவர்களின் கல்வியைத் தொடர வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 24.11.1950

இறப்பு 16.01.2010

### அமரர் சுப்பிரமணியம் சிவஞானம் (V.C)

திதி: பிரதமை சித்தம்

(காரைநகர், அனலைதீவு, பிரதேச சபைகளின் முன்னாள் பொறுப்பதிகாரி, காரைநகர் ப.நோ.கூ.சங்கத்தின் முன்னாள் தலைவர், காரை விவசாய சம்மேளத்தின் முன்னாள் தலைவர், விளானை சனசமூக நிலைய, கிராம அபிவிருத்திச் சங்க, முன்னாள் பொருளாளர், பிரதம லிகிதர், முகாமைத்துவ உதவியாளர், பொதுசனத் தொடர்பு அதிகாரி)

ஒரு கூட்டுக் கிளியாய் நாம் ஒருமையாய் வாழ்ந்தோமே<br>
கதிரன் வீடு என்றால் எல்லோரும் ஒன்று சேருவோமே<br>
காரைநகரில் V.C சிவஞானம் என்றால் தெரியாதவர் யாரும் இல்லையே<br>
கண்ணிமப் பொழுதில் காலன் உம்மைக் கவர்வான் என நினைக்க முடியவில்லை.<br>
உனக்கிருந்த பெயரையும் புகழையும் இழந்தபின்னரா உணர வைத்தாய்<br>
உன் பிரிவால் ஆறமுடியாமல் அலறுகின்றோம்.<br>
நின் ஆத்மா சாந்தியடைய பாலாவோடை அம்பாளை வேண்டுகின்றோம்.

விளானை களபூமி,<br>
காரைநகர்.

பிரிவால் துயருறும்:<br>
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



02.02.2011 அன்று அகாலமரணமடைந்த எமது பாடசாலையின் நலன்விரும்பியான

அமரர் கிட்டப்பா பரமேஸ்வரி

அவர்களின் மறைவையொட்டி அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்.<br>
யா/மயிலணி சைவ.ம.வி, சுன்னாகம்.

## 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### நாராயணசாமி இராமசாமி

தோற்றம் 03.04.1920

மறைவு 04.02.1985

இருபத்தாறாண்டுகள் பறந் தோடிப்போனாலும்<br>
பசுமை நினைவுகள் மட்டும் மறையவே மாட்டாது.

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,<br>
119, 39/2, மாவிட்டபுரம் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,<br>
மைத்துனர்கள், பேரப்பிள்ளை,<br>
பூட்டப்பிள்ளைகள்.

# கிளிநொச்சியில் கடும் மழையால் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன

கிளிநொச்சி,பெப்.04
கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் நெல் அறுவடை பாதிக்கப்படைந்துள்ளதுடன், நெற்பயிர்கள் அழிவடையும் நிலையிலேயுள்ளதாக விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

கடந்த கால யுத்தத்துக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் பெரும் நிலப்பரப்பில் நெற்செய்கையினை இம்முறை மேற்கொண்டாகத் தெரிவிக்கின்றனர்.

நெற் பயிர் நன்றாக விளைந்து வரும் வேளையில் நெற்பயிருக்கு எரிபந்தம் நோய் ஏற்பட்டதுடன் கடுமையான மழையும் பெய்ததால் எரிபந்தம் நோயைக் கட்டுப்படுத்த கிருமிநாசிகளைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எரிபந்தத்தால் நெற்பயிர் பாதிக்கப்பட்ட அதேவேளை கடுமையான மழை பெய்யத் தொடங்கியதால் நெல்வயல்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிப்பதால் நோயிலிருந்து தப்பிய நெற்பயிரைக் கூட அறுவடை செய்யமுடியாத நிலையில் நெற்பயிர்கள் அழியக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் முதன் முதலாக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட வேளையில் இவ்வாறான கஷ்டங்களையும் சிரமங்களையும் விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளதுடன் பெருந்தொகைப் பெறுமதியை இழக்க வேண்டியுள்ளதாகவும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நஷ்டஈடு போல கிளி நொச்சி மாவட்ட விவசாயிகளுக்கும் வழங்கப்படவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (236)

# முல்லைத்தீவு மக்களுக்கு புலம்பெயர் தமிழர் உதவி

முல்லைத்தீவு, பெப்.04
முல்லை மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வினை மேம்படுத்தும் முகமாக புலம்பெயர்ந்து வெளிநாடு களில் வாழ்கின்ற தமிழ் மக்களினால் பிரதேச ரீதியாக உதவிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கனடா- அவுஸ்திரேலியா- சுவிஸ் போன்ற நாடுகளின் அந் நாட்டிலிருந்து வருபவர்களின் தொடர்புகள் கிடைக்கப் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கான நூல்கள், மின்சாதனங்கள், வணக்க ஸ்தலங்களுக்கு ஒலிபெருக்கிகள், மின்பிறப்பாக்கிகள், கட்டட வேலைகளுக்கான சிறுஉதவிகள் என பல்வேறு உதவிகளை புலம்பெயர்வாழ் தமிழ் மக்கள் உதவி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

முத்துஐயன்கட்டு 2ஆம் கண்டம் பகுதியில் ஏற்கனவே இயங்கிவந்த இளஞ்சிறார்கள் பயின்று வந்த "புனிதபூமி" பாடசாலை தற்போது இயங்கா நிலையில் கே.பத்மநாதன் குழுவினரின் வருகையினால் அப்பாடசாலை சிறந்த அறிவாலயமாக மாற்றமடைந்து வருவதாகவும் சிறுகைத் தொழிலை மேற்கொள்ளும் வர்த்தகருக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது. (500)

## புனரமைக்கப்பட்ட வீதி மீண்டும் சேதமானது

ஒட்டுசுட்டான்,பெப்.04
ஒட்டுசுட்டான் -முத்துஐயன் கட்டு வீதி புனரமைக்கப்பட்டு ஒரு மாத கால எல்லைக்குள்ளேயே பெரிய சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மாதத்துக்கு முன்பு தான் 4½ கிலோ மீற்றர் நீளம் உள்ள அவ்வீதிக்கு கல் பறித்து தார் ஊற்றும் வேலை நடைபெற்றதாகவும், தற்பொழுது தார் குறைவாக ஊற்றப்பட்டதால், கற்கள் சிதறிக் காணப்படுவதாகவும் அந்த வீதியினூடாக பயணம் செய்யும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வீதியை நேர்த்தியுடன் தரமானதாகத் திருத்தித் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அப்பகுதி மக்கள் கேட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தநிலை மாறுமா ?...



அபிவிருத்தியடையுமா.: கிளிநொச்சி அக்கராயன் வைகறை முன்பள்ளி போரின் போது அழிவடைந்து புனரமைக்கப்படாமல் உள்ளது.

## கவரேஜ் முற்றாக தடைப்பட்டுள்ளது

முல்லைத்தீவு,பெப்.04
முல்லைமாவட்டத்தில் கைத்தொலைபேசி தொடர்வு தடைப்பட்டுள்ளதால் செல்போன் பாவனையாளர்கள்பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 90 வீதமான வேலைத் திட்டங்களை செல்போன் மூலம் செயற்படுத்தும் இவ்வேளை அவசரத் தொடர்புகளைக் கூட எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

செல்போன் பரிவர்த்தன கோபுரங்கள் அரிதாக உள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்புப் பகுதியில் ஒரு கோபுரம் அமைந்துள்ளதால் பாவனையாளர்கள் மரங்களின்மேலே ஏறி நின்று கூட தொடர்புகள் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தொலைபேசி அனுசரணையாளர் இதனைக் கவனத்திற்கொண்டு ஆவன செய்யவேண்டும் என செல்போன் பாவனையாளர்கள் கேட்டுள்ளனர். (500)

# வன்னியில் வரலாற்றுச் சின்னங்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது

முல்லைத்தீவு,பெப்.04
முல்லை மாவட்டத்தில் பண்டைய வரலாற்றுச் சின்னங்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 200-300 வருடங்களுக்கு பண்டைய மன்னர்களின் வாழ்வுச் சுவடுகள் பரவலாகக் காணப்பட்டதாகவும் பண்டார வன்னியன் சிலை பண்டாரவன்னியனைத் தோற்கடிக்கப்பட்டதாகக் கூறப்படும் 1803 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நினைவுக்கல் தட்டையன் மலை என்னும் இடத்தில் உள்ள மலையிலே உள்ள எழுத்துக்கள் அடங்கிய அரண்மனைச் சுவடுகள், மற்றும் பாவாடைக்கல், அடுக்குக்கல், கற்குளம், காக்கைப் பனிக்கன்குளம், வாவெட்டிமலை போன்ற இன்னும் அனேகமான இடத்தில் உள்ள பண்டைய வரலாறுகளை எடுத்துக் காட்டும் சுவடுகள் மறைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த சூழ்நிலையின் போது பண்டாரவன்னியன் சிலை, வள்ளுவர் சிலை என்பன முற்றாக இடித்து தள்ளப்பட்டதுடன் பண்டார வன்னியன் நினைவுக்கல் உடைத்து வீழ்த்தப்பட்டதாகவும் இந்த நினைவுக் கல்லை தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் வினோதராதலிங்கம் என்பவரின் நிதியுதவியுடன் கிராம அபிவிருத்திச் சங்கம் கற்சிலைமடு நிர்வாகிகளால் மீண்டும் கட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றுச் சின்னங்களையும் தேவாலயங்களையும் பேண அரசாங்கம் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (500)

# ஊரியான் முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.4
கிளிநொச்சி, ஊரியான் பிரதேச முன்பள்ளியினை சில விசமிகள் அசுத்தப்படுத்தி வருவதால் முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டு வருகின்றன.

மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் ஒன்றாகக் கணப்படும் ஊரியான் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி இயங்கி வரும் முன்பள்ளியினை சில விசமிகள் தொடர்ந்து அசுத்தப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடிக்கடி அசுத்தமாகக் காணப்படும் இந்த முன்பள்ளியை காலையில் ஆரம்பிக்கச்செல்லும் ஆசிரியைகள் மண்டபத்தைக் கழுவிச் சுத்தம் செய்த பின்னரே சிறார்களின் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

சின்னஞ் சிறார்களின் எதிர்கால கல்வியை சேவையாக வழங்கும் இந்த முன்பள்ளியை திட்டமிட்ட சில விசமிகள் அசுத்தப் படுத்தி வருவதால் இந்தப் பிரதேசச் சிறார்களின் எதிர்காலமே பாதிப்புக்குள்ளாகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-6)

# இ.போ.சபையினரிடம் ஆசிரியர் வேண்டுகோள்

அக்கராயன்,பெப்.04
யாழ்ப்பாணத்திலிருந்து வந்து அக்கராயன் பகுதி ஆசிரியர்களை பிற்பகலில் ஏற்றிச் செல்லும் இ.போ.சபை பஸ்ஸினை வெள்ளி நாள் மட்டும் வன்னேரிக்குளத்திலிருந்து ஆசிரியர்களை ஏற்றிச் செல்லுமாறு ஆசிரியர்களினால் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தின் முன்னிருந்து பஸ் புறப்படுமானால் வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான், ஐயனார்புரம் ஆசிரியர்கள் வெள்ளி மாலையில் யாழ்ப்பாணம் செல்ல முடியும் என்று ஆசிரியர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

# அக்கராஜன் ம.வி. பழைய மாணவர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி,பெப்.04
கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலய பழைய மாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்று திரட்டுவதன் மூலம் பாடசாலையின் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்ற கருத்து முதன்மையாக விவாதிக்கப்பட்டதாகவும் ஒன்று கூடலில் பழைய மாணவர்களின் வரவு குறைவாக காணப்பட்ட போதிலும் முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையின் சூழலை பேணல், புலம்பெயர், உள்நாட்டில் வாழ்கின்ற பழைய மாணவர்களை பாடசாலையின் இயங்கு திறனில் பங்காளிகளாக மாற்றுதல், நடைபெறவுள்ள புற பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் எனப் பல முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவராக பாடசாலை முதல்வர் த.கண்ணபிரான், செயலாளராக க.கோபிநாத், பொருளாளராக பிரான்சிஸ் அன்ரன் கிறேசியா உட்பட 8 உறுப்பினர்களும் பழைய மாணவர் ந.கிருஸ்ணகுமார் சங்கத்தின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டனர்.

# நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் மலையகத் தோட்டங்கள் அபிவிருத்தி காண்கின்றன

நுவரெலியா, பெப்.4

நூறு ஆண்டுகளுக்கு மேலாக அபிவிருத்திகளைக் காணாத தோட்டப்பகுதிகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட கவனத்தின் ஊடாக அபிவிருத்தியடைந்து வருகின்றன - என இ. தொ. கா. தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

மலையக தோட்டப்பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென இந்த வருடம் வரவு - செலவு திட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் டன்வார் தோட்டத்திற்கு மின் இணைப்பு வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த அமைச்சின் மூலம் தோட்டப் பகுதிகளிலுள்ள பிரதான பாதைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றைத் துரிதமாகச் செய்துமுடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அயராத முயற்சியினால் அரசின் உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன.

நாம் ஒற்றுமையாக இருந்தால் மட்டுமே எமது பலத்தை காட்டி அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப் பெறமுடியும். ஒரு சிமெந்து பைக்கற்றுக்கும் மதுபானத்திற்கும் அடிமையாகி எமது சமூகத்தை மட்டுமல்லாது காலங் காலமாக நாம் வாழ்ந்த இந்த நிலத்தைக் கூட பறிகொடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாங்கள் செய்யும் தகாத வேலைத் திட்டங்களுக்காக தொழிற்சங்கத்தை அமைத்துள்ளனர். தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அப்பாவி மக்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்துகின்றனர். எனவே மக்கள் இவ்வாறானவர்களை இனம்கண்டு அவர்களிடமிருந்து ஒதுங்கி இருக்கவேண்டும் - இவ்வாறு முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார். (ளி)

## குடியிருப்புக்கள் தாழிறங்கும் அபாயம்

பதுளை, பெப்.4

பதுளையில் தற்போது பெய்து வரும் கடும்மழை காரணமாக பதுளை, பதுளு சிரிகம வீடமைப்புத் திட்டத்திலுள்ள குடியிருப்புக்கள் தாழிறங்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை பெய்த கடும் மழை காரணமாக 26 வீடுகள் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

14 வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பதுளை மாவட்ட அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

## மரக்கறி விற்பனை வீழ்ச்சி

மலையகப் பகுதிகளில் மரக்கறி விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

மலையக நகரங்களில் மரக்கறி விலைகளில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கண்டி, கம்பளை, நாவலப்பட்டி, அட்டன், பொகவந்தலாவை, மஸ்கெலியா,தலவாக்கலை போன்ற பகுதிகளில் பீற்றூட் ஒரு கிலோ 200 ரூபா முதல் 220 ரூபா வரையிலும், கத்தரிக்காய் ஒரு கிலோ 180 ரூபா முதல் 200 ரூபா வரையிலும் போஞ்சி ஒரு கிலோ 200 ரூபா முதல் 220 ரூபா வரையிலும், லீக்ஸ் ஒரு கிலோ 140 ரூபா முதல் 160 ரூபா வரையிலும் கறிமிளகாய் ஒரு கிலோ 300 ரூபா முதல் 320 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு கிலோ பச்சை மிளகாய் 500 ரூபா முதல் 600 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது. காய்கறி விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதால் வியாபாரிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் உருளைக்கிழங்கு, சோயா மீற், மரவள்ளிக் கிழங்கு போன்ற குறைந்த விலையிலான பொருள் களைக் கொள்வனவு செய்வதில் நுகர்வோர் ஆர்வம் செலுத்தி வருகின்றனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ளி)

## மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலிருந்து இடைநிறுத்தப்பட்ட 58 மாணவர்களதும் தடையை நீக்கக் கோரி நேற்றுமுன்தினம் புதன்கிழமை சுமார் 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலாம் வருட மாணவர்களுக்கு பகிடிவதை மேற்கொண்டதனாலே இவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்களது முறைப்பாடுகளை கவனித்த பின்னரே தண்டனையை குறைப்பதா இல்லையா? என தீர்மானிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (204)

## மண்சரிவு பிரதேசங்களாக 4 மாவட்டங்கள் பிரகடனம்

கண்டி, பெப்.4

கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழையையடுத்து, மலையகத்தின் 4 மாவட்டங்கள் மண்சரிவு அபாயமுள்ள பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது.

கண்டி, மாத்தளை, நுவரெலியா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்கள் மண்சரிவு அபாயமுள்ள மாவட்டங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் மண்சரிவுப் பிரிவின் உயர் அதிகாரி ஆர்.எம்.எஸ்.பண்டார தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய 3 மாவட்டங்களும் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பதுளை மாவட்டமும் மண்சரிவு அபாயத்தைப் பெருமளவில் எதிர்கொண்டுள்ளதாகவும் இதனால் அவை பாதுகாப்பற்ற மண்சரிவு அபாயமுள்ள பிரதேசங்களாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நான்கு மாவட்டங்களிலிருந்தும் 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை பாதுகாப்பான பிரதேசங்களுக்குச் செல்லுமாறு பணித்துள்ளதுடன், மண்சரிவு மற்றும் நிலம் கீழிறங்குவதைக் கட்டுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆர்.எம்.எஸ்.பண்டார குறிப்பிட்டார். (204)

## தலையில் விறகு சுமந்து வந்தவர் வழுக்கி விழுந்து பரிதாப மரணம்

தலையில் விறகுக் கட்டைச் சுமந்து கொண்டு வீடுநோக்கி வந்து கொண்டிருந்தவர் பாதையில் வழுக்கி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கொட்ட கலை ட்ரைட்டன் கே.ஓ. தோட்டப்பிரிவில் இடம்பெற்றது.

ட்ரைட்டன் கே.ஓ. தோட்டத்தைச் சேர்ந்த 50 வயதுடைய கே.சிவகுமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பத்தமனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தாதியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில்

கொட்டக்கலை மாவட்ட வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பணிப்பகிஷ்கரிப்புக் காரணமாக வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி என்.விஜேசிறி தெரிவித்தார்.

வைத்தியசாலையின் பிரதான தாதியுடன் ஏற்பட்டதாகக் கூறப்படும் முறுகல் நிலையை அடுத்தே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகிஷ்கரிப்புக் காரணமாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் சிலரை நுவரெலியா மற்றும் நாவலப்பிட்டி வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என விஜேசிறி மேலும் தெரிவித்துள்ளார். (ளி)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.



- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

JAN 2011 TO JUN 2011

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் டி.மா. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை டி.மா. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 10.02.2011



கோழிக்குஞ்சு விநியோகம்

பைரகா பாம் புறொயிலர் குஞ்சு 4.2.2011 இலும் சிவப்புப் பேட்டுக் குஞ்சு 7.2.2011 இலும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.
எஸ். கிருஷ்ணகுமார், விதானைவளவு, மானிப்பாய்.
T.P.NO - 077 2338084
(110223)

வாடகைக்கு

மின்சார நிலைய வீதியில் (போதனா வைத்தியசாலைக்கு பின்புறம்) 1000 சதுர அடிக்கு மேல் இடம் முதலாம் மாடியில் வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 021 2226083
(110575)

இடமாற்றம்

50, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த
ஹரன் ஜுவலர்ஸ் ஸ்தாபனம்
07.02.2011 முதல்
205, மின்சார நிலைய வீதியில்
(பெரிய ஆஸ்பத்திரியின் பின்புறம்)
இயங்கும் என்று எமது அன்பர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்.
2226083
(110207)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

முன்னாள் பிரபல உயர் வகுப்பு கணித, விஞ்ஞான பாட நூல் ஆசிரியரும், வலி மேற்கு மத்தியஸ்தர் சபை பிரதம மத்தியஸ்தரும், யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சங்கானை பிராந்திய சபைத் தலைவரும் எமது சங்கத்தின் தலைவருமாகிய அராலி மத்தியைச் சேர்ந்த

திரு .விசுவலிங்கம் செல்வரத்தினம்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)



அவர்கள் "சிவபெருமானை திருக்கயிலாயத்தில் கண்டேன்" என்னும் நூல் எழுதி வெளியிட்டமைக்கு 05.10. 2010 அன்று கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவில் வடமாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் சிறந்த நூல் எனத் தெரிவு செய்யப்பட்டு, கௌரவிக்கப்பட்டு விருது வழங்கப்பட்டமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அத்துடன் அவரின் சேவை மேலும் வளர இறைவனைப் பிரார்த்தித்து அவருடைய ஆன்மீக சிந்தனையையும் அவரின் சமூக சிந்தனையையும் பாராட்டுவதுடன் அவர் நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உலோலசிட்டி விநாயகர்
ஐக்கிய நாணய சங்கம்,
அராலி மத்தி, வட்டுக்கோட்டை.

# பட்டிருப்பு வீதிப் போக்குவரத்து துண்டிப்பு

மட்டக்களப்பு,பெப்.4

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக படுவான்கரைக்கும் எழுவான்கரைக்கும் இடையிலான பட்டிருப்பு வீதியூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தினால் மண்டூர் கறுத்தப்பாலம் நேற்று வியாழக்கிழமை காலை இடிந்து வீழ்ந்துள்ளது.

வெல்லாவெளி -மண்டூர் வீதி மற்றும் வெல்லாவெளி -வக்கியெல்லை வீதி நீரில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அணைகட்டிய வழி, வேத்துச்சேனை, நாதனவெளி, சின்னவத்தை ஆகிய கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன. இங்குள்ள மக்களைப் படகுகள் மூலம் வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் மேற்கொண்டு வருகின்றார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குமரன் சாலமன் வீதி, சரஸ்வதி வித்தியாலய வீதி, 9ஆம் வட்டார தேவாலய வீதி ஆகிய வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், அங்குள்ள மக்களும் இடம்பெயர்ந்து உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் பண்டாரியா வெளி, படையாண்டவெளி ஆகிய கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இந்தக் கிராம மக்கள் தமது வீடுகளிலிருந்து வெளியேறி பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

வெள்ளம் காரணமாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்காதுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (204)

# பல்கலைக்கழக பேரவை கலைப்பு தகுதி வாய்ந்த அதிகாரி நியமனம்

மட்டக்களப்பு, பெப்.4

கிழக்குப் பல்கலைக்கழக பேரவையைக் கலைத்து விட்டுத் தகுதிவாய்ந்த அதிகாரியாகத் திறந்த பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் நிமால் ரஞ்சித் அத்தநாயக்க கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக அடுத்த மூன்று மாதங்களுக்குச் செயற்படுவார் என அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த நியமனம் கடந்த 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார்.

ஏற்கனவே உயர்கல்வி அமைச்சினால் 7 பேரும் பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகளும் அடங்கிய பேரவை செயற்பட்டு வந்தது. இந்தப் பேரவையைக் கலைத்துவிட்டே தகுதிவாயந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் உபவேந்தர் ஆகிய பதவிகள் பல மாதங்களாக வெற்றிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அம்பாறையில் ஊழியர்கள் சென்ற பஸ் விபத்து; 42 பேர் காயம்

அம்பாறை, பெப்.4

அம்பாறை தபால் சந்தியில், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் சென்ற பஸ் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதில் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காய முற்றவர்கள் அம்பாறை ஆதார வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்த நிலையில் குடைபிடித்தவாறு எதிர்த்திசையில் வந்த சைக்கிளோட்டி ஒருவர் மீது மோதுவதைத் தவிர்ப்பதற்கு பஸ் சாரதி முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மீனுக்கும் பாதிப்பா...



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் போது வாவியில் மீன்கள் இறந்து காணப்படுகின்றன. (204)

# விவரங்களை மதிப்பிடுவதற்கு விசேட குழு

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள சேத விவரங்கள் தொடர்பில் ஆராயும் வகையிலான விசேட கூட்டமொன்று திருகோணமலையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் திருகோணமலையில் வெள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்வதற்காகக் கிழக்கு மாகாண தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ், அம்பாறை வெள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்வதற்காக மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமான் லெப்பை, மட்டக்களப்பு வெள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்வதற்காக மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள சேத விவரங்களை மதிப்பீடு செய்து அதன் விவரங்களை மத்திய அரசிற்கு சமர்ப்பிக்கவுள்ளனர். (204)

# தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கு எவ்வித தியாகமும் செய்வேன்

## அமைச்சர் சுபைர் கூறுகிறார்

தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமைக்காகவும் அச்சமூகங்களின் மேம்பாட்டுக்காகவும் எந்தத் தியாகத்தையும் செய்யத் தான் தயாராக இருக்கின்றார் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

புதூர் சுபைர் ஹாஜியார் வித்தியாலயத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்ட பின்னர் கிழக்கில் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமையும் புரிந்துணர்வும் பன் மடங்கு அதிகரித்துள்ளன. ஊறு காமம் புதூர் பிரதேச மக்கள் மத்தியில் ஒற்றுமையுணர்வு வலுப்பெற்றுள்ளது. முஸ்லிம் மக்கள் மீளக் குடியேறினால் மட்டுமே நாங்களும் மீளக்குடி யேறுவோம் என்று அடித்துக் கூறிய இப்பகுதி தமிழ் மக்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்திய அரசால் வழங்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தில் ஒரு பகுதியை கிழக்கு மாகாண சபையினூடாக இந்தப் பகுதியில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மின்சார வசதி, நீர்வழங்கல் வசதி ஆகியவற்றையும் மிக விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் உறுதியுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

'பாடசாலை ஒன்று திறக்கப்படும் என்பது 100 சிறைச்சாலைகள் மூடப்படுவதற்குச் சமன்' என்பதற்கேற்ப எமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கையில் நாம் கூடிய கரிசனை காட்டவேண்டும்.

என்றுமே அழியாச் சொத்தான கல்விச் செல்வத்தை எமது பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுப்பதில் எந்தவொரு பெற்றோரும் பின் நிற்கக்கூடாது. வறுமை கல்விக்கு ஒருபோதும் தடையல்ல என்பதை மனதில் நிறுத்தி, எமது பிள்ளைகளின் கல்வி விடயத்தில் அதிக அக்கறை காட்டுமாறு கேட்கின்றேன் - என்றார். (எ)

# திருமலையில் வீதிகள் சேதம்; போக்குவரத்துக்களும் பாதிப்பு

திருகோணமலை, பெப்.4

அடைமழை மற்றும் வெள்ளப்பெருக்கால் திருகோணமலை மாவட்டத்தில் பெரும்பாலான வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால் போக்குவரத்துகளும் பாதிக்கப்பட்டுள்ளன. வீதிகளில் வெள்ளநீர் நிரம்பியுள்ளமையாலும் வீதிகள் ஊடாக வெள்ள நீர் பாய்ந்துள்ளமையாலுமே இவ்வாறு வீதிகள் சேதமடைந்துள்ளன.

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் நுளம்பு மற்றும் நோய்க் கிருமிகள் பெருகுவதற்குரிய அபாயநிலை தோன்றியுள்ளது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஈச்சிலம்பற்று, வெருகல், மூதூர் கிழக்குப் பிரதேசங்களில் விசேட வைத்திய முகாம்களை ஏற்படுத்தி வைத்தியசேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தொற்றுநோய் உள்ளிட்ட சுகாதார நலன்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு நேரடி அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட சுகாதாரத் திணைக்களங்கள், பொதுநல அமைப்புக்கள் என்பன உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என பொதுமக்கள் கோருகின்றனர். (எ)

# கந்தளாய்குள வான்கதவுகள் திறப்பு; பல பகுதிகள் வெள்ளத்தில்

திருகோணமலை,பெப்.4

திருகோணமலை, கந்தளாய்க் குளத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டு 4 அடிக்கு மேல் நீர் பாய்வதால் வானாறு, முள்ளிப்பொத்தானை, தம்பலகாமம் சூரங்கம் ஆகிய பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

கிண்ணியா தம்பலகமம் வீதி, கிண்ணியாவானலைவீதி ஆகியன வீதிகளில் போக்குவரத்து செய்ய முடியாதளவுக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கந்தளாய்க்குளத்திலிருந்து வெண்ராசன் குளத்திற்கு பாய்ச்சப்படும் நீர் நிரம்பி வழிகிறது. அத்துடன் கல்மெட்டியாவ குளத்தின் அணைக்கட்டும் உடைப்பெடுத்துள்ளது.

திருமலை - கண்டி வீதி 96 ஆவது, 97ஆவது மைல்கல் பால வீதியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு பயணம் செய்ய முடியாதளவுக்கு வெள்ளநீர் பாய்வதுடன், மேற்படி பாலத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. இந்தநிலையில் திருகோணமலைக்கான போக்குவரத்துக்கள் முள்ளிப்பொத்தானை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இலங்கைத் துறையிலிருந்து ஈச்சிலம்பற்றுக்கான போக்குவரத்தும் ஈச்சிலம்பற்றிலிருந்து வெருகலுக்கான போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளன.

இலங்கைத்துறைமுகத்துவாரம், முற்றுச்சேனை, ஈச்சிலம்பற்று சந்தி, வட்டவான், மாவடிச்சேனை, பூநகர் ஆகிய பகுதிகளில் படகுச் சேவைகள் நடைபெறுவதுடன் அங்குள்ள மக்கள் படகுகள் மூலம் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

மூதூர் கிழக்குப் பகுதியில் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையில், கந்தளாய், சேருவில வீதியில் சூரிய வெள குளத்தின் மேலாக நீர் பாய்வதால் குளக்கட்டு உடைப்பெடுக்கக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

திருமலை நகர்ப்புறத்தில் பல குழிகள் வெள்ளத்தில் நிரம்பிக் காணப்படுவதால் அங்கு சுகாதாரப் பிரச்சினை ஏற்படக் கூடிய நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகக் கிண்ணியா, கந்தளாய், திருகோணமலை, மூதூர் ஆகிய கல்வி வலயப் பாடசாலைகள் யாவும்நேற்று வியாழக்கிழமை மூடப்பட்டுள்ளன. சகல பாடசாலைகளிலும் வெள்ளம் நிறைந்து காணப்படுகின்றது. (204)

# போதையில் விபத்துக்குள்ளாவோரிடம் வைத்தியசாலையில் பணம் அறவிடப்படும்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, பெப்.4

மதுபோதையில் விபத்துக்குள்ளாகி அரச வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரிடமிருந்து சிகிச்சைக் கட்டணம் அறவிடப்படும் நடைமுறை அமுலுக்கு வந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

மது பாவனையை ஒழிக்கும் நோக்கத்துடனேயே அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள்ளாவோர் மற்றும் போதையில் வேறு விபத்துகளில் சிக்குவோருக்கு அரச வைத்தியசாலைகளில் சிகிச்சையளிப்பதற்காக குறைந்த பட்சம் இரண்டாயிரம் ரூபா கட்டணமாக அறவிடப்படும்.

தீங்கை ஏற்படுத்தும் மது பாவனையைத் தடுக்கும் நோக்குடனும் அதனால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் நோய்களுக்கான சிகிச்சை செலவினத்தைக் குறைக்கும் நோக்குடனும் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதேவேளை மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் நாடளாவிய ரீதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு 1,522 விபத்துக்களும், 2009 ஆம் ஆண்டு 1,342 விபத்துக்களும், 2010 மே மாதம் வரையான காலப்பகுதியில் 260 விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

மது அருந்திய நிலையில் வாகனங்களைச் செலுத்தி ஏற்பட்ட விபத்துக்களால் கடந்த 2008 ஆம் வருடம் 153 பேர் உயிரிழந்துள்ளனர். 308 பேர் காயமடைந்துள்ளனர்.

அதேபோல் 2009ஆம் ஆண்டு 112 பேர் உயிரிழந்தும் 256 பேர் காயமடைந்துமுள்ளனர்.

கடந்த 2010 மே மாதம் வரையான காலப்பகுதியில் 32 பேர் மரணமடைந்தும் 95 பேர் காயமடைந்துமுள்ளனர் என சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# பணிப்பெண் மரணம் கொலையென ஊர்ஜிதம்

கொழும்பு, பெப்.4

கடந்தவருடம் பிற்பகுதியில் சவூதி அரேபியாவில் மரணமான இலங்கைப் பணிப்பெண்ணின் பிரேத பரிசோதனையில் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருவதாக றியாத்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

36 வயதான புஸ்பவல்லி செல்லத்துரை என்ற இப்பெண் கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம்திகதி மர்மமான முறையில் மரணமடைந்தார்.

இவரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது எஜமானி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற பிரேத பரிசோதனை அறிக்கை உத்தியோக பூர்வமானதல்ல என்றும், உத்தியோகபூர்வ அறிக்கை வெளிநாட்டு அமைச்சூடாகத் தான் வழங்கப்படுமென்றும் இலங்கைத் தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

விரிவான அறிக்கை கிடைத்த பின்னரே புஸ்பவல்லி எவ்வாறு கொலை செய்யப்பட்டாரெனக் கூறமுடியுமெனவும், அந்தத் தூதரக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இவரது சடலம் சவூதி அரேபியாவின் கிழக்கு மாகாணத்திலுள்ள ஹொஃப் புப் நகரில் உள்ள சவக்கிடங்கொன்றில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் சடலம் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு கொண்டுவரப்படும் என தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார்.

மரணமான பெண்ணின் கணவர் நான்கு வருடங்களுக்கு முன்னர் இறந்துவிட்டார். இவரது 4 பிள்ளைகளும் அவரது குடும்பத்தாரால் கவனிக்கப்படுகின்றனர். (சி)

# சாட்சியங்களை ஆய்வுசெய்ய ஆரம்பித்தது ஆணைக்குழு

## லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறுகிறார்

கொழும்பு, பெப். 4

நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அக்குழுவின் ஊடகப் பேச்சாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து சுமார் ஜயாயிரம் எழுத்து மூல சாட்சியங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் சுமார் 500 பேர் வாய்மூலம் சாட்சியம் அளித்துள்ளனர் எனவும் சாட்சியங்களை ஆய்வு செய்த பின்னர் தேவை ஏற்படின் பொதுமக்களிடம் இரண்டாம்கட்ட சாட்சியம் பெற்றுக் கொள்ளப்படும் என்று விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற அமர்வுகளில் சுமார் 200 பேர் சாட்சியமளித்துள்ளனர். அத்துடன் புலம்பெயர் தமிழர்கள் ஐந்து பேர் வரை சாட்சியமளித்துள்ளனர்.

கொழும்பில் சாட்சியங்களைப் பதிவு செய்யும் பணிகள் கடந்த 31 ஆம் திகதியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் சாட்சியங்கள் தொடர்பில் மேலதிக தகவல்கள் தேவைப்படின் இரண்டாம் கட்டமாக பொதுமக்கள் சிலரிடம் சாட்சியம் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு அதன் பணிகளை எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதியுடன் முடித்துக்கொள்ள வேண்டும். அதற்கு முன்னதாக அறிக்கையொன்றைத் தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் வெள்ளத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த அமர்வு இந்த மாத நடுப்பகுதியில் நடைபெறுமெனவும் ஆணைக்குழுவின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## சுதந்திர தினத்துக்கு தயார்...



இலங்கையின் 63ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கொழும்பில் தேசியக் கொடிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (204)

# கடந்த வருடம் இந்திய எல்லையில் இலங்கை மீனவர் 337 பேர் கைது

இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 337 இற்கும் அதிகமானோர் கடந்த ஆண்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மீனவர்களது 65 மீன்பிடிப் படகுகளையும் கைப்பற்றியிருந்தனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியக் கடலோர பாதுகாப்புப்படையினரின் 33 ஆவது ஆண்டு தினம் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வின்போது விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த ஆண்டில், ஏற்கனவே சிறைபிடிக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 455 பேரையும் 88 படகுகளையும் விடுவித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# 'கிரீன் காட்' போலி மின்னஞ்சல்கள் ஏமாறாதீர் என்கிறது அமெ.தூதரகம்

கொழும்பு, பெப். 4

கிரீன் அட்டை மூலம் அமெரிக்காவில் குடியேறுகின்றமை தொடர்பாக மோசடிப் பேர்வழிகளால் மின்னஞ்சல்கள் அனுப்பி வைக்கப்படுகின்றமை குறித்து இலங்கையர்கள் விழிப்பாக இருக்க வேண்டும் - என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளது.

அமெரிக்கா உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பெயரால் மோசடிப் பேர்வழிகள் மின்னஞ்சல்களை அனுப்புகின்றார்கள். அதை நம்ப வேண்டாம் என்று தூதரகம் கோரியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் நுழைவிசைவினை வழங்குவதற்கான அமெரிக்க செயலகத்தின் சார்பாக எனக்கூறி அண்மைய நாள்களில் இலங்கையில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் மின்னஞ்சல்கள் அனைத்தும் போலியானவை என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் நுழைவிசைவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

கிரீன் அட்டையை வென்றுவிட்டீர்கள் என்று மோசடிகாரர்களால் அனுப்பப்படுகின்ற மின்னஞ்சல்களில் தெரிவிக்கப்படுகின்றன என்றும் ஆனால் அமெரிக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஒருபோதும் மின்னஞ்சல் மூலம் இந்த லொத்தரி முடிவுகளை அறிவிப்பதில்லை என்பதில் இலங்கையர்கள் தெளிவாக இருக்க வேண்டும் என்றும் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பாக ".com", ".net", or ".org" என்று முடிகின்ற மின்னஞ்சல் முகவரிகளில் இருந்து வருகின்ற மின்னஞ்சல்கள் பொய்யானவை என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான மின்னஞ்சல்களுக்கு பதில் அனுப்ப வேண்டாம் என்றும் மோசடிகாரர்களுக்குப் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டு உள்ளது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டுக்கான கிரீன்காட் நுழைவிசைவினைப் பெறுவதற்கான சீட்டிழுப்பில் கலந்துகொள்வதற்கு விண்ணப்பித்தவர்கள் 2011 மே முதலாம் திகதி முதல் தங்களின் விண்ணப்பத்தின் நிலை தொடர்பாக www.-dvlottery.state.gov இணைய முகவரியின் ஊடாகத் தெரிந்து கொள்ளலாம் என்று தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (சி)

# அனுமதிப்பத்திரக் கட்டணத்தை இவ்வாண்டு அதிகரிக்கத் திட்டம்

## மதுவரி திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

மதுவரி அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணத்தை இந்த ஆண்டு முதல் அதிகரிப்பதற்கு மதுவரித் திணைக்களம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தவை வருமாறு:-

மதுவரி அனுமதிப்பத்திரத்திற்கான வருடாந்தக் கட்டணமானது, மாநகரசபை எல்லைக்குள் 2 லட்சத்து 25 ஆயிரம் முதல் 3 லட்சம் ரூபா வரையிலும் -

நகரசபை எல்லைக்குள் 1 லட்சத்து 50 ஆயிரம் முதல் 2 லட்சம் ரூபா வரையிலும் -

பிரதேசசபை எல்லைக்குள் ஒரு லட்சத்து 25 ஆயிரம் முதல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலும் அதிகரிக்கப்படவுள்ளன.

அரசுக்கு அதிகவருமானத்தை ஈட்டித்தரும் நிறுவனங்களில் மதுவரித் திணைக்களம் முக்கியமானது. மதுபாவனை நாட்டில் அதிகரித்து வருவதாலேயே அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அண்மையில் மதுவரி செலுத்தாது மதுபான விற்பனையில் ஈடுபட்ட விற்பனையாளர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இவர் பல கோடி ரூபாவை மதுவரியாகச் செலுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது - இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (சி)



வடமராட்சி புலோலி சின்னத்தாய் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற திரவாசக முற்றோதலின் போது

# வலி. தென்மேற்கில் இளவயதுத் திருமணங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.4

வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில் இளவயது திருமணங்கள் அதிகரித்துள்ளன.

இளவயது திருமணங்களை குறைப்பதற்கு கிராம அலுவர், சமுர்த்தி அலுவர் மட்டுமன்றி பொதுமக்களும் இதனைக் கட்டுப்படுத்த முன்வரவேண்டும்.

வலி தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயம் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதேசமட்டக் கண்காணிப்பு குழுக் கூட்டம் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:

எமது பிரதேசத்தில் இளவயது திருமணங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான திருமணங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும் கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் ஆகியோர் முன்வரவேண்டும்.

எனவே எமது அலுவர்கள் கிராமிய மட்டத்தில் பொது அமைப்புக்களை வலுப்படுத்தி இளவயது திருமணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

முன்பள்ளி மாணவர்களின் போஷாக்கை அதிகரிக்கும் நோக்குடன் முன்பள்ளி மாணவர்களுக்கு பசுப்பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே முன்பள்ளி ஆசிரியர்கள் பசுப்பால் பெறுவதை ஊறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எமது வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு சிறுவர் இல்லங்கள் தவிர்ந்த ஏனைய இல்லங்கள் யாவும் மிகவும் மோசமாக இயங்குகின்றன. எதிர்காலத்தில் இவ்வாறான இல்லங்களை மூடுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். சிறவர் இல்லங்களில் உள்ளபிள்ளைகள்வறுமை மற்றும் போசாக்கின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவர், கிராம அலுவர் ஆகியோர் தத்தமது பிரிவில் உள்ள சிறவர் இல்லங்களை மாதமிருமுறை பார்வையிட்டு அறிக்கையிட வேண்டும் - என்றார்.

(ஐ-302)

# வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும்

அச்சுவேலி, பெப். 04

வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மாணவர்கள் உரிய முறையில் கடைப்பிடிப்பது நடந்தால் போக்குவரத்தினால் ஏற்பட்டுவரும் விபத்துக்கள் உயிரிழப்புக்களை பெருமளவில் தவிர்க்கப்படும்.

எனவே மாணவர்கள் தங்களது தனிப்பட்ட நலன்களையும் சமூகத்தினது நலன்களையும் கருத்திற்கொண்டு வீதிப் போக்குவரத்து ஒழுங்குமுறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து நடக்க வேண்டும் என யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவைச்சேர்ந்த ஜெயதிலக தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குமுறை தொடர்பான விழிப்புணர்வு செயல்முறைக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்:

யாழ். மாவட்ட அண்மைக் காலத்தில் வாகனப் போக்குவரத்தின் தொகை அதிகரித்துக் காணப்படுகிறது. இதில் கணிசமான தொகையினர் மணவர்கள்.

மாணவர்கள் வீதிப்போக்குவரத்து ஒழுங்கு முறையை உரியவாறுபேணி நடத்தினால் பெருமளவில் விபத்துக்களை தடுத்து நிறுத்தலாம். இதனால் உயிர் இழப்புக்கள் உடல் அவயங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதி முறை தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். மாணவர்கள் சமூகத்தில் வழிகாட்டிகளாக நடந்து போக்குவரத்துவிதியை ஒழுங்காக பேணுவதோடு தமது சுற்றாடலில் உள்ளவர்களும் அதனை தெரியப்படுத்த வேண்டும்.

இலங்கையில் வருடாந்தம் 2500 இற்கு மேற்பட்டோர் வாகன விபத்துகளில் உயிரிழக்கின்றனர். அதில் பெரும்பாலானோர் மாணவர்கள் என்பதை அண்மைக்கால மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. எந்த ஒரு நிறுவனத்துக்கோ அல்லது பாடசாலைக்கோ அடித்தளமாக இருந்து உதவுவது விதிமுறைகள் கட்டுப்பாடுகள் ஆகும். அவற்றை உரிய முறையில் பேணும்போது குறித்த நிறுவனம், பாடாலை வளர்சி அடைகின்றது. அதே போன்று வீதிப்போக்குவரத்து விதிமுறைகள் ஒழுங்குகள் வகுக்கப்பட்டுள்ளன. அதனை உரிய முறையில் பேணாமல் விடும் போது பெருமளவில் பாதிப்பும் உயிரிழப்பும் ஏற்படுகின்றன. வீதியில் நடந்து செல்லும் பாதசாரிகள் விழிப்புணர்வாக உரிய ஒழுங்குமுறையை பின்பற்றினால் பல்வேறு விதமான பாதிப்புக்களில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு கட்டுப்பாடு இன்றி நடப்பவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.

(ம-11)

# ஆன்மீகப் பயணத்தின் அடையாளம் ஞானச்சுடர்

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இயங்கிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல துறை சார்ந்த பணிகளில் ஒன்றாக 'ஞானச்சுடர்' ஆன்மீக மாத சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

சைவத் தமிழ் ஆக்க இலக்கிய வரலாற்றில் பதினான்காவது ஆண்டில் தடம்பதித்து தொடர்ந்தும் புதுமையும், பொலிவும் கண்டு வரும் ஒரு ஆன்மீக மலர் என்ற வகையில் ஞானச்சுடரின் பணி மகத்துவமானது.

ஒவ்வொரு மாதத்தினதும் இறுதி வெள்ளிக்கிழமை தோறும் இந்த ஞானச்சுடர் ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேட வாராந்த நிகழ்வின் போது வெளியிடப்பட்டு வருகின்றது. ஆன்மீக மயப்பட்ட அவையிலேயே அறிஞர் பெருமக்களால் முறைப்படியான வெளியீட்டுரை, மதிப்பீட்டுரைகள் ஆற்றப்பட்டு இந்த மலர் வெளியீடு செய்யப்படுகின்றது. இவ்வாறான தொரு நிகழ்வும், பாரம்பரியமும் யாழ்ப்பாணத்து ஆன்மீக ஒழுகலாற்றையும் அதன் தனித்துவப் பண்பாட்டையும் அடையாளப்படுத்துவதாக அமைகிறது.

1998 தை மாதத்திலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஞானச்சுடர் காலத்துக்குக் காலம் உள்ளடக்கத்திலும், புறப் பொலிவிலும் மட்டுமல்லாது வாசகர் வட்டத்தைப் பொறுத்த மட்டிலும் பெருவளர்ச்சி கண்டுள்ளது. அதனால்தான் ஒரு சிலருடன் ஆரம்பித்த இந்த மலர் தற்போது 2,500 இற்கும் மேற்பட்ட வாசகர்களின் கரங்களில் மாதா, மாதம் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஞானச்சுடரின் உள்ளடக்க வரலாற்றைப் பொறுத்த வரையில் அது விழுதுகளுடன் கூடிய பெரும் ஆல விருட்சத்திற்கு ஒப்பானது. தனித்தனி கட்டுரைகளிலிருந்து தொடர்கட்டுரைகளும், ஆய்வுக் கட்டுரைகளும், ஆனந்த அனுபவங்களை அடியவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அனுபவக் கட்டுரைகளும், சுய ஆக்கக் கவிதைகளும், புராண இதிகாச ஆய்வுகளுமாக தற்போது ஞானச்சுடர் தனது உள்ளடக்கத்தை கொண்டமைகின்றது.

மலரின் தொடக்கத்திலேயே அலைபாயும் மனநிலைகளை பக்குவப்படுத்தும் குறள் வழி, நற்சிந்தனை என்பவற்றோடு சந்நிதியானுடைய பூர்வீக ஆலயத்தோற்றம், மணிக்கோபுரம் என்பன அருளையும், அறிவையும் அள்ளித்தரும் விதத்தில் அமைகின்றன. இறுதிப் பகுதிகளைப் பொறுத்த வரையில் சந்நிதியானுடைய அற்புதங்களை, அனுபவித்த அடியவர்களுடைய வரலாறு வாழ்க்கைக்கு அவசியமான யதார்த்தத் தன்மைகளுடன் ஆராயப்பட்டு வருகின்றது. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அசெளகரியமான நிலைமைகளிற் கூட மாதம் தவறாது இந்த ஞானச்சுடர் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கற்பனைக்கு அப்பாற்பட்ட இதிகாசக் கருத்துகளை தற்கால வாழ்வியலுக்கு பொருத்தப்பாடாக எடுத்துரைக்கும் அறிஞர்கள், ஆன்மீகவியலாளரின் ஆக்கங்களை தொகுத்து வைக்கும் முறையோ மிகவும் அற்புதமானது என்பதற்கும் மேலாக அவை யாவும் சந்நிதியானுடைய அருட்பார்வைக்கு உட்பட்டதென்றே கூறிவிடலாம். இவ்விதமான சிறப்பியல்புகளுடன் வெளிவரும் ஞானச்சுடரை ஒவ்வொரு மாதமும் அச்சிட்டு உருவாக்கும் சந்நிதியான் ஆச்சிரமம் பல்துறைப் பணியாற்றி வரும் ஒரு சமூக, ஆன்மீக நிறுவனமாகும். இந்த நிறுவனத்தை இயக்கி அளப்பரிய பணிகளை ஆற்றிவரும் மோகன் சுவாமிகளுடைய செயற்திறன் மிக்கதும், கண்ணியமானதுமான சேவைகளுக்கெல்லாம் அருள் வழங்கி நெறிப்படுத்தும் சந்நிதியானுடைய அற்புதங்களும், அனுக்கிரகங்களும் அளப்பரியது. சந்நிதியானும் எது தேவையோ அவற்றுக்கு அருள் கொடுப்பவனாகவும் எது நடக்க வேண்டுமோ அதற்கு அனுக்கிரகம் செய்பவனாகவும் விளங்குகின்றான்.

துரை கணேசமூர்த்தி,
ஆசிரியர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

## கால்நடைச் சங்கத்தின் கிளை கொடிகாமத்தில்

தென்மராட்சி, பெப்.04

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது கிளை நிலையத்தினை அண்மையில் கொடிகாமம், கச்சாய் வீதியில் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு அருகில் ஆரம்பித்துள்ளனர்.

சங்கத்தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற நிகழ்வினை யாழ். மாவட்ட கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் செ.சுப்பிர மணியம் நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிலையத்தில் கால்நடைகளுக்கான உணவு வகைகள், மருந்து வகைகள், பாற்பொருள்கள் ஆகியவை விற்பனவுடன் பால் கொள்வனவும் விற்பனவும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

சங்கத்தின் தலைமை அலுவலகம் சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(த-207)

## எழுத்துப் பரீட்சைக்கான திகதிகள் வழங்கல்

யாழ். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவரும் எழுத்துப் பரீட்சைக்கான திகதிகள் வழங்கப்படுகின்றன.

உரியவர்கள் அலுவலக நேரங்களில் வந்து தமக்குரிய பரீட்சைக்கான நேரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## திறந்த பல்கலை மாணவருக்கு

யாழ்ப்பாணம், பெப்.4

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா (2010/2011) ஆசிரிய மாணவர்களுக்கான கற்பித்தல் பயிற்சி நெறிக் கலந்துரையாடல் வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். பிராந்திய நிலையத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
எந்த விடயத்திலும் அக்கறையுடன் செயற்படுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த உறவினர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். கணவன், மனைவி இடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறி அன்னியோன்யம் அதிகரிக்கும். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்:**
சொந்த பந்தங்கள் தொடர்பான விடயங்களுக்காக அலையலாம். பெண்கள் வகையில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒருவருக்கு வாக்குக் கொடுத்து விட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். சில விடயங்களுக்காகப் பெரிய அளவில் செலவிடலாம். செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பலால் மாற்றி அமைக்கலாம்.

**மிதுனம்:**
உறவினர்கள் சிலரிடம் கண்டிப்புடன் நடந்து, அவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். அண்டை அயலார் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருக்க வேண்டும். விருந்தினர்கள் வருகையால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். செலவுகள் கூடும்.

**கடகம்:**
சந்தோஷமான அனுபவங்களால் சங்கடங்களை மறக்கும் நாள். உறவுப் பெண்கள் வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். அடுத்து மேற்கொள்ள உள்ள பயணங்களுக்காக இன்றே முன்னேற்பாடுகளை செய்வீர்கள். பால்ய நண்பர்களை சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

**சிங்கம்:**
குடும்ப விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பிள்ளைகளுக்கு நல்ல ஆலோசனை சொல்வீர்கள். பெரிய மனிதர்கள் சிலரிடம் யோசனை கேட்டு, சில முக்கிய காரியங்களை செய்வீர்கள். வெளியூர்களில் இருக்கும் உறவினர்கள் சிலருடன் தொலைபேசியில் பேசலாம். கடனாக, கைமாத்தாகக் கொடுத்த பணம் வரும்.

**கன்னி:**
வயிறு தொடர்பான உபாதைகளை தவிர்க்க உணவில் கவனம் அவசியம். சிறிய விடயம் ஒன்றுக்காகப் பெரிய அளவில் அலட்டிக் கொள்வீர்கள். குடும்ப விடயங்களைப் பற்றி, மற்றவர்களிடம் சொல்ல வேண்டாம். உங்களிடம் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேச விரும்பாமல் தவிர்க்கலாம். பிள்ளைகள் தொடர்பான வேலைகளுக்காக அலையலாம்.

**துலாம்:**
நடக்குமோ, நடக்காதோ என நினைத்த காரியம் ஒன்று எப்படியோ நடந்து விடலாம். அண்டை அயலாரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் அவர்களின் வேலைகளுக்காக உங்களையும் கூட்டிக் கொண்டு அலையலாம். சகோதரிகள் வழியில் சுபச் செலவுகளை சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**விருச்சிகம்:**
எதிர்ப்புகள் விலகி ஏற்றம் பெறும் நாள். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் சேர்ப்பீர்கள். ஓய்வாக இருக்காமல் ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருப்பீர்கள். மருத்துவச் செலவுகள் குறைந்து, மனநிம்மதி பெறுவீர்கள். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**தனுசு:**
குடும்ப செலவுகள் அதிகரிக்கும். ஒரு விடயம் தொடர்பாக உறவினர்கள் அல்லது குடும்பத்தினர் சிலருடன் வாக்குவாதங்கள் செய்யலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். வழக்கமாகச் செய்யும் வேலை ஒன்றில் இன்று திடீர் மாற்றம் செய்யலாம். மற்றவர்களைப் பார்த்து சில விடயங்களில் ஆதங்கம் அடைவீர்கள்.

**மகரம்:**
புதியவர்களின் நட்பைப் பெறலாம். உடல் உபாதைகள் குறைந்து உற்சாகம், தெம்பு பெறுவீர்கள். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலை ஒன்றை நீங்கள் எளிதாக செய்வீர்கள். திட்டமிட்ட வேலைகள் சரியான நேரத்திற்கு நடக்கலாம். உறவினர்கள் சிலர் உங்களிடம் உதவி கேட்கலாம். ஆபத்தமான பொருள்களை கவனமாகக் கையாளவும்.

**கும்பம்:**
சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். சிலர் உங்களிடம் கடனுதவி கேட்டுத் தொந்தரவு கொடுக்கலாம். குடும்பப் பெரியவர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். மற்றவர்களைப் பரிகாசம் செய்து பேச வேண்டாம். குரு வழிபாட்டின் மூலம் குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். திடீர்ப் பயணம் செல்லலாம்.

**மீனம்:**
எந்த விடயத்திலும் தடையற்ற வெற்றி பெறும் நாள். பொருளாதார நிலைமை மேம்படும். மனைவி, குழந்தைகள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். உறவினர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள்.

# அடுத்த பலிக்கடா கருணாநிதி

**இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக இடம்பெற்ற யுத்த சூழலின் போது ஜனாதி ராஜபக்ஷவுக்கும் கருணாநிதிக்கும் இடையிலான உறவு விரிசல் அடைந்து காணப்பட்ட இவர்கள் இடையே மிக நெருக்கமான உறவு காணப்படுவது பல்வேறு தரப்பினரையு ஆழ்த்தியுள்ளது.**

அரச தகவல்களின்படி கருணாநிதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் தொலைபேசி வழி உரையாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதிக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான இந்த உறவினை கலைஞரின் மகள் கனிமொழி ஊடாகவே தொண்டமான் சாத்தியமாக்கியிருக்கிறார்.

தமிழ் நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட நாள்காட்டி விநியோகிக்கப்பட்டதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட அரசியல் கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாக இந்திய ஊடகமொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயரைக் கேட்டாலே அனைவரும் கோபத்தினை வெளிப்படுத்தும் ஒரு தன்மையே தமிழ்நாட்டில் காணப்பட்டது.

ஆனால், இன்று ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட நாள்காட்டிகளைப் பாடசாலைகளில் விநியோகிக்கும் அளவிற்கு நிலைமை மாறியிருக்கிறது.

மேலும், இதுபோல் நாள்காட்டி விநியோகிக்கப்பட்டதை எதிர்த்து வீதிக்கிறங்கிப் போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் தெளிவான செய்தியினைச் கூறி நிற்கிறது.



போர் தீவிரம் பெற்றிருந்த காலப்பகுதியில் மகிந்த அரசுக்கு எதிரான போராட்டங்களை தலைமையேற்று நடத்தியவர் வேறு யாருமல்ல, தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதிதான்.

ஆனால் இன்று மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய உறவு பலருக்கு அதிசயமாகியிருக்கிறது.

இவர்களுக்கிடையில் இந்த உறவு ஏற்படுவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எஸ். தொண்டமான்தான் காரணகர்த்தாவாக இருந்திருக்கிறார்.

அண்மைய காலங்களில் அடிக்கடி தமிழ் நாட்டுக்குப் பயணம் செய்த தொண்டமான் கருணாநிதியைச் சந்தித்து அதிபர் ராஜபக்ஷவின் தகவல்களைப் பரிமாறியிருக்கிறார். இப்படித்தான் இவர்களுக்கிடையிலான உறவு ஆரம்பமானது.

குறிப்பிட்ட சில அரச தகவல்களின் படி கருணாநிதிக்கும் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் தொலைபேசி வழி உரையாடல்களும் இடம்பெற்றிருக்கின்றன.

தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதிக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் இடையிலான இந்த உறவினை கலைஞரின் மகள் கனிமொழி ஊடாகவே தொண்டமான் சாத்தியமாக்கியிருக்கிறார்.

கனிமொழிக்கும் தொண்டமானுக்கும் இடையில் நெருங்கிய நட்பு இருப்பதாகத் தெரிகிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்று இலங்கைக்கான சுற்றுப் பயணத்தினை மேற்கொண்டிருந்தது.

இந்தக்குழுவில் அங்கம் வகித்திருந்த கனிமொழியும் இலங்கையின் வடக்குப் பகுதிக்கு வந்திருந்தார். இதனைத் தொடர்ந்துதான் கனிமொழிக்கும் தொண்டமானுக்கும் நட்பு ஆரம்பித்திருக்கிறது.

இதற்கு முன்னர் கருணாநிதியும் அவரது மகள் கனிமொழியும் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவே செயற்பட்டுவந்தார்கள்.


# ?

...பதி மஹிந்த
...ு. தற்போது
...ம் வியப்பில்



போர் முடிவுக் கட்டத்தினை நெருங்கியிருந்த வேளையில் மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான கருத்துக்களை இவர்கள் இருவரும் வெளிப்படையாகவே வெளியிட்டு வந்தார்கள்.

இதன்போது விடுதலைப் புலிகள் அமைப்பினையும் அதன் தலைவர் பிரபாகரனையும் ஆதரித்து மாநிலம் தழுவிய போராட்டங்களையும் கருணாநிதி ஒழுங்கு செய்திருந்தார்.



எல்லாவற்றையும் விட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டபோது அவரது நினைவாக கருணாநிதி கவிதை ஒன்றையும் எழுதியிருந்தார். போர் முடிவுக்கு வந்த பின்னரும் கூட இலங்கை அரசு அகதிகளை மோசமாக நடத்துகிறது எனக் கூறி கருணாநிதியும் மகள் கனிமொழியும் பல்வேறு அறிக்கைகளை விடுத்திருந்தார்கள்.

போர் முடிவுக்கு வந்த சில மாதங்களின் பின்னர் கருணாநிதி விநோதமானதொரு அறிக்கையினை விடுத்திருந்தார்.

இலங்கையினது வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டுமெனில் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுக்களை மேற்கொள்வது அவசியமானது என கருணாநிதி அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பணி செய்யாமல் தீர்வு எதனையும் கொண்டுவரமுடியாது என்றார் அவர்.

கருணாநிதியின் இந்தத் திடீர் மாற்றம் பலதரப்பட்ட மக்கள் மத்தியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆனால், கனிமொழி ஊடாக மகிந்தவிற்கும் கருணாநிதிக்கும் இடையில் தொண்டாமானின் கடுமையான உழைப்பின் பயனாகக் கொண்டுவரப்பட்ட 'உடன்பாடு' பற்றி அறிந்தவர்கள் கருணாநிதியின் இந்த அறிக்கை தொடர்பில் அதிர்ச்சியடையவில்லை.

இந்த உடன்பாட்டின் பின்னர்தான் இலங்கையின் வடக்கு, கிழக்கில் அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் நிலை தொடர்பாக நேரடியாக அறிந்து கொள்வதற்காகத் தமிழ்நாட்டு சட்டசபை உறுப்பினர்கள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் செய்தது.

இந்தக் குழுவில் கனிமொழியும் அங்கம் வகித்தார். தமிழ்நாட்டு சட்டசபை உறுப்பினர்களின் இலங்கைக்கான பயணத்தின் இறுதிக் கட்டத்தினை அடைந்தபோது கருணாநிதி மகிந்தவின் நண்பனாக மாறினார்.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் தமிழ்நாட்டில் இறுதியாக இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் கருணாநிதி மஹிந்த எதிர்ப்பு நிலைப்பாட்டினையே எடுத்திருந்தார். அந்தத் தேர்தலில் கருணாநிதி பெருவெற்றியினைத் தனதாக்குவதற்கு அவர் மஹிந்த எதிர்ப்பு நிலைப்பாட்டினை எடுத்ததும் ஒரு காரணம்.

ஆனால், தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், தமிழர்களது விடயத்தினைக் கையிலெடுக்கும் தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சி தனது வாக்கு வங்கியினைப் பலப்படுத்திவிடக்கூடும் என்ற அச்சம் கருணாநிதிக் குத் தற்போது எழுத்திருக்கிறது.

இந்த நிலையில்தான் தமிழ்நாட்டிலுள்ள பாடசாலைகளில் அதிபர் மகிந்த ராஜபக்ஷவின் உருவப்படம் பொறிக்கப்பட்ட நாள்காட்டிகள் விநியோகிக்கப்படுவதற்கு கருணாநிதி அனுமதித்திருக்கிறார் போலும்.

தனது அரசியல் சாணக்கியத்தைப் பயன்படுத்தியே மஹிந்த ராஜபக்ஷ கருணாநிதியினை வென்றிருக்கிறார். அதே சாணக்கியத்தினையே ராஜபக்ஷ ஐ.நாவினது செயலாளர் நாயகம் பன் கீ மூனுக்கும் பிரயோகித்திருந்தார்.

மஹிந்தவினது இராஜதந்திர முனைப்புக்களின் விளைவாகவே பன் கீ மூன் தான் அமைத்த வல்லுநர்கள் குழுவினைச் சிறிலங்காவிற்கு அனுப்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார் எனச் சிலர் கூறுகிறார்கள்.

மஹிந்தவின் சாணக்கியத்திற்குப் பலிக்கடாவான அடுத்த நபர் கருணாநிதியா? இல்லையா? என்பது தமிழ்நாட்டில் இடம்பெறவுள்ள மாநிலத் தேர்தல்களின் பின்னர்தான் தெரியவரும்.

# யாண்டும் இடும்பை இல



அவர் ஒரு விசித்திரமான குரு. தன்னிடத்தில் ஞானம் தேடி வருகிற சீடர்களுக்கு ஒரு சின்ன மூட்டை உருளைக் கிழங்கைப் பரிசாகக் கொடுப்பார். குருவைப் பார்க்கப் போகிறவர்கள் காணிக்கையாகப் பழங்கள் படைப்பதற்குப் பதிலாகக் குருவே உருளைக் கிழங்கு மூடையை வழங்குகிறார் என்றால் விசித்திரம் தானே.

உருளைக்கிழங்கு மூட்டையைப் பெற்றுக் கொண்ட சீடர்கள் சந்தோஷத்தில் மிதப்பார். குருவின் உத்தரவு வரும்வரைதான் இந்தச் சந்தோசம். உத்தரவு வந்ததும் சந்தோஷம் சருகாகிவிடும்.

இந்த உருளைக்கிழங்கு மூடையை எப்போதும் உன்னுடனேயே வைத்துக்கொள்; படுக்கும்போது, பயணிக்கும்போதும் பிரியக்கூடாது. எங்கு போனாலும் உடன் எடுத்துப்போ. என்னைப் பார்க்க வரும் போது கையோடு கொண்டுவா இன்று முதல் இது உன்னுடைய இன்னொரு உறுப்பு என்று உறுதியுடன் உத்தரவிடுவார் குரு.

ஒரு நாள், இரு நாள் பிரச்சினை பெரிதாகத் தெரியாது... ஒரு வாரத்தில் சிக்கல் தொடங்கும்; அழுகத் தொடங்கும். உருளைக் கிழங்கின் துர்நாற்றம் போகும் இடமெல்லாம் அளவு கடந்த சிரமத்தையும் துயரத்தையும் தரும். எனவே சீடர்கள் குருவிடம் கெஞ்சுவார்கள் என்ன செய்வது அந்த மூடையை எறிந்து விடலாமா?

குருவே எங்களால் சுமக்க முடியவில்லை அதை விடக் கொடுமை சகிக்க முடியவில்லை அதன் துர்நாற்றம்; வழிகாட்டுங்கள், உத்தரவு விடுங்கள், என்று தவிதவிப்பார்கள்; குரு சம்மதிக்கமாட்டார்.

பொறுக்க முடியாமல் ஒருநாள் குருவே "நாங்கள் உங்கள் உத்தரவை மீறுவதைத் தவிர வேறு வழியே இல்லை. நீங்கள் அனுமதிக்காவிட்டாலும் நாங்கள் போய்க் குப்பையில் கொட்டிவிடுவோம் கொடுமையாக இருக்கிறது" என்று புலம்பினார்கள். குரு புன்னகைத்தார்.

உருளைக்கிழங்கைக் குப்பையில் கொட்டலாம். ஆனால் உங்களில் எத்தனை பேர் உங்கள் வாழ்வில் நடந்த துயரங்கள், துக்கங்கள், ஏமாற்றங்கள், வஞ்சனைகள் இவற்றை வெளியில் கொட்டினீர்கள்? பல வருடத்துக்கு முன்பு ஏற்பட்ட கவலை, வெறுப்பு இவற்றையெல்லாம் மனதிற்குள் அழுக அழுகச் சுமந்து திரிகிறீர்கள்.

மன்னிக்கவோ மறக்கவோ முடியாமல் பிறரது துரோகங்களை எண்ணி எண்ணி வருந்துகிறீர்கள். அந்த அழுகலை எறிய மனம் வரவில்லை. அதன் துர்நாற்றத்தோடு அவை கஷ்டமாகத் தெரியவில்லை. ஆனால் இந்தச் சின்ன உருளைக்கிழங்கின் துர்நாற்றத்தை விரட்ட விரும்புகிறீர்கள்... யாரால் பழைய பகை, அழுகிய துரோகம், நெருப்பாய் எரிக்கும் வெறுப்பு இவற்றை வெளியில் கொட்ட முடியுமோ அவர்கள் இந்த அழுகிய கிழங்குகளையும் வெளியே கொட்டலாம். அனுமதிக்கிறேன் என்றார் குரு. சீடர்களுக்கு நிம்மதி பிறந்தது.

மனிதர்கள் பல ஜென்மத்துப் பகைமைகளை மனதில் சுமந்து திரிகிறார்கள். உலகமெங்கும் வெறுப்பை உமிழ்த்து நெருப்பை ஊதுகிறார்கள். அதேநேரம் புதியபுதிய விருப்பைத் தேடி அலைகிறார்கள் விருப்பு கானல் நீர், வெறுப்பு கனவுப்புகை என்கிற விவேகம் இன்றி செயற்படுகிறார்கள். மனிதனது எந்தச் செயலும் விருப்பு அல்லது வெறுப்பு என்கிற சொந்த மையத்திலிருந்தே புறப்படுகிறது. விருப்பு வெறுப்பு இரண்டும் அற்ற நிலை என்று ஒன்று உண்டு. அதிலிருந்து செயற்படுவதே ஞானம் என்பதைப்பலரும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

வேடிக்கைக்காகச் சொல்கிறேன். ஒரு நோயாளியைப் பரிசோதித்த அறுவைச் சிகிச்சை நிபுணர் பரபரப்புடன் சொன்னார். "அவசரமாக இந்தச் சத்திர சிகிச்சையைச் செய்தாக வேண்டும். மிக அவசரம் என்றார் நோயாளி "இப்போது அப்படியென்ன அவசரம் டாக்டர்? நான் நன்றாகத் தானே இருக்கிறேன்" என்று உறுதியாக மறுத்தார். "உனக்கு அவசரமோ இல்லையோ எனக்கு அவசரம். நர்ஸிங் ஹோம் கட்ட வாங்கின வங்கிக்கடனுக்கு வட்டிகூடக் கட்ட முடியவில்லையே" என்றார் டாக்டர். எப்படி முடிவு எடுக்கிறார்கள். தம் விருப்பமே பிரதானம். முடிவுகள் முடிவுகளுக்காக எடுக்கப்படுவதில்லை. விருப்பு அல்லது வெறுப்பு உள்ளிருந்து காய் நகர்த்திவிடுகிறது.

இவ்விடத்தில் ஒரு மேலே நாட்டுத்துணுக்கைக் குறிப்பிடலாம். சாகக் கிடந்த இளம் கணவன் தன் மனைவியைப் பார்த்து "அன்பே நான் இறந்த பிறகு நீ விதவையாக வாழக்கூடாது; என் நண்பன் லாரன்ஸைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும். கண்டிப்பாக லாரன்ஸை மணம் செய்து கொள்வேன் என்று சத்தியம் செய்து கொடு" என்று வற்புறுத்தி இருக்கிறான். கலவரம் அடைந்த "மனைவி உங்களுக்கு நினைவு பிறழ்ந்து விட்டதா? லாரன்ஸ் உங்கள் கடும் பகைவன் அல்லவா! எதிரி அல்லவா! நேற்றுக்கூடக் கொல்ல வேண்டும்" என்று புலம்பினீர்களே?

இப்போது அவரைத்திருமணம் செய்யும்படி என்னிடம் கேட்பது ஏன்?" என்றான். அவனைப் வாழ்நாள் முழுவதும் பழிவாங்க நினைத்தேன். முடியவில்லை என் மரணத்தின் மூலமாவது அது நிறைவேறட்டும் உன்னை மணப்பதன் மூலம் அவனைப் பழிவாங்கி விடலாம் அல்லவா! என்றபடி கணவன் உயிர் பிரிந்தது.

வேடிக்கைத் துணுக்குத்தான் ஆனால் மனிதர்களின் இயக்கம் செயற்பாடு செயலுக்கான உந்து சக்தி, விருப்பு அல்லது வெறுப்புத் தான். மேலை நாட்டு மனோவிஞ்ஞானிகள் விருப்பம் இன்றி ஆசையின் துண்டுதல் குன்றிச் செயல் நிகழவே முடியாது என்று உறுதியாக அறிவிக்கிறார்கள். ஆனால் கிருஷ்ணாவோ, அர்ச்சுனனைப் போரில் செலுத்தும் போது விருப்பு வெறுப்பின்றிச் செயற்படும் கர்மயோகத்தின் இரகசியத்தை விளக்கி "இதைச் செய்ய நீ கடமைப் பட்டவன். இதன் லாப நட்டங்களைப் பெரிதுபடுத்தாதே கடமையைச் செய்... பயனில் பற்றுதலின்றிச் செயலைச் செயலுக்காகச் செய்" என்று பேசுகிறார்.

இதனால்தான் பகவத்கீதை உலகிலேயே வித்தியாசமான ஒரு வழிகாட்டுதலாகப் பார்க்கப்படுகிறது. எல்லா மதங்களிலும் மக்களை நல்வழிப்படுத்த சொர்க்கம், தேவலோகம் மோட்சம் என்கிற ஆசைக்கனவை விதைத்துத்தான் மனிதனைச் செயற்பட வைக்கிறார்கள்.

சு.கி.சிவம்


# இணையத்தில் ஏமாற வேண்டாம்

இணையம் மற்றும் ஈ-மெயில் வழிகளில் பலர் ஏமாற்றப்படுவதாகச் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

சிறிது சலனப்பட்டாலும், நாம் நிதானம் தவறி, நம்மை ஏமாற்றத் திட்டமிடுபவர்களின் வலைகளில் விழுந்து நம் நிம்மதியையும் நிதியையும் இழந்துவிடுகிறோம்.

இதுபோல பலியாகாமல் இருக்க, நாம் எடுக்க வேண்டிய சில முன்னெச்சரிக்கைகள்

1. முற்பணம் கட்டாதீர்கள்:



ஏமாற்றப்படும் பல வேளைகளைப் பட்டியலிட்டால், முற்பணம் கட்டச் சொல்லி அழைக்கும் அழைப்புகளுக்குப் பலியாவோரே அதிகமாய் இருப்பதைப் பார்க்கலாம். பெரிய பரிசு உள்ளது, கடன் தீர்க்கப் பணம் தருகிறோம், பெரிய வேலை உங்களுக்கு மட்டுமே தருகிறோம், இலவசமாய் இயக்கிப் பார்க்கலாம் எனச் செய்திகளைத் தந்து, தூண்டிவிட்டு, பின்னர் அதற்குச் சரி என்கையில், முற்பணமாக ஒரு தொகையைச் செலுத்தச் சொல்லி அழைப்பு வரும். இதனை மிக அழகாக நியாயப்படுத்தியும் செய்தி தரப்படும்.

பெரியளவில்தான் பணம் அல்லது உதவி கிடைக்கப் போகிறதே, செலுத்தினால் என்ன என்று ஒரு கணம் எண்ணிவிட்டால், உங்கள் பணம் அவ்வளவு தான். அல்லது தொடர்ந்து மேலும் மேலும் பணம் செலுத்தக் கட்டாயப்படுத்தப்படுவீர்கள். இதுபோல செய்திகளை, அது எந்த இடத்திலிருந்து வந்தாலும் உதாசீனப்படுத்திவிடுவதே, நாம் பலியாகாமல் இருக்க ஒரே வழி.

2. கணக்கிலக்கம் தரலாமா?

ஈ-மெயில்களை அனுப்பி உங்களை வீழ்த்தும் பெரும்பாலான 'ஸ்கேம்' செய்திகளில், உங்களுடைய வங்கிக் கணக்கு எண், இணையத்தள ரகசியக் குறியீடு கேட்டு வரும் ஈ-மெயில்களே அதிகம். கணக்கு எண் மற்றும் தகவல்களைக் கொடுத்துவிட்டால், உங்கள் கணக்கு அவ்வளவுதான். ஒரு சதம்கூட அதில் இருக்காது. நீங்கள் சரியான இணையத்தளத்தில் பொருள் வாங்குவதாக இருந்தாலும் உங்கள் இலத்திரனியல் வணிகஅட்டை மட்டுமே பயன்படுத்தவும்.

3. தானாக தனி நபர் தகவல் தரலாமா?

ஒரு சிலர் ஈ-மெயில் செய்தியில் வரும் ஏமாற்று வார்த்தைகளை நம்பி, தங்களைப் பற்றிய தனி நபர் தகவல்களைத் தந்துவிடுவார்கள். சிலர் தாங்கள் பணியாற்றும் நிறுவனம் குறித்த தகவல்களையும் தங்களை அறியாமல் தந்து மாட்டிக் கொள்வார்கள். இதுபோன்ற விடயத்தில் அதிக கவனத்துடன் நடந்து கொண்டு, மாட்டிக்கொள்ளும் நிகழ்வினைத் தவிர்க்க வேண்டும்.


4.போலி பேஸ்புக் செய்திகள்:

பேஸ்புக்கில் கணக்கு இல்லாமல் இருந்தால் கூட, உங்கள் ஈ-மெயிலில் பலவாரியாகச் செய்திகள் வரும். புகழ்பெற்றவர்கள் மாட்டிக்கொண்டார்கள் - அது பற்றி அறிய வேண்டுமா? என ஒரு செய்தி உங்கள் ஈ-மெயிலுக்கு வரும். பேஸ்புக் கணக்கை ஒருவர் நீக்கிவிட்டார், நீக்கியவர் யாரெனத் தெரியும். மீண்டும் கணக்குத் தொடங்கலாமே என்று ஒரு செய்தி வரும். இது போன்ற செய்திகள் எல்லாம், உங்களைச் சிக்க வைக்கத்தான்.

5. வீடு தேடி வரும் பொருள்களை இணையத் தளத்தில் வாங்க வேண்டாம்:

இணையத் தள வர்த்தகம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. பலர் இதில் பொருள்களை வாங்கிப் பயன் பெற்று வருகின்றனர். ஆனால், நாம் நாள்தோறும் நம் வீட்டு வாசலில் விற்பனை செய்யப்படும், அடுத்த கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருள்களை, இணையத் தளத்தில் வாங்க வேண்டுமா? விலை குறைவாகக் காட்டிப் பின்னர், அனுப்பும் செலவு, செயல்படும் செலவு, இணைய வரி எனப் பல தலைப்புகளில் காசைக் கறந்துவிடுவார்கள்.

# குடல் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் நாய்கள்




மனிதர்களுக்குக் குடல் புற்றுநோய் ஏற்பட்டு உள்ளதா? இல்லையா? என்பதை 90 சதவீதம் துல்லியமாகக் கண்டறியும் சக்தி நாய்களுக்கு உண்டு என்று மருத்துவ உலகம் கண்டுபிடித்து உள்ளது.

பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொள்கின்றனர். நாய்களின் உணர்திறன் மனிதர்களின் உணர்திறனை விட 1000 மடங்கு அதிகம்.

எனவே மோப்ப சக்தியால் நாய் குடல் புற்றுநோயை அடையாளம் கண்டு விடுகின்றது. நாய்களைக் கொண்டு இந்நோயை ஆரம்பத்திலேயே அடையாளம் காண முடியும். இதனால் நோயைக் குணப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும்.

வேறு உயிர்கொல்லி நோய்களை அடையாளம் காணக் கூடிய சக்தி நாய்களுக்கு உண்டா? என்பது குறித்துத் தற்போது ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# உலகில் மிகப் பிரமாண்டமாக எந்திரன்




உலகின் மிகப் பிரமாண்டமான இராட்சத எந்திரன் சிலை சீனாவில் நிர்மாணிக்கப்பட்டு உள்ளது.

இந்த எந்திரன் 11 மீற்றர் உயரமும் 21 தொன் நிறையும் உடையது. பழைய வாகனங்களின் உதிரிப் பாகங்களை கொண்டு தயாரிக்கப்பட்டது என்பது இந்த எந்திரன் சிலையின் இன்னொரு சிறப்பு அம்சம்.

20 மோட்டார் கார்களில் இருந்து பெறப்பட்ட பாகங்கள் பயன்படுத்தப்பட்டுள் ளன. அதுவும் சொந்த நாட்டுத் தயாரிப்புக்களே பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன. கடந்த 30 ஆம் திகதி இச்சிலை முழுமை பெற்றது.

சீனாவால் ஏற்கனவே அமைக்கப்பட்ட எந்திரன் சிலை ஒன்றே இதற்கு முன்னர் உலகின் மிகப் பிரமாண்டமான எந்திரன் சிலையாக இருந்தது. ஆனால் அது புதிய சிலையை விட ஒரு மீற்றர் உயரம் குறைவானது.

# உலகின் மிக நீளமான மோட்டார் சைக்கிள்




றிக்டோஸியர், பல்டெக்கர், ரொப் மோர் மற்றும் வில்லியம் இவர்கள் தான் இதுவரை உத்தியோக பூர்வமாக உலகில் மிக நீளமான மோட்டார் சைக்கிளுக்குச் சொந்தக்காரர்கள். அந்தச் சைக்கிளின் நீளம் 9.76 மீற்றர்கள்.

ஆனால் இந்தப் படத்தில் இப்போது நீங்கள் காணும் மோட்டார் சைக்கிள் இந்தச் சாதனையை முறியடித்துள்ளதாக உரிமை கோரப்பட்டுள்ளது. இதன் நீளம் 10.5 மீற்றர்கள்.

ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த மோட்டார் சைக்கிளில் 15 ஆசனங்கள் உள்ளன. இதில் 15 இருக்கைகள் உள்ள போதிலும் இந்த வண்டி எல்லோரும் ஒரேநேரத்தில் பயணம் செய்யக்கூடிய ஆற்றல் கொண்டதா எனப் பலர் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

ஒலெப்ரோகோய் என்பவர்தான் இதனை உருவாக்கியுள்ளார். உலகின் நீளமான மோட்டார் சைக்கிள் எனக் கின்னஸ் புத்தகத்தில் பதிவும் செய்யப்பட்டுள்ளது.

# மறந்து போகாமல் இருக்க வேண்டுமா?



சற்றுமுன் கேட்ட தொலைபேசி இலக்கத்தை உடனே திருப்பச் சொல்ல முடிகிறது. ஒரு மணிநேரம் கழித்து அதே இலக்கத்தை மறந்து விடுகின்றோம். ஆனால் நமது சொந்தத் தொலைபேசி எண், பிறந்த திகதி போன்ற இலக்கங்கள் என்றும் மறப்பதில்லை. ஏன் இப்படி? நமக்கு இரண்டுவித ஞாபகசக்தி இருக்கிறது.

தற்காலிக நினைவு மற்றது நிரந்தர நினைவு. நினைவுகள் யாவும் மூளையில் நரம்பு செல்களில் சேமிக்கப்படுகின்றன. ஒரு தொலைபேசி இலக்கத்தைக் கேட்டதும் அதற்கான ஒரு நரம்புக்கூட்டம் உடனே அதைப் பதிவு செய்வதில் முனைகிறது.

இந்த நரம்புக்கூட்டத்தை 'ட்ரேஸ்' என்று அழைக்கிறார்கள். நமக்கு தற்காலிக நினைவுக்கென்று ஒரு ட்ரேஸும் அதே சமயம் நிரந்தர நினைவுக்கென்று இன்னொரு ட்ரேஸும் ஒரே சமயத்தில் மூளையில் உருவாகிறது.

ஒரு சம்பவத்தை அல்லது தகவலை முதல் முறையாகக் கேட்கும்போது அல்லது படிக்கும்போது அது இரண்டுவித டிரேஸிலும் பதிகின்றது. தற்காலிக டிரேஸ் வேகமாக உருவானாலும் அது உடனே கலைந்து விடுகிறது.

நிரந்தர டிரேஸ் மெல்ல ஆசுவாசமாக உருவாகிறது. அது முடிவடைய வேண்டுமானால் மீண்டும் அதே சம்பவத்தை அல்லது படித்ததை நாம் அனுபவிக்க வேண்டும். நிரந்தர டிரேஸ் நரம்புக்கூட்டம் இரண்டாம் முறை, மூன்றாம் முறை தூண்டப்படும்போது அதன் டிரேஸ் முற்றுப்பெறுகிறது. முற்றுப் பெற்றதும் அது நிரந்தர நினைவாகி விடுகிறது. தற்காலிக டிரேஸ் எத்தனை முறை தூண்டப்பட்டாலும், அது உடனே கலைந்துவிடுகிறது. ஈக்குக் கூட தற்காலிக, நிரந்தர நினைவுகள் இருக்கிறன என்று கோல்டு ஸ்பரிங் ஹார்பர் ஆய்வுக்கூடத்தின் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். ஈயை சின்னக் குழாயில் வைத்து அதில் கெட்ட நாற்றமுடைய காற்றை அனுப்பும்போது, கூடவே லேசாக மின்சார ஷாக் கொடுப்பார்கள். அதன் பிறகு ஈக்கு ஷாக் கொடுக்கும் போதெல்லாம் துர்நாற்றக் காற்றை அந்த ஈ எதிர்பார்க்கும். அல்லது துர்நாற்றக் காற்று வரும்போதெல்லாம் ஷாக் அடிக்குமோ என்று அஞ்சும்.

மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லாருக்கும் ஒரு செய்தி. எதை நீங்கள் நிரந்தரமாக நினைவில் பதித்துக்கொள்ள விரும்புகிறீர்களோ அதை முதலில் தற்காலிகமாக நினைத்துப் பாருங்கள். மீண்டும் அதை மறுபடி மறுபடி மூன்று முறையாவது கொஞ்ச நேரம் இடைவெளிவிட்டு நினைவுகூட்டிப் பாருங்கள் அதன் பிறகும் அது மறக்கிறதா என்று பாருங்கள்.

# 64.8 மில்லியன் வயது டைனோசரின் எலும்புகள்



64.8 மில்லியன் வயது உடைய டைனோசர் ஒன்றின் எலும்புகளின் எச்சங்கள் கனடாவைச் சேர்ந்த பல்கலைக்கழகத்தினர் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன.

இந்த டைனோசர் சுமார் 700, 000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து இருக்கின்றது. டைனோசர்கள் தாவர உண்ணிகள். டைனோசர்கள் காலநிலை மாற்றங்கள் காரணமாக முற்றாக அழிந்துவிட்டன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# இயக்கச்சி மல்வில் கிருஷ்ணன் ஆலயம்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

இலங்கையில் காத்தல் கடவுளான விஷ்ணுவும் அழித்தல் கடவுளான சிவனும் ஒரே இடத்திலிருந்து அருள்பாலிக்கும் அற்புதத் திருத்தலமாக இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் கோயில் உள்ளது.

ஆலய தீர்த்தக்கேணி புனித நீரானது மல்வில்குளம் ,வண்ணான் குளம், கொல்லங்குளம் ஊடாக ஆனையிறவு கடலேரியில் சங்கமிப்பது இன்றும் உண்டு.

ஆனையிறவுக் கடலேரி மீன் இனங்கள் ஆலயக் குளத்திற்கு வந்து செல்கின்றன.

ஆலயத்தைச் சூழவுள்ள பகுதிகளில் ஊர்வணிகன்பற்று, முகாவில், முருகானந்தநகர், மாசார், கரந்தாய் போன்ற கிராமங்கள் காணப்படுகின்றன. ஆலயத்தின் உபயகாரர்களாக இயக்கச்சி, ஊர்வணிகன்பற்று , பேராலை,வண்ணான்கேணி, முல்லையடி, முகாவில்,மாசார், சங்கத்தார்வயல், கோயில் வயல், வடமராட்சி கிழக்கு, பளை,தர்மக்கேணி, சோரன் பற்று போன்ற பிரதேசத்த வர்கள் இன்றும் உபயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.


இந்தப் பிரதேசங்களில் மக்களின் பிரதான தொழில்களாக நெற்பயிர்ச் செய்கை, உப உணவுப் பயிர்ச் செய்கை, நிலக்கடலைச் செய்கை, கால்நடை வளர்ப்பு, தெங்கு உற்பத்தி போன்றவை காணப்படுகின்றன.

ஆலய மூலஸ்தானம் மிகப் பழைமை வாய்ந்தது என்பதால் அதனைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிப்பு வேலைகள் நடைபெற்று வரும் வேளையில் 1990 ஆம் ஆண்டில் ஆனையிறவுச் சூழலில் ஏற்பட்ட யுத்த சூழல், கட்டடப்பொருள்களின் தட்டுப்பாடு காரணமாகத் திருப்பணி வேலைகள் தடைப்பட்டன. தடைப்பட்ட திருப்பணி வேலைகள் மீண்டும் 2004 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வரும்போது 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் திருப்பணி வேலைகள் மீண்டும் நிறுத்தப்பட்டு நித்திய பூஜைகளும் கைவிடப்பட்டன.

1991, 2000, 2006 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்த வேளையில் ஆலயக் கட்டடங்கள் மிக மோசமாகச் சேதமடைந்தன. அங்கிருந்த வாகனங்கள், தளபாடங்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் யாவும் 2006 ஆம் ஆண்டு யுத்த வேளையில் முற்றாகச் சேதமடைந்தன.

2010 ஆம் ஆண்டு அப்பகுதியில் மீளக்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டதையடுத்து ஆலயத்தில் நித்திய பூஜை செய்வதற்காக பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் தற்காலிகக் கொட்டிலில் சொரூபங்கள் வைக்கப்பட்டு நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன. 2010 நவம்பர் மாதம் புதியதோர் ஆலயம் அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வேண்டுவதை அளிக்கும் எம்பெருமான் திருக் கோயிலை மீண்டும் புனர்நிர் மாணம் செய்ய அடியார்களின் அர்ப்பணிப்பான உதவிகளை ஆலய அறங்காவலர்சபை வேண்டிநிற்கிறது.

1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை காலத்துக்குக் காலம் ஏற்பட்ட யுத்தம், விமானத்தாக்குதல், எறிகணைத் தாக்குதல்களால் அழகிய ஆலயச் சூழல் பொலிவிழக்க நேரிட்டது. சூழவிருந்த தென்னந்தோப்புகள் அழிந்தன. ஆலயத்தின் அழகிய நந்தவனம் பராமரிப்பின்றி அழிந்தது. எழிற்கோலங்கொண்ட கட்டடங்களும் வெவ்வேறு பட்ட சந்தர்ப்பங்களில் சேதமாக்கப்பட்டன, அழிக்கப்பட்டன. ஆலயத்தினை அணிசெய்த ஆலயத்தின் பசு வளங்கள் தாக்குதல்களினாலும் சில அற்பத்தனங்கள் கொண்டவர்களின் உணவுத் தேவைக்காகவும் அழிக்கப்பட்டன. எம்பெருமான் எழுந்தருளி வீதியுலா வரும் வாகனங்களும் சேதமடைந்தன. இருப்பினும் சில அடியவர்களின் அயராத முயற்சிகளாலும் அறங்காவலர்களின் முயற்சிகளாலும் இடையறாது நித்திய பூசைகளும் விசேட



தினங்களும் நிறைவேற்றப்பட்டு வந்தன. மிகத் தொன்மை வாய்ந்த ஆலய வரலாற்றிலேயே இரு தடவைகள் இப்பிரதேச மக்கள் முழுமையாக இடம் பெயர்ந்ததால் காலாகாலமாக இடைவிடாது நடத்தப்பட்டு வந்த நித்திய பூஜைகள் மாதக் கணக்கில் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டன. 1999 டிசெம்பர் மாதம் தொடக்கம் 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை அப்பகுதியில் மக்கள் எவருமின்றி நித்தியபூஜைகள் கைவிடப்பட்டிருந்தது.

2002 ஆம் ஆண்டில் ஏ-9 வீதி போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்ட பின்னர் 2002 ஆம் ஜூன் மாதத்தில் ஆலயத்தில் பிராயச்சித்தம் செய்யப்பட்டு பூஜை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் விசேட விழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை எந்தவொரு தடங்கலுமின்றி மக்கள் பெருமளவில் ஆலயப் பூஜை வழிபாடுகளிலும் விசேட தினங்களிலும் கலந்துகொண்டு வழிபட்டனர். 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மீண்டும் முகமாலைப் பாதை மூடப்பட்டதன் பின்னர் ஆலயச் சுற்றாடலில் தங்கியிருந்த மக்கள் வன்னிக்கு இடம்பெயர்ந்ததால் நித்திய பூஜைகள் கைவிடப்பட்டன.

ஆலயத்தில் இருந்த பெறுமதியான சொத்துக்களும் வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டது. மீண்டும் ஏ-9 வீதி திறக்கப்பட்ட போதிலும் ஆலயச் சுற்றாடல் பகுதி மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத நிலை நீண்ட காலமாக இருந்து வந்தது. பெரும் முயற்சியின் பயனாகக் கடந்த வருடம் 2010 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாத மளவில் அப்பகுதியில் மீள்குடியமர்வு ஆரம்பிக்கப்பட்டது.

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆலயத்திற்குச் சென்ற ஆலய அறங்காவலர்கள் ஆலய வளங்கள் அழிக்கப்பட்ட நிலையைக் கண்டனர். அழிந்த நிலையில் காணப்பட்ட ஆலயச் சுற்றாடலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து நவம்பர் இறுதி வாரத்தில் பிராயச்சித்த அபிஷேகம் மேற்கொண்டு மீண்டும் நித்திய பூஜைகள் நடத்த ஆரம்பித்தனர்.

கடந்த 1996 ஆம் ஆண்டு வரை எம்பெருமானுக்கு கிளாலி பாதை ஊடாகச் சென்று முரசு மோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கனை ஆகிய பிரதேச மக்களுடன் இணைந்து புதிர் எனப்படும் நெல் அறுவடை செய்து நெற்கதிர்களையும் புதிய நெற்பச்சையரிசியினையும் கொண்டு கால்நடையாகவும் மாட்டு வண்டில்களிலும் வந்து ஆலயத்தின் வழிபாட்டிற்கு வித்திட்டதை மறக்க முடியாது என அறங்காவலர்கள் தெரிவித்தனர்.

நெல் வயல்களில் விளைந்த நெல்லினை அறுவடை செய்து அவற்றினைக் குற்றியெடுத்த அரிசியினை,எம்பெருமான் ஆலயத்தில் பொங்கி பிரசாதத்தைப் படைத்த பின்னரே தமது வீடுகளில் புதிர் உண்ணல் மேற்கொள்வது இப்பிரதேச மக்கள் காலம் காலமாகக் கொண்டிருந்த வழக்கமாகும்

ஆலய அபிவிருத்தி கருதி ஆலய உபயகாரர்கள் இணைந்து ஆலய அறங்காவலர் தலைமையில் நிர்வாகசபை ஒன்று 1999 இல் உருவாக்கப்பட்டது. ஆலயத்தில் மிக அவசியமான திருப்பணி வேலைகளை ஆரம்பிக்கும் பணிகள் இந்த நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதி போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருந்ததால் ஏ-9 வீதியுடன் இணையக் கூடிய மற்றொரு வீதியான கலுவில் வீதியினைப் பயன்படுத்தி அபிவிருத்திக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டது. இவ்வீதி ஏ-9 வீதியிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தூரத்தில் ஆலய மேற்கு வீதியை வந்தடையக் கூடியதாகும்.

(தொடரும்)

# சாவகச்சேரி லயன்ஸ் கழகம்

(சென்றவாரத்தொடர்ச்சி.....)

**1979** ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதே சாவகச்சேரி லயன்ஸ் கழகமாகும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தில் தலைமைப் பொறுப்பில் இருந்த பலர் மாவட்ட ஆளுநர்களால் பல்வேறு மட்டத்தில் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டனர். வலயத்தலைவர்கள், பிராந்தியத் தலைவர்கள், மாவட்டத் தலைவர்கள், மாவட்ட இணைப்பாளர்கள் போன்றோர் மாவட்ட ஆளுநர் சபை உறுப்பினர்களாக அந்தந்த மாவட்ட ஆளுநர்களால் நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றனர்.

306 பி 1 மாவட்டத்தின் ஆளுநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட முன்னர் உதவி ஆளுநர்களாகக் குறிப்பிட்ட ஒரு தொகுதியினர் நியமிக்கப்பட்டுப் பணியாற்றினர். அந்த உதவி ஆளுநர் பதவிக்கு இக்கழகத்தைச் சேர்ந்த லயன் கே.வி.முத்துக்குமாரசாமி பணியாற்றியிருந்தார்.




அவ்வாறான மாவட்ட ஆளுநர் சபைக்கு நீண்ட காலத்தின் பின்னர் உயர்பதவிகளில் ஒன்றான பிரதிப் பொருளாளர் பதவிக்கு இக்கழகத்தைச் சேர்ந்த லயன் வ.ஸ்ரீபிரகாஸ் கடந்த வருடம் (2010) நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார்.

லயன்சி.சிவபாலசுப்பிரமணியம் தலைவராக இருந்த காலத்தில் கழகம் மேற்கொண்ட சேவைகளின் பயனாக அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் பத்து தையல் இயந்திரங்கள் கழகத்திற்கு வழங்கப்பட்டது. தலைவர் லயன் வ.ஸ்ரீபிரகாஸ் காலத்தில் இந்தத் தையல் இயந்திரங்களைக் கொண்டு இலவச தையல் பயிற்சியினை கழக அலுவலகத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்து கட்டம் கட்டமாக யுவதிகளுக்குத் தையல் பயிற்சி வழங்கிப் பயிலுநர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் தையல் போதனாசிரியருக்கு மாதாந்த வேதனமும் வழங்கப்பட்டு வருகின்றது. தையல் பயிற்சியில் ஈடுபடும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும்

**தொகுப்பு: ஐயந்தன்**

குடும்பங்களைச் சேர்ந்த யுவதிகளுக்கு தையல் உபகரணங்கள் பயிற்சிக்கான துணிகள் போன்றவையும் கழக உறுப்பினர்களால் வழங்கப்படுகின்றன. கழகத்தினால் வருடாவருடம் பல்வேறு நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும் வெள்ளைப்பிரம்பு தினம், ஐ.நா. தினம், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தல், சர்வதேச முதியோர் தினம் போன்றவற்றினை விழாவாக நடத்த கழக நிர்வாகத்தினர் தயங்கியதில்லை.

(முற்றும்)

# புதிய நாணயத் தாள்கள் குறித்த தரவுகள்

அபிவிருத்தி,சுபீட்சம் மற்றும் இலங்கையின் நடனக் கலைஞர்கள் என்ற தொனிப் பொருளிலான நாணயத் தாள்களில் பதினோராவது தொடர்கள் இலங்கை மத்திய வங்கியினால் மிக விரைவில் சுற்றோட்டத்துக்கு விடப்படவுள்ளன. இப்புதிய நாணயத் தொடர்கள் மற்றைய அனைத்துத் தொடர்களையும் விட ஒரு விடயத்தில் வேறுபட்டதாக இருகின்றன. முன்னைய தொடர்கள் நீளம் மற்றும் அகலம் ஆகிய நியதிகளில் நாணயத் தாள்களின் அளவுகள் வேறுபடுகின்ற வேளையில் இப்புதிய தொடர்கள் ஒரே அகலத்தைக் கொண்டனவாகவுள்ளன.

எனினும் நாணயத் தாள்களின் நீளம் இனங்களுக்கேற்ப வேறுபடுகின்றது. நாணயத் தாள்களின் அளவு பற்றிய பொதுமக்களின் கருத்துகள் மற்றும் அவற்றை வசதியாகக் கையாள்தல் என்பனவற்றைப் பரிசீலனையில் கொண்டு புதிய தொடர் தாள்களுடன் ஒப்பிடுகையில் சிறிதாக்கப்பட்டன. புதிய நாணயத் தொடர்களின் தொனிப் பொருளினைப் பேணும் விதத்தில் ஒவ்வொரு நாணயத் தாளினதும் முன்பக்கத்தின் பிரதான வடிவமைப்பு, இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்துடன் தொடர்பான தோற்றத்தினை எடுத்துக்காட்டுகின்ற வேளையில் ஒவ்வொரு தாளினதும் பின்பக்கத்தில் இலங்கையின் வேறுபட்ட வகை நடனக் கலைஞர்களின் தோற்றம் வரையப்பட்டிருக்கின்றது. இம்முக்கிய பண்புகளுக்குப் புறம்பாக இலங்கைக்கே சிறப்பாக உரிய தெரிந்தெடுக்கப்பட்ட பறவைகளும் இலங்கையில் காணப்படும் வண்ணத்துப் பூச்சிகளும் தாளின் மீது வரையப்பட்டுள்ளன. சில கலாசார, தொல்பொருளியல் சிறப்புப் பெற்ற பண்புகளும் தாள்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு தாளினதும் பின்பக்கத்தின் பின்னணியில் இலங்கை தேசப்படம் காணப்படுகின்றது. முன்னைய தொடர் தாள்களைப் போன்றே ஒவ்வொரு தாளும் முக்கியமானதொரு நிறத்தினைக் கொண்டிருப்பதுடன் ரூபா.500 மற்றும் ரூபா 5000 நாணயத் தாள்கள் தவிர்ந்த மற்றைய தாள்கள் முன்னைய தொடர்களின் முக்கியமான நிறத்தினை பெருமளவிற்கு ஒத்ததாகக் காணப்படுகின்றன.

தனிப்பட்ட ஒவ்வொரு நாணயத் தாள்களின் மீதும் காணப்படும் பண்புகள்

**ரூபா.20 நாணயத் தாள்**

முக்கியமாகக் காணப்படும் நிறம் கடும் மண்ணிறம்.

தாளின் முன்பக்கத்தின் நடுவில் கொழும்புத் துறைமுகத்தின் அண்மைய தோற்றமும் பின்னணியில் துறைமுகத்தின் பழைய தோற்றமும் பொறிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பறவையினமான செரண்டிப் செவி ஆந்தை தாளின் வலது பக்கத்தில் காணப்படுவதுடன் தாளின் இடது பக்கத்தின் கீழ் பகுதியில் பறநெட் வண்ணத்துப்பூச்சி காணப்படுகின்றது.

நிலைக்குத்தாகப் பார்க்கும் பொழுது மத்தியில் வெஸ்நெத்தும நடனக் கலைஞரும் கெட்டபெற மேளக்காரரும் காணப்படுகின்றனர். காவல் கல்லும் சுபீட்சத்தின் அடையாளமான பூரண கலசமும் (கும்பம்) தாளின் வலது பக்கத்தின் மேற்பகுதியில் காணப்படுகின்றன. ஒற்றைப் பூச்செடி வடிவமைப்பிலான லியவெல, தாளின் வலது பக்கத்தில் காணப்படுகின்றது.

**ரூபா.50 நாணயத் தாள்**

முக்கியமான நிறம் நீலம். கலைஞர் ஒருவரின் கலைநயத்துடன் மன்னம்பிட்டியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலம், ஊர்திகள் மற்றும் புகைவண்டி என்பனவற்றிற்கென பொதுவாக அமைக்கப்பட்டிருந்த பழைய பாலத்துடனும் புகைவண்டிப் பாதையுடன் சேர்த்துப் பொறிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள பண்டைய புகைவண்டிப் பாதை அலங்கார வளைவுப் பாலம் பின்னணியில் காணப்படுகின்றது. தாளின் வலப்பக்கத்தில் இலங்கை நீல வெட்டி வாற்குருவியும் தாளின் கீழ் இடது பக்கத்தில் த புளூ ஓக் லீவ் வண்ணத்துப் பூச்சியும் பொறிக்கப்பட்டுள்ளன.

பின்பக்கத்தில் நிலைக்குத்தாகப் பார்க்கையில் தாழ் பிரதேச நடனக் கலைஞரின் தோற்றமும் யக்பெற மேளகாரரின் தோற்றமும் தாளின் மத்தியில் காணப்படுகின்றன. தாளின்மேல் பக்கத்தில் புங்கலச காவல் கல்லும் தாளின் வலது பக்கத்தில் இரட்டைப் பூச்செடி வடிவமான டிவித்தலிய வெலவும் காணப்படுகின்றன.

**ரூபா.100 நாணயத் தாள்**

முக்கியமான நிறம் இளமஞ்சளாகும். தாளின் முன்பக்கத்தில் கலைஞர் ஒருவரின் கலைநயத்துடன் நுரைச்சோலை நிலக்கரி வலுப்பொறிச் செயற்றிட்டம் பொறிக்கப்பட்டிருப்பதுடன் மின்கம்பிகளினால் சூழ்ந்து காணப்படும் லக்ஷபான நீர்வீழ்ச்சி பின்னணியில் காணப்படுகின்றது. இலங்கை செவ்வலகு வேலைக்காரக்குருவி வலப்பக்கத்திலும் வண்ணத்துப் பூச்சியான ஒட்டோ லீல் கீழ் இடது பக்கத்திலும் காணப்படுகின்றன.

பின்பக்கம் நிலைக்குத்தாக நோக்கும் பொழுது, பரதநாட்டிய நடனக்காரரினதும் மேளக்காரனதும் உருவம் தாளின் மத்தியில் காணப்படுகின்றது. நாக காவல் கல் தாளின் மேல் வலது பக்கத்திலும் இரட்டைமலர் வடிவமான தித்வலிய வெல என அழைக்கப்படும் மலர் தாளின் வலது பக்க ஓரமாகவும் காணப்படுகின்றது.

**ரூபா.500 நாணயத் தாள்**

முக்கியமான நிறம் ஊதா. தாளின் முன்பக்கத்தில் கொழும்பு மாநகரிலுள்ள உலக வர்த்தக மையம், இலங்கைவங்கிதலைமை அலுவலகம் என்பன கலைஞர் ஒருவரின் கலைநயத்துடன் பொறிக்கப்பட்டிருப்பதுடன் கண்டியிலுள்ள பண்டைய பெளத்த ஆலயமான ''லங்கா திலக விகாரை'' பின்னணியில் காணப்படுகின்றது. இலங்கை நாட்டுக் கிளி (லயார்ட் கிளி) தாளின் வலது பக்கத்திலும் சிலோன் இந்திகோறோயல் வண்ணத்துப்பூச்சி இடது பக்கத்திலும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

பின்பக்கம் நிலைக்குத்தாகப் பிடித்துப் பார்க்கும் பொழுது தெல்மே நெட்டும நடனக் கலைஞரினதும் லக்பெற மேளகாரரினதும் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

தாளின் வலது மேல்பக்கத்தில் பதுமநிதி காவல் தாளின் வலதுபக்க ஓரத்தில் டிவத்வலிய வெலவும் காணப்படுகின்றன.

**ரூபா.1000 நாணயத் தாள்**

முக்கியமான நிறம் பச்சை. தாளின் முன்பக்கத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட றம்பொட சுரங்க பாதை கலைஞர் ஒருவரின் கலைநயத்துடன் பொறிக்கப்பட்டிருக்கிறது.

கட்டுமானத்திற்கு முன்னதாக அதே இடத்திலுள்ள பாறைச்சுவர் அதன் பின்னணியில் காணப்படுகின்றது.

இலங்கை சின்னக்கிளி தாளின் வலது பக்கத்திலும் வண்ணத்துப் பூச்சியான லெமன் மைக்றன்ட் இடது பக்கத்தின் கீழேயும் காணப்படுகின்றன.

பின்பக்கம் நிலைக்குத்தாகப் பார்க்கும் பொழுது, மல்பதய நாட்டியக் கலைஞரும் தேவுல் பெற மேளக்காரரும் காணப்படுகின்றனர்.

வலது பக்கத்தின் மேலே காவல் தெய்வங்களுடன் காவல் கல் காணப்படுகின்றது. டிவத்லிய பெல தாளின் வலது பக்க ஓரமாகக் காணப்படுகின்றது.

**ரூபா.5000 நாணயத் தாள்**

முக்கியமான நிறம் தங்க நிறம். தாளின் முன்பக்கத்தில் கலைஞர் ஒருவரின் கலைநயத்துடன் வெஹெரகல அணை பொறிக்கப்பட்டிருப்பதுடன் செங்குத்தான அணை பின்னணியில் காணப்படுகின்றது. இலங்கை மஞ்சள் செவிக் கொண்டைக் குருவி தாளின் வலது பக்கத்தில் பொறிக்கப்பட்டிப்பதுடன் லெமன் மைக்கிறன்ட் வண்ணத்துப் பூச்சி தாளின் இடது பக்கத்தில் காணப்படுகின்றது.

பின்பக்கம் நிலைக்குத்தாகப் பார்க்கும் பொழுது நாகறஷ நடனக் கலைஞர் குறுளுக்ஷ, நடனக் கலைஞரும் காணப்படுகின்றனர். ரத்னபிரசாதய காவல் கல் தாளின் மேல் வலது பக்கத்தில் காணப்படுவதுடன் கலபவறஷவும் மலர் வடிவமும் தாளின் வலது பக்க ஓரத்தில் காணப்படுகின்றன.

நாணயத்தாளின் மீதுள்ள விம்பங்கள் இலங்கை மத்திய வங்கயின் பதிப்புரிமையாகும். வங்கியின் நாணயச் சபையின் முன்ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு வடிவமைப்பினையும் மீளத் தயாரித்தல் கூடாது.

# புதிய நாணயத் தாள்கள் வெளியீட்டுக்கு ஜனாதிபதி வாழ்த்து

''அபிவிருத்தி, சுபீட்சம் மற்றும் இலங்கை நடனக் காரர்கள் என்ற தொனிப்பொருளின் கீழ் புதிய நாணயத்தாள் தொடர்களை வெளியிடுவது தொடர்பாக இலங்கை மத்திய வங்கிக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சமாதானம் ஏற்பட்டதன் விளைவாக முழுத்தேசமும் உயர்வானதொரு நிலையை அடைவதற்கான வாய்ப்பை வழங்கக்கூடிய புதிய யுகத்தில் தற்போது நுழைவதன்மூலம் அது எமது மக்களுக்கு சுபீட்சத்திற்கான பாதையினையும் மகிழ்ச்சியையும் வழங்கும். இது தொடர்பாக, கடந்த ஐந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பாரிய செயற்திட்டங்கள் அடுத்த அபிவிருத்தி அலைக்கு முக்கிய அடிப்படையாக அமையும். எனவே எமது நாளாந்த வாழ்வில் நாம் பயன்படுத்தும் நாணயத் தாள்களில் பொறிக்கப்பட்ட தனிச் சிறப்பு வாய்ந்த செயற்திட்டங்களில் விப ரிக்கப்பட்டவை, எமது பாரிய அபிவிருத்தி முயற்சிகள் இடையூறின்றி தொடரவேண்டு மென்பதை உறுப்படுத்துவதற்கான தேவையை எமது மக்களுக்கு தொடர்ச்சியாக நினைவூட்டும்.

உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான இம் முயற்சிக்கு நான் இலங்கை மத்திய வங்கி ஆளுநர் மற்றும் அவரது அலுவலர்களுக்கும் மற்றும் நிதியியல் துறையைக் கட்டியெழுப்புவதில் அவர்களது தொடர்ச்சியான பங்களிப்புக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதிய நாணயத் தாள்களை வெளியிடுவது அர்ப்பணிப்புடன் கையாளப்பட வேண்டிய முயற்சி

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் நாணயத்தாள்களுக்குப் புறம்பாக, புதிய நாணயத் தொடர்கள் வியாபார கொடுக்கல் வாங்கல்களுக்கு சேர்க்கப்படும் வேளையில் அனைத்து இலங்கையர்களும் மகிழ்ச்சியடையக் கூடியவர்களாக இருப்பர். இப்புதிய தொடர்கள் 1950 இலிருந்து மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நாணயத் தொடர்களில் பதினொன்றாவதாகும். இத்தொடர்களில் எமது நாட்டின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் அதேபோன்று வேறுபட்ட நடனங்கள் மற்றும் மேளகாரர் உருவம் என்பன சித்திரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போதுமான அளவிலும் ஏற்றுக் கொள்ளத்தக்க தரத்திலும் நாணயத் தாள்களை வெளியிடுவதும் சட்டரீதியான நாணயமாக பொதுமக்களின் நம்பகத் தன்மையினைப் பேணிப் பாதுகாத்துக்கொள்வதும் மத்திய வங்கியின் தொழிற்பாடுகளின் முக்கிய அம்சங்களிலொன்றாகும். எமது நாடு தற்பொழுது அனுபவிக்கும் விரைவான பொருளாதார அபிவிருத்தி, பொது மக்களின் வாழ்கைத்தரம் உயர்வடைந்து வருகின்றமை, எமது சமூகத்தில் தூய நாணயத்தாள்களை பேண வேண்டியதன் அவசியம் என்பவனவற்றின் காரணமாக எமது பொருளாதாரத்திற்குக் கூடுதலான சிறந்த நாணயத் தாள்கள் தேவைப்படுகின்றன. மத்திய வங்கி இப் புதிய நாயணத் தாள்களை வடிவமைத்து வெளியிடுகின்ற பொழுது அத்தகைய காரணிகளை இயல்பாகவே கவனத்தில் கொண்டிருப்பதுடன் நாணயத் தாள்களைப் பயன்படுத்தும் மக்கள் இவ்வேறுபட்ட தன்மைகளைப் பார்த்து, உணர்ந்து கொள்வர் என்பதில் திடமாகவுள்ளோம்.

புதிய நாணயத் தாள்களை வடிவமைத்து வெளியிடுவதென்பது, பாரிய தொழில்சார் நிபுணத்துவத்துடனும் அர்ப்பணிப்புடனும் கையளாளப்பட வேண்டிய பாரிய முயற்சியொன்றாகும்.

இவ்விடயத்தில், தொனிப் பொருள்களையும் இவ்வெளியீட்டுத் தொடர்களில் காணப்படும் மற்றைய பல தோற்றப் பண்புகளையும் தெரிவுசெய்யும் செயற்பாட்டில் எமக்கு வழிகாட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எமது விசேட நன்றியறிதல்கள் உரித்தாகட்டும்.

எமது புதிய நாணயத்தாள்கள் எமது நாட்டின் அடையாளம், பாரம்பரியம், எதிர்கால அபிலாசைகள் என்பவற்றை நெருக்கமாகப் பிரதிபலிக்கும் என நாம் நம்புகிறோம். ஆகவே நாங்கள், தமது கொடுக்கல் வாங்கல்களின் போதும் இலங்கையர்களும் நாணயத் தாள்களைப் பயன்படுத்தும் அனைத்து இலங்கையர்களும் மற்றையவர்களுக்கும் இந்நாணயத்தாள்களை பத்திரமாகவும், கெளரமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவதற்கு அழைப்பு விடுக்கின்றோம். இதன் மூலம் எமது நாட்டின் பெருமையை உயர்த்துவோமாக- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (19)



யூலியன் தன்னை விடவும் தனது நண்பர்கள் மீதும் தன் தகவலாளிகள் மீதும் மிகுந்த நேசிப்புடையவன். ஏனெனில் விக்கிலீக்ஸின் தொடர்ச்சியான இருப்பு தகவலாளிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என்பதால், அவர்கள் மீது ஒரு தூசி விழுந்தாலும் பொறுத்துக்கொள்ளமாட்டான். அத்தோடு எதிர்காலத்தில் அத்தகைய சிக்கல்கள் தோன்றிவிடக் கூடாது என்பதிலும் அவன் அக்கறையாக இருந்தான்.தியோடர் கைதான பின்னர் யூலியன் தன் தகவல்வழங்கும் கட்டமைப்பை மறுசீரமைத்தான். இதற்கென விசேடமான மென்பொருள்களை தன் தகவல் மூலகங்களுக்குப் பரிந்துரைத்தான்.

விக்கிலீக்ஸுக்கு தகவலை வழங்கும் பாதுகாப்பான பொறிமுறைகளில் முக்கியமானது தான் ரி.ஓ.ஆர் எனப்படும் தகவல் ஊடாட்ட மென்பொருள். ரீ. ஓ. ஆர் ( Tor & The Onion Routing project) என்பது எந்தவொரு வலையமைப்புக்கும் ரகசியத் தகவல்களை அனுப்ப விரும்புபவர்கள் இணையத்தொடர்பில் தங்கள் அடையாளங்களை மறைத்து, தகவல்களைப் பாதுகாப்பாக அனுப்பி வைப்பதற்கென்றே சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மென்பொருள்.

**யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்**

இணையத் தொடர்பைப் பயன்படுத்தி நாம் மேற்கொள்கின்ற மின்னஞ்சல், மின்னரட்டை, கோப்புப் பகிர்தல் இப்படி நிறைய விடயங்கள் இருக்கின்றன.

இவற்றில் எந்தத் தொழிற்பாட்டை செய்தாலும் நமக்கு இணையசேவையை வழங்குகின்ற சேர்வரில்(பிரதான வழங்கியில்) நாம் யாருக்கு என்ன தகவலை அனுப்புகிறோம்,

அவற்றைப் பெற்றுக்கொண்டவர்கள் அனுப்புகின்ற பதில்கள் என்ன சாராம்சத்தைக் கொண்டிருக்கின்றன, என்னென்ன இணையங்களை நாம் பார்வையிடுகிறோம் என்பன போன்ற இணைய வழியூடான தொடர்பின் முழுச்சரித்திரமுமே சேகரிக்கப்படும். அதன் மூலம் தான்சைபர் கிரைம் எனப்படுகின்ற இணையக்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளும், அதன் மூலம் குற்றவாளிகளை கையும் மெய்யுமாகப் பிடிப்பதும் சாத்தியமாகின்றது. மிக அண்மையில்கூட தனது வழங்கியின் தகவல்களைப் பகிர மறுத்த 'ப்ளாக்பெர்ரி' என்ற நிறுவனத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்கும் இது தொடர்பாகப் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. ஆனால் இணைய வழங்கிகளை வைத்திருக்கும் எல்லா நிறுவனங்களுமே 'ப்ளாக்பெர்ரி' நிறுவனத்தைப் போன்று, தனது வாடிக்கையாளர்களைக் காப்பாற்றுவதில்லை. மாறாக அரசாங்கங்கள் கேட்டவுடனேயே இந்தா பிடி! என்கிற கணக்காக வாடிக்கையாளர்களின் இணைய அந்தரங்கங்கள் எல்லாவற்றையும் சந்தைக்குக் கொண்டு வந்துவிடும்.

விக்கிலீக்ஸ் சந்தித்த மிகப் பெரிய சவாலே யூலியனைப் போன்று ஹக்கிங்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களால் இந்த இணையத் தொடர்புச் சங்கிலியை எப்படியும் கண்டுபிடித்து விட முடியும் என்பது தான். இதன் காரணமாக இரகசியத் தகவல்கள் அடங்கியக் பைல்களைப் பகிர்வதற்கு யாரும் முன்வரமாட்டார்கள். அப்படி வந்தாலும் கூட ஜெர்மனியில் தியோடர் மாட்டுப்பட்டது போல சிக்கிக்கொள்ளவும் நேரிடும். எனவேதான் நம்பகத் தன்மை கொண்ட ரீ.ஓ.ஆர் எனப்படும் மென்பொருளை யூலியன் பரிந்துரைத்தான்.

ரீ.ஓ.ஆர். ( The Onion Route) தன் பெயருக்கேற்றால் போல் வெங்காயம் தான்.வெங்காயத்தின் தோலை உரிக்க, உரிக்க இதழ்கள் தான் ஒவ்வொன்றாகக் கழன்று கொண்டேசெல்லுமே தவிர இறுதியில் ஒன்றுமே இல்லாத வெற்றிடமே மிஞ்சும்.

கிட்டத்தட்ட அதே மாதிரியான செயற்பாட்டைக் கொண்டதுதான் இந்த ரீ.ஓ.ஆர். இதில் இன்னொரு நன்மையும் உண்டு. ரீ.ஓ.ஆர் ஒரு கட்டற்ற மென்பொருள். அதாவது எந்தவிதக் கட்டணமுமின்றி

ஓளண்யன்

இலவசமாகவே இதனைத் தரவிறக்கிப் பயன்படுத்த முடியும். ஓஸியில் கிடைத்தால் வயிற்று வலியைக் கூட வாங்கிக் கொள்பவர்கள் இலவசமாக , நம்மைச் சுற்றியுள்ள வேவுக் கண்களில் மண்ணைத் தூவி விட்டு உண்மைகளை வெளிக்கொணரும் மென்பொருள் கிடைத்தால் சும்மா விடுவார்களா?

யூலியனின் சிபார்சால் ஒரேநாளில் ரீ.ஓ. ஆர். மென்பொருளை டவுண்லோட் செய்யும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை லட்சத்தை எட்டியது. இவ்வாறு இரகசிய இணைய தகவல்களை யாரும் இடைநடுவில் கண்டுபிடிக்க முடியாத படி செய்கின்ற இந்த ரீ.ஓ.ஆரின் செயற்பாடு எப்படிப்பட்டது?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*

# 45 வயது கடந்த ஆசிரியர்களின் நிலைதான் என்ன...?

மத்திய கல்வியமைச்சின் செயலாளர் 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை நாடுகடத்தப்போகிறாரா?

பொதுவாக அரச சேவையில் உள்ள அலுவலகங்களின் பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பங்களில் கல்வித் தகைமை தொழிற்றகைமை, சேவைக்காலம் போன்ற விவரங்கள் தான் கேட்கப்படுவது வழமை.

அத்துடன் அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு வயது எல்லை நிர்ணயிக்கப்படுவதும் குறைவு என்பது யாவரும் அறிந்த விடயம்.

இது கல்வித்துறைக்கும் பொருந்தும். என்வேதான் அரச பாடசாலை ஆசிரியர்களில் இருந்து அதிபர்களை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை, இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (S L E A S - III) ஆள்சேர்ப்புச் செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களில் கடந்த காலங்களில் வயது எல்லை நிர்ணயிக்கப் படவில்லை என்பதை ஆசிரிய உலகம் நன்கு அறியும்.

ஆனால் அண்மையில் மத்திய கல்வியமைச்சின் செயலாளரினால் அரச பாடசாலை ஆசிரியர்களில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III (SLEAS - III) பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் இரண்டு விடயங்கள் பாராட்டப்பட வேண்டியவையாக உள்ளன.

அதில் ஒன்று விண்ணப்ப முடிவு திகதியான 31.01.2011 இல் 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியாது.

இரண்டாவது இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை உட்பட மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்கு மொத்தமாக ஏழு தடவைகள் ஒரு ஆசிரியர் தோற்ற முடியும்.

முதலாவது விடயத்தைப் பார்த்தவுடன் 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மிகவும் பயந்து கொண்டுதான் பாடசாலைக்குச் செல்கின்றனர். காரணம் 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வித்துறைக்கு நாதியற்றவர்கள் என்று கருதி அந்தமான் தீவுகளுக்கு நாடுகடத்தப்படப்போகின்றோமா அல்லது சமுர்த்தி அலுவலருக்கு ஏற்பட்டது போன்று பாடசாலை மரங்களில் கட்டி வைக்கப்படப்போகிறோமா என்று ஓர் அச்சமான சூழ்நிலையில் தான் தமது நாளாந்த கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இரண்டாவது விடயத்தை நோக்கும்போது மேற்படி போட்டிப் பரீட்சை ஒவ்வொரு வருடமும் நடத்தப்படுவது இல்லை என்பதை கல்வி உலகம் நன்கு அறியும்.

அதாவது ஏறக்குறைய 5 ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் மேற்படி போட்டிப் பரீட்சை நடத்தப்படுகின்றது.



அத்துடன் சேவைக்கால நிபந்தனைகள் காரணமாக ஓர் ஆசிரியர் ஆகக் கூடியது இரு தடவைகள் மட்டுமே தோற்ற முடியும். அத்துடன் வயது எல்லை 45 ஆக இருத்தல் ஒரு தடவை மட்டுமே தோற்றமுடியும்.

ஆகவே, வர்த்தமானி அறிவித்தலின் படி ஓர் ஆசிரியர் ஏழு தடவைகள் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதாக இருந்தால் சேவையில் இருந்து ஓய்வு பெற்று அமரத்துவம் அடைந்த பின்பு தேகாந்த நிலையில்தான் தோற்ற முடியும்.

அல்லது சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் கணவனின் உயிர்ப்பிச்சைக்காக அழுது புலம்பிய சாவித்திரிக்கு இயமன் மக்கட்பேறு வரம் கொடுத்தது போன்று கல்வியமைச்சின் செயலாளர் 45 வயதுக்கு மேற்படி ஆசிரியர்களுக்கு வயது எல்லையை நீடிக்கும் வரம் அருள வேண்டும்.

இந்த நிலையில் ஆசிரியர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்ற ஆசிரிய தொழிற்சங்கம் அதிலும் குறிப்பாக தமிழ் ஆசிரியர்களின் நலனுக்காகப் பாடுபடுகின்ற தமிழ் தொழிற் சங்கத்துக்கு ஒரு பணிவான வேண்டுகோள்.

அங்கத்துவ தமிழ் ஆசிரியர்களின் மாதாந்த சம்பளப் பட்டியலில் இருந்து ஆசிரியர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ மாதாந்த அங்கத்துவப் பணத்தை ஒழுங்காக அறவிடும் நீங்கள் அங்கத்துவ ஆசிரியர்களுக்கு இப்படி ஓர் இக்

**கந்தன்**

கட்டான நிலை ஏற்படும்போது திறந்த மனத்துடன் பாடுபடாவிட்டாலும் ஆசிரியர்களின் நலனுக்காகப் போராடுவது போன்று நடியுங்கள். காரணம் இன்றைய கலியுகத்தில் உண்மைக்கும் நேர்மைக்கும் இடமில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள். புதுவருடத்தில் பொக்கற் டயறி வழங்குவதுடன் மட்டும் உங்கள் சேவையை நிறுத்திக்கொள்ளுங்கள்.

அபிவிருத்திக்காக...



சந்திப்பு: ஏமன் வெளியுறவுத்துறை அமைச்சர் அபுபகர் அப்துல்லா(வலது), ஐரோப்பாவின் வெளியுறவு கொள்கை தலைவர் கேதரின் ஆஸ்டன் புருசெல்லை தலைமையகத்தில் சந்தித்துக் கொண்டனர்.

# தொலைத்தொடர்பு, இணையத்தள சேவைகள் எகிப்தில் முடங்கின

கெய்ரோ, பெப். 04

எகிப்தில் அரசுக்கு எதிராகத் தீவிரமடைந்துள்ள கிளர்ச்சியினால் பல்வேறு தொலைத் தொடர்பு, இணையதள சேவைகள்முடங்கின. எனினும் தேடுதல் வலைத் தளமான கூகுள் எகிப்து மக்களுக்கு புதிய சேவையை டிவீட்டர் மூலம் வழங்கி வருகிறது.

எகிப்தியர்கள் தங்கள் கருத்துக்கள் ஆலோசனைகளை இதன் மூலம் வெளியிடவும் வாய்மெயில் மூலம் தகவலைப் பெறவும் முடியும் என கூகுள் எதிர்பார்க்கிறது.

தற்போது எகிப்தில் ஜனாதிபதி ஹோஸின் முபாரக்குக்கு எதிராக நாடுமுழுவதும் மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். ஜனாதிபதி பதவிவிலகும் வரை போராட்டம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எகிப்தில் பல்வேறு கையடக்கத் தொலைபேசிச் சேவை உள்ளிட்ட தொலைத் தொடர்புகள், இணையதள சேவைகள் முடக்கப்பட்டன. இதில் எகிப்தில் லிங் எகிப்து, வோடாபோன், /ரையா டெலிகாம், ஈட்ஸ்லாட் என நான்கு முக்கிய இணையத்தள சேவை நிறுவனங்கள் முடங்கின.

நூர் குழுமம் எனும் முக்கிய இணையதள சேவைதான் நாட்டின் எல்லா பகுதிகளிலும் பரவியிருந்தது. தேடுதல் வலைத் தளமான கூகுள், டிவீட்டர் மூலம் தங்கள் கருத்துகளை தெரிவிக்க ஏற்பாடு செய்துள்ளது.

இணையதளம் இன்றி குரல் பதிவுமூலம் அனுப்ப கூகுள்தனது சேவையை எகிப்து மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது. இதன் மூலம் சர்வதேச அளவில் தொலைபேசி எண் மூலம் டயல் செய்து டிவீட்டர் சமூக வலைத் தளம் மூலமாக எகிப்தில் உள்ளவர்களுக்கு குரல் மெயில் மூலம் அனுப்ப கூகுள் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்காக கூகுள், டிவீட்டர் பொறியாளர்கள் கடந்த வாரம் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இக்கட்டான நேரத்தில் எகிப்தில் வசிப்பவர்களுக்கு உதவி செய்வதில் கூகுள் பெருமை கொள்வதாக அதன் நிர்வாகம் இணையத்தள பிளாக்கில் கருத்துத் தெரிவித்துள்ளது.

(ம)

# பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள் மீது தாக்குதல்

இஸ்லாமாபாத், பெப். 04

பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலைத் தடுக்கும்படி, நாடாளுமன்றத்தில் எம்.பிக்கள் கோரியுள்ளனர். பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில், 82 வயதான லக்மி சந்த் என்ற இந்து ஆன்மிகத் தலைவரை, கடத்தல்காரர்கள் கடத்திச் சென்று கணிசமான பணம் வசூலித்தனர்.

66 வயதான பாகிஸ்தானிய இந்து எம்.எல்.ஏ.,ராம்சிங் சோதோ என்பவர் அங்குள்ள சமூக விரோதிகளின் மிரட்டலுக்குப் பயந்து சமீபத்தில் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளார். அதுமட்டுமல்லாது பலு சிஸ்தானில் உள்ள 27 இந்துக் குடும்பங்கள், அங்குள்ள அச்சுறுத்தல்களை சமாளிக்க முடியாமல், இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுவதற்கு விண்ணப்பம் செய்துள்ளன. இந்தச் சம்பவங்கள் குறித்து, பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க் கட்சி எம்.பிக்கள் விவாதித்தனர்.

''பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மை மக்களுக்கு சமத்துவம் அளிக்கப்படும் என்ற 73ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டம் ஒழுங்காகப் பின்பற்றப்படுவதில்லை. பணத்துக்காக இந்துக்கள் கடத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுக்கப்படவேண்டும்''என ஆளும்கட்சி எம்.பி.க்களான பல்வாஷாகான்,நவாஸ்யூசுப் உள்ளிட்டோர் வற்புறுத்தினர்.

# கொரியாவில் பதற்றத்தைத் தணிக்க முயற்சி

சியோல், பெப். 04

கொரிய தீபகற்பத்தில் நிலவி வரும் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் எதிர்வரும் 8ஆம் திகதி, இராணுவ மட்டத்திலான முதற் கட்ட பேச்சுகளை ஆரம்பிக்க வடகொரியாவும் தென்கொரியாவும் சம்மதம் தெரிவித்துள்ளன. அமெரிக்கா இதை வரவேற்றுள்ளது.

வட மற்றும் தென் கொரிய நாடுகளுக்கிடையில், சமீபத்தில் ஏற்பட்ட போர் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியில் சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் இறங்கின. தொடர்ந்து பேச்சுக்கு இருதரப்பும் பரஸ்பரம் அழைப்பு விடுத்தன.

எதிர்வரும் 8ஆம் திகதி இருதரப்பு இராணுவ மட்டத்திலான முதற்கட்டப் பேச்சுகளை ஆரம்பிக்க இரு நாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன. இருதரப்பு அமைச்சர்கள் மட்டத்திலான பேச்சுகளாக இது இருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங் பாக், "தனது எண்ணத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்த வட கொரியாவுக்கு இது நல்ல தருணம், இதில் அந்த நாடு தனது ஆர்வத்தைக் காட்டுமானால், பேச்சுகள் தொடரும். இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் ஆறு நாடுகள் பேச்சுகள் ஆரம்பமாகும்'' என்று தெரிவித்தார்.

கொரிய நாடுகளின் இந்த முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது. அதேநேரம் மேலும் ஒரு இரகசிய இடத்தில் வட கொரியா அணுசக்தி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கிறது என ஐ.நா. தெரிவித்துள்ளது. (ம)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
1931.09.27

உதிர்வு:
2010.01.17

திதி - துதியை



மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

அமரர்

ஆறுமுகம் நடராசா

என்றும் எங்கள் அப்பாவே
ஓராண்டும் சென்றது
ஓயவில்லை எம் துயரம்
பாராது உம் முகத்தை
தவிக்கின்றோம் நாமிங்கே
சேயாக எமதகத்தில்
வந்துதித்தீர் என்றெண்ணி
நாம் சாந்தி கொள்கின்றோம்.

அப்பா உங்கள் ஆன்மா இறைவனடியில் அமைதி பெற
நாங்கள் என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

இல.205, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 021 222 8611

குடும்பத்தினர்

கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இறால் தொழிலுக்கான அனுமதி

எமது சமாச எல்லைக்குட்பட்ட ஆனையிறவு, சுண்டிக்குளம், காஞ்சிபுரம் பேப்பாறைப்பிட்டி வரையான கடனீரேரிப் பகுதிகளில் நடப்பாண்டிற்கான இறால் தொழில் சம்பந்தமாக கடந்த ஜனவரி 7ஆம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத் தீர்மானத்திற்கு அமைவாகக் கடந்த காலங்களைப் போன்று இறால் கூடு கட்டுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதி பரீட்சார்த்தமாக இறால் கூடு கட்டப்பட்டு 21.02.2011 அன்றையதினம் பரிசீலனை செய்யப்பட்டு பொதுச்சபைத் தீர்மானத்திற்கமைவாக இறால் கூடு கட்டுவதற்கான திகதி உத்தியோக பூர்வமாகச் சமாசத்தினால் அறியத்தரப்படும். இதனைக் கருத்திற்கொண்டு எமது சமாச எல்லைக்குட்பட்ட இணைச்சங்கங்களான 7 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விடயத்தில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கித் த்வறுகள் இடம்பெறாவண்ணம் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

இதற்கமைய அனுமதிக்கப்படும் திகதியின் பின்னர் ஏற்றுமதியாளர்கள் மற்றும் கொள்வனவு முகவர்கள் தங்களுக்கான உரிய அனுமதிகளைப் பெறும் பொருட்டு எதிர்வரும் மார்ச் 10ஆம், 11ஆம்,12ஆம், 13ஆம் திகதிகளில் முல்லை, பரந்தன் வீதி புளியம்பொக்கணைச் சந்திக்கருகில் அமைந்துள்ள மேற்படி சமாச அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, குளிரூட்டி வாகனங்கள் மற்றும் ஏனைய வாகனங்களில் தொழிலில் ஈடுபடுவோர் அனைவரும்.

★ கடந்த 2010ஆம் ஆண்டின் அனுமதியுடனும் அனுமதியின்றியும் ஏற்றுமதியினை மேற்கொண்டு சமாச சங்க வளர்ச்சி நிதி செலுத்தத் தவறியவர்கள் அனைவரும் தங்களது நிலுவைகளினைச் சீர்செய்து சிட்டைகளினைப் பெற்றுக்கொள்ளவும்.

★ சமாசத்தின் இந்த நடைமுறைகளை மீறிச் செயற்படுவோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்,
பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு, கடற்றொழிலாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

பரந்தன்/முல்லை வீதி,
புளியம்பொக்கணை.
தொடர்புகளுக்கு:
0770891497
0777939496

(இ/575590)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் சீனா பூகம்பத்தில் பாதிப்பு

யுனான், பெப். 04

சீனாவின் யுனான் மாகாணத்தில் புதன்கிழமை ஏற்பட்ட பூகம்பத்தால் 80,600 பேர் பாதிக்கப்பட்டனர். மேலும் 678 வீடுகள் சேதமடைந்தன.

எந்தவொரு உயிர் சேதமும் ஏற்பட்டதாக இதுவரை தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். சீனாவின் யின்ஜியாங் கன்ட்ரி பகுதியில் பூமிக்கு கீழ் 10 கி.மீ. ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டது. ரிச்டர் அளவில் 4.8 ஆக பதிவான பூகம்பத்தால், நில அதிர்வு ஏற்பட்டு வீடுகள் குலுங்கின. இதுபற்றி தகவல் அறிந்தவுடன், பேரிடர் மீட்பு படை யினர் விரைந்து சென்று பூகம்பத்தில் பாதிப்படைந்த 64,500 பேரை பத்திரமாக மீட்டனர்.

மேலும் இந்த பூகம்பத்தால் 700 வீடுகள் பலத்த சேதமடைந்தன என்று உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். உள்ளூர் அதிகாரிகள், பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளுக்கு சென்று பாதிப்பு அடைந்தவர்களுக்கு நிவாரண பொருள்களை வழங்கி வருகின்றனர்.

பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் போர்க் கால அடிப்படையில் முகாம்கள் அமைத்து பாதிக்கப்பட்ட மக்களை அங்கு தங்க வைத்துள்ளனர். அவர்களுக்கு கம்பளி போர்வை, ஆடைகள் வழங்கியதோடு, அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டன. (ம)

# ஒன்ராரியோவின் தென்பகுதியை பனிப்புயல் தாக்கியது

பாரிஸ், பெப்.04

ஒன்ராரியோவின் தென்பகுதியினைப் பனிப்புயல் தாக்கியதைத் தொடர்ந்து அங்கு நிலைமைகள் மோசமாகியுள்ளன. பனிப்பொழிவு அதிகரித்துக் காணப்படுவதால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

ரொறன்ரோ சர்வதேச விமான நிலையத்தில் 300க்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன.

பனிப்பொழிவினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் வகுப்புக்களை இரத்துச் செய்தமையினால் மாணவர்கள் கொட்டும் பனியின் மத்தியில் தங்களின் பொழுதைக் கழித்தனர்.

பனிப்புயல் மற்றும் கடுமையான பனிப்பொழிவினைத் தொடர்ந்து ஒன்ராரியோவினது புகையிரத வலையமைப்பில் தற்காலிக மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதோடு குறிப்பிட்ட சில புகையிரத சேவைகள் இரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன.

ஒன்ராரியோ நகரிலுள்ள நிலக்கீழ் தொடருந்துப் போக்குவரத்து சேவைகள் எந்தவிதப் பாதிப்புக்களுமின்றித் தொடர்ந்தும் இயங்கிவருகிறது.

உப்பினை ஏற்றிய 200 வாகனங் கள் பனிக்கட்டிகளை அகற்றும் 600 வாகனங்கள் என்பன விமான நிலையத்துக்குச் செல்லும் வீதி உள்ளிட்ட ரொறன்ரோவின் முதன்மையான நெடுஞ்சாலைகளில் பனிக்கட்டி களை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. (ம)

# ஒபாமா மனைவி மீண்டும் இந்தியா செல்ல விருப்பம்

அமெரிக்கா, பெப்.04

அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மனைவி மிச்செல், மீண்டும் இந்தியாவுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார். இந்த முறை தனது மகள்களான சஷா மற்றும் மலியாவுடன் வருவார் என தெரிகிறது.

வெள்ளை மாளிகையில், ஒபாமா, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் டாம் டொனிலன் ஆகியோர் சந்தித்து பேசினர்.

அப்போது, ''கடந்த நவம்பரில் நானும் மிச்செலும் இந்தியா வந்திருந்தோம். அந்த அனுபவம் இனிமையாக இருந்தது. இப்போது மிச்செல் தனது இரண்டு மகள்களுடன் மீண்டும் இந்தியா வர விரும்புகிறார்'' என மேனனிடம் ஒபாமா கூறியதாகத் தெரிகிறது. (ம)

சங்கமம்...



ஆலோசனை: பிரிட்டனின் பிரதமர் டேவிட் கேமரூன்(வலது), ஐக்கிய நாட்டு செயலர் பான் கி மூனை, லண்டனில் சந்தித்து பேசினார். (ம)

# ஜப்பானில் சீறும் எரிமலை 1,000 பேர் வெளியேற்றம்

டோக்கியோ, பெப். 04

ஜப்பானின் தென்மேற்குப் பகுதியில் உள்ள கிரிஷிமா மலைத் தொடரில் ஷின்மோயேடகே என்னும் எரிமலை உள்ளது. இந்த எரிமலை 4,689 அடி உயரம் உள்ளது. இது கடந்த புதன் கிழமை முதல் குமுறத் தொடங்கியது.

இதைத்தொடர்ந்து புகையும், நெருப்பும் மலையில் இருந்து வெளிப் பட்டன. சாம்பலும் பல அடி உயரத்துக்கு எரிமலையில் இருந்து வெளியேற்றப்பட்டது.

இதனால் எரிமலைக் குழம்பில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக அதன் அருகில் வசித்து வந்த 1,158 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

எரிமலை சீற்றம் காரணமாக அந்தப் பகுதி வழியாக விமானப்போக்கு வரத்து, ரயில் போக்குவரத்து ஆகியவை இரத்துச் செய்யப்பட்டன. பாடசாலைகள், அரசு அலுவலகங்கள் ஆகியவை மூடப்பட்டன. (ம)

# செப்ரெம்பரில் பதவி விலக எகிப்திய ஜனாதிபதி தயார்

எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்குக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்து வரும் நிலையில் செப்ரெம்பர் மாதம் தனது பதவிக்காலம் முடிவடைந்தவுடன் பதவியிலிருந்து விலகத் தயார் என அவர் அறிவித்துள்ளார்.

அரசமைப்பு ரீதியில் அடுத்ததாக தெரிவு செய்யப்படுபவருக்கு பதவியைக் கையளிக்கத் தயார் என தொலைக் காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் அறிவித்தார். எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என அவர் கூறினார்.எனினும் அவரின் இந்த அறிவிப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் நிராகரித்துள்ளனர். நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஜனாதிபதி முபாரக் பதவி விலக வேண்டும் என ஆர்ப்பாட்டக் காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

82 வயதான ஹொஸ்னி முபாரக், 1981 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி பதவியிலிருந்து வருகிறார்.

அவரின் நெருங்கிய சகாவான அமெரிக்காவின் அழுத்தங்கள் அதிகரித்ததைய டுத்து அவர் பதவி விலகும் தீர்மானத்துக்கு வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. தொலைக்காட்சியில் உரையாற்றுவதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் ஹொஸ்னி முபாரக் தொலைபேசி மூலம் உரையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 100 பனிச்சறுக்கு நாய்களைக் கொன்ற ஊழியர்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் விஸ்வா பகுதியில் உள்ள சாகச சுற்றுலா நிறுவனத்தை சேர்ந்த ஊழியர் ஒருவர் 100 பனிச் சறுக்கு நாய்களைக் கொன்றுள்ளார்.

அந்தப் பிராணிகளைக் கொல்வதற்கு முன்பாக, குறித்த நிறுவனத்தின் சில நாய்களுக்கு பாதுகாப்பு வீடுகள் தேவை என விலங்கு நல வாழ்வு அதிகாரிகளிடம் உதவி கேட்டார். அந்த 38 வயது ஊழியர் இருமுறை பிரிட்டிஷ் கொலம்பியாவின் விலங்கு துறையினரிடம் உதவி கோரிய போதும் அவருக்கு உதவிகள் கிடைக்கவில்லை.பனிச்சறுக்கு நாய்கள் கொல்லப்பட்ட விவரம் குறித்து எஸ் பி சி ஏ அதிகாரிகள் கூறுகையில், உயிரிழந்த நாய்கள் கொடூர மாக வெட்டிக் கொல்லப்பட்டதாக தாங்கள் உணரவில்லை என்றனர்.

குறிப்பிட்ட நபரிடம் நாய்கள் செல் லப் பிராணியாக உருவாக்கக் கூடாது, அது ஏற்புடையதாகவும் இருக்காது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மூத்த விலங்கு பாதுகாப்புத்துறை அதிகாரி எலீன் டிரவர், சம்பந்தப்பட்ட ஊழியர் தம்மை கடந்த காலத்தில் தொடர்பு கொண்டதை உறுதிப்படுத்தினார். அந்த அழைப்பு ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இருக்கலாம் என அவர் தெரிவித்தார். (ம)

# சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்கு ஆரம்பிப்பது சுலபமல்ல

## வங்கியாளர் சங்கம் கூறுகிறது

சுவிஸ், பெப். 04

சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்கு ஆரம்பிப்பது நினைக்கும் அளவு இலகுவானதல்ல என சுவிஸ் வங்கியாளர் சங்கத்தின் பேச்சாளர் ஜேம்ஸ் நெசன் தெரிவித்துள்ளார். கணக்கு ஒன்றை ஆரம்பித்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல் போன்ற தொடர்பில் சில கடுமையான சட்ட விதிகள் பின்பற்றப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாடிக்கையாளர் ஒருவருடன் தொடர்பை பேணுவதா என்பதனை வங்கியே நிர்ணயிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். அரசியல் ரீதியாக முக்கியமான ஓர் வெளிநாட்டு பிரஜை என்றால் அவரது சொத்துகள் நியாயமான முறையில் திரட்டப்பட்டுள்ளனவா என்பது குறித்து ஓரளவு ஆராயப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். வாடிக்கையாளர்களின் ஆள் அடையாளம் குறித்து வங்கி கூடுதல் கவனம் எடுத்துக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

# ரஷ்ய ஜனாதிபதி- பிரதமர் மீது ஊழல் முறைப்பாடு

மாஸ்கோ, பெப். 04

ரஷ்ய ஜனாதிபதி,பிரதமர் ஆகியோர் மீது ஊழல் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. ரஷ்ய ஜனாதிபதியாக டிமிட்ரி மெத்வடேவும், பிரதமராக விளாடி மிர் புடினும் பதவி வகிக்கின்றனர்.

இவர்கள் இருவர் மீதும் ஊழல் முறைப்பாடு கூறப்பட்டுள்ளது. இருவரும் சேர்ந்து இரகசியமாக ஆடம்பர அரண்மனைகள், சொத்துக்கள் ஆகிய வற்றை வாங்கிக் குவித்துள்ளனர் எனக் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் இருவருக்கும் 24 இடங்களில் ஆடம்பர இரகசிய அரண்மனைகள் உள்ளன. அவற் றில் 6 அரண்மனைகள் ஜனாதி பதி டிமிட்ரி மெத்வடேவுக் குரியது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தத் தகவலை ரஷ்யாவில் இருந்து வெளிவரும் ஒரு பத்திரிகை செய்தியாக வெளி யிட்டுள்ளது.

இதற்கிடையே பிரதமர் புடினுக்கு மட்டும் ரூ.420 கோடி மதிப்புள்ள அரண்மனை இருக்கிறது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அது கருங்கடல் பகுதியில் அமைந்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இவை தவிர ஜனாதிபதியும், பிரதமரும் வாங்கிக் குவித் துள்ள மாளிகைகள், வீடுகள், அரண்மனைகள், பனிச்சறுக்கு மையங்கள் ஆகியவை குறித்தும் பட்டியலிடப்பட்டுள்ளது.

அவர்களிடமுள்ள அரண் மனைகளின் படங்கள் கடந்த மாதம் இணைய தளம், பத்திரிகைகள் ஆகியவற்றில் பிரசுரமாகின. ஆனால், இந்தக் குற்றச் சாட்டை பிரதமர் புடினின் செய்தித் தொடர்பாளர் மறுத்துள்ளார். (ம)

# இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தமிழகத் தேர்தலில் பிரதிபலிக்கும்

## இந்திய எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு



சென்னை, பெப். 04

இலங்கைத் தமிழர் பிரச்சினையும், தமிழக மீனவர் பிரச்சினையும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் முக்கியமாகப் பிரதிபலிக்கும் - என்று டில்லி நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சுஷ்மா சுவராஜின் வீட்டுக்கு வெளிவிவகார அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா சென்றார். சுஷ்மாவிடம் தமிழக மீனவர் பிரச்சினை உள்ளிட்ட 5 முக்கியப் பிரச்சினைகள் தொடர்பாக மத்திய அரசின் நடவடிக்கை குறித்து விளக்கம் அளித்தார்.

சமீபத்தில் தமிழக மீனவர் பிரச்சினையை ஐ.நா. சபைக்குக் கொண்டு போகப் போவதாக பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி சென்னையில் கூறியிருந்தார். இந்த நிலையில் சுஷ்மாவை கிருஷ்ணா நேரில் சந்தித்து விளக்கம் தெரிவித்தது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

கிருஷ்ணாவின் விளக்கத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுஷ்மா சுவராஜ் கூறியவை வருமாறு-

தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும்போது அவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்வது, இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு நிவாரணப் பணிகள், அமெரிக்காவில் இந்திய மாணவர்களின் கால்களில் கண்காணிப்புக் கருவி மாட்டிய விவகாரம், எகிப்தில் தவிக்கும் இந்தியர்களை விமானத்தில் இந்தியா அழைத்து வருதல், சோமாலியா கடற்கொள்ளையர்களிடம் சிக்கி இருக்கும் இந்தியர்களை மீட்பது ஆகிய 5 பிரச்சினைகள் பற்றி எஸ்.எம்.கிருஷ்ணா என்னிடம் விளக்கம் அளித்தார். அவரது விளக்கம் திருப்தி அளிப்பதாக இருந்தது.

வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா ராவ் இலங்கைக்குச் சென்று இலங்கைத் தமிழர் பிரச்சினை மற்றும் தமிழக மீனவர்கள் பிரச்சினை பற்றிப் பேசினார் என்றும், இந்தப் பேச்சு திருப்தியாக இருந்தது என்றும் என்னிடம் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் நிவாரணப் பணிக்காக இதுவரை ரூபா 500 கோடி இலங்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், இன்னும் தேவைப்பட்டால் கொடுக்கத் தயார் என்றும், என்னிடம் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்தார்.

அமெரிக்காவில் படிக்கும் இந்திய மாணவர்களின் கால்களில் கண்காணிப்பு கருவியை மாட்டியது, மனிதாபிமானம் அற்ற செயல். இதற்கு இந்தியா சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றும் எஸ்.எம். கிருஷ்ணா என்னிடம் தெரிவித்தார்.

எகிப்தில் தற்போது 3,200 இந்தியர்கள் தவிக்கிறார்கள். அவர்களில் 650 பேரை விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்து விட்டோம். மற்றவர்களையும் இந்தியா கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் என்னிடம் கிருஷ்ணா கூறினார். - இப்படி சுஷ்மா தெரிவித்தார்.

# நீதிமன்றில் ராசா ஆஜர்

டில்லி, பெப். 04

2 ஜி ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்ட முன்னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஆ.ராசா சி.பி.ஐ. சிறப்பு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

தொலைத்தொடர்புத்துறை முன்னாள் செயலர் சித்தார்த்த பெஹூரா மற்றும் ராசாவின் தனிச் செயலர் ஆர்.கே.சந்தோலியா ஆகியோரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டபோது அமைச்சருக்கு நெருங்கிய வட்டாரங்கள் அடைந்த பணப் பயன்கள் குறித்த தகவலை ஒருவர் தெரிவித்தார். அவரை இந்த வழக்கில் சாட்சியாகச் சேர்ப்பது குறித்து சி.பி.ஐ. உயர் அதிகாரிகள் சிந்தித்து வருகின்றனர். அவர் அளித்த தகவல்கள் மற்றும் திடீர் சோதனைகளில் கிடைத்த ஆதாரங்கள், நீரா ராடியாவின் தொலைபேசி உரையாடல்கள் சுட்டிக்காட்டிய சில தடயங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ராசாவும் 2 உயர் அதிகாரிகளும் இப்போதைக்குக் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

**யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி, நூற்றாண்டு விழா கௌரவிப்பு**

*மேற்படி விடயம் தொடர்பாக, கல்லூரியில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உதைபந்தாட்ட அணி வீரர்களுடனான கலந்துரையாடல் 06.02.2011ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். சம்பந்தப்பட்ட தரப்பினரைத் தவறாது சமுகம் தருமாறு அழைக்கின்றோம்.*

**விழாக் குழுவினர்.**

# காங்கிரஸின் தந்திரமே ராசாவின் கைது - ஜெயா

ராசாவின் கைது நடவடிக்கை தேர்தலில் தி.மு.கவிடம் காங்கிரஸ் கூடுதல் தொகுதி களைப் பெறுவதற்காக நடத்தும் நெருக்கடித் தந்திரமாகவே கருதுகிறேன் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா இப்போது கைது செய்யப்பட்டிருப்பது பதில்களைவிட, இன்னும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது - என்றும் அவர் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் புதன்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு - 2 ஜி அலைக்கற்றை ஊழலில் தொடர்புடைய முன்னாள் தொலைத்தொடர் புத்துறை அமைச்சர் ஆ.ராசாவை சி.பி.ஐ. கைது செய்துள்ளது மிகச் சிறிய நடவடிக்கை மட்டுமின்றி, மிகவும் தாமதமாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை ஆகும். இந்தக் கைது நடவடிக்கை பதில்களை தருவதற்குப் பதிலாக இன்னும் ஏராளமான சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புகிறது. இது மக்களை ஏமாற்றும் தந்திரம் போல் தோன்றுகிறது. எனவே, அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் தொடர்பான உண்மைகளை மக்கள் அறிய வேண்டுமானால், அதற்கு நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைப்பது ஒன்று மட்டுமே தீர்வாக இருக்க முடியும். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இயக்கியோரையும் கைது செய்யக் கோரிக்கை

ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஆ.ராசாவை கைதுசெய்தது மட்டும் போதாது; அவரை இயக்கியவர்களையும் கைது செய்ய வேண்டும் என்று பா.ஜ.க. தலைவர் நிதின் கட்காரி வலியுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ரூபா ஒரு லட்சத்து 76 ஆயிரம் கோடி முறைகேடு நிகழ்ந்துள்ளது. இதில் ராசாவுக்கு மட்டுமல்லாமல் ஆட்சி, அதிகாரத்தில் மேல் மட்டத்தில் உள்ளவேறு பலருக்கும் தொடர்புள்ளது.

அவர்கள் ராசாவை பின்னால் இருந்து இயக்கியுள்ளனர். அவர்கள் எல்லாம் யார் என்பதைக் கண்டறிந்து அனைவரையும் கைதுசெய்து மக்கள் முன்நிறுத்த வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

**IMMEDIATE VACANCY**

WALK IN INTERVIEW
for
Hardware Technician
and
Trainee Hardware Technician
at
No.12, Sivagurunathar Lane,
off Kasthuriyar Road,
Jaffna.
on
4 Feb/5 Feb/6 Feb - 2011
10am
Salary Negotiable

**கண்ணீர் அஞ்சலி**

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
**திரு. ஜோன்சன்**
அவர்களின் அன்புத் தந்தை
**கபிரியல் ஜோசப்**



அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
உள்ளூராட்சித் திணைக்களம்,
வடமாகாணம்,
கைதடி, யாழ்ப்பாணம்.*

**நன்றி நவிலலும் பாராட்டும்**

*கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் நியமன நடைமுறையை மாற்றியமைத்துத் தகுதியுடைய புதிய பொதுமுகாமையாளரை நியமனம் செய்தமைக்காக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.வி.கே.அருந்தவநாதன் அவர்களுக்கும் கூட்டுறவுத் திணைக்களத் தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு.க.மோகன் அவர்களுக்கும் கூட்டுறவுப் பரிசோதகர் திரு.இ.இரத்தினகாந்தன் அவர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் கூட்டுறவாளர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் புதிய பொதுமுகாமையாளர் திரு.சி.நேசராசா அவர்களுக்கும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

வே.சிவயோகநாதன் கூட்டுறவாளர்கள் சார்பாக

**SAAMSON ENGLISH 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி**

எமது ஆங்கிலப் பயிற்சியானது 10 வருட கால கற்பித்தல் ஆய்வின் முடிவுகளிலிருந்து உருவாக்கப்பட்டதாகும்.

இலக்கணம், எழுத்துப்பயிற்சி எதுவுமின்றி மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி எமது கண்காணிப்பில் ஒருவரோடொருவரை உரையாடப் பயிற்சியளிப்பதன் மூலம் அனைவராலுமே 3 மாதத்தில் ஆங்கிலத்தில் சரளமாக பேச முடிவதை நாங்கள் நிரூபித்துள்ளோம்!

தொடர்ச்சியாக ஆங்கிலத்தில் உரையாடிப் பயிற்சி பெறுவதன் மூலம் மட்டுமே ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியும். அதற்கான சூழலை நாம் உங்களுக்கு உருவாக்கித்தருகிறோம்.

நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக பேச வேண்டுமா? 12.02.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொண்டு, கீழ்வரும் ஏதாவதொரு Group இல் இணைந்து கொள்ளுங்கள்.

பயிற்சி நேரம்: காலை: 08-10,10-12 மாலை:01-03,03-05
ஒரு Group இல் 20 பேருக்கு மட்டுமே அனுமதி உண்டு.

SAAMSON ENGLISH
279, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
0776214567

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பசுபதி பாக்கியம்



யாழ்ப்பாணம், ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலை தெற்கு, ஐங்கரன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பசுபதி பாக்கியம் 01.02.2011 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் பசுபதியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லர்- முத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முத்தர்- சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், அழகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற மணியம்மா மற்றும் அருளம்மா, அருமைராசா (குவைத்), கமலாதேவி, சந்திரன் (சுதுமலை), மோகன் (ஜேர்மனி), நிமலா, சோகன் (பிரான்ஸ்), ரஞ்சன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி (ஆசிரியர்) மற்றும் கணேஸ், நடேஸ், கிளி (குவைத்), துரைராசா, குஞ்சு, சுபத்திரா (ஜேர்மனி), பொன்னுத்துரை, சாந்தி (பிரான்ஸ்), றோசா (ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தயா (கொலண்ட்), உமா, றமா, சுசி, விசி, யுகுனா, யுகன், றசி, றஜன், றனி, டார்சன் (டோகா), றதன் (ஜேர்மனி), நிதன் (குவைத்), பிரபா, சிவா, சுகி, ஜென்சி, றஜனி, கஜி, வினோத் (டோகா), கீர்த்தனா, சாளி, ஷர்மிலன், ஷாமினா, ஷதுர்சன் (ஜேர்மனி), டினேஸ் (பிரான்ஸ்), டிலானி, டிலக்ஷன், டிவ்யா, டயான், டொறியோன் (பிரான்ஸ்), சங்கீத், மிதுஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் அபர்னா, தயானி (கொலண்ட்), கிஷாறா, அபிஷேக்கா, லுக்சிகா, கிருஷிகா, றிஷாந், பிரித்திகா, கெவின்கரன், கெவின்ராஜ், கெமிஸ்ரா, கெமிஸ்ரலா, மேகவர்னன், கஜவர்னன், றொசான், சரோன், சமீரா, அஸ்ரிகா, யஸ்மிலன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை மு.ப 11மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி விக்ரோறியா பிலிப்பையா

பலாலியை நிரந்தர வசிப்பிடமாகவும், மன்னாரைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரோறியா பிலிப்பையா நேற்று (03.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற றோசலின் மற்றும் மரியதாஸ், காலஞ்சென்ற பெனடிக்ற் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் - ஆங்கிலம்), ஜெறாட் (கனடா), மாகிறேற் (மன்னார்), யசிந்தா (கனடா), புஸ்பமாலா (மன்னார்) ஆகியோரின் அன்புத் தாயும் மனுவேற்பிள்ளை, திரேசம்மா, யேசுமலர் (எழுதுநர், இ.மி. சபை), மல்லிகா (கனடா), காலஞ்சென்ற எவறிற்றார் மற்றும் ஞானறட்ணம் (கனடா), செல்வநாயம் (மன்னார்), ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை மன்னார் பெரியகமம் குழந்தையேசு ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, பின்னர் பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பி. மரியதாஸ்
(மகன்- பொலிகண்டி).

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, பெப். 4

மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் எரிகாயங்களுக்கு இலக்கானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் மின்கலத்துக்கு இணைப்பு வழங்கிய போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

சங்கத்தானையைச் சேர்ந்த கே. தர்மேந்திரா (வயது -30) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை - மேசையிலிருந்த குப்பி விளக்கு சரிந்து வீழந்ததில் மண்ணெண்ணெய் சிந்தி தீப்பிடித்ததில் ஒருவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

கல்வயலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத் தைச் சேர்ந்த சாந்தலிங்கம் (வயது 55) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

(த-207)

## பன்றிகளால் நெற்பயிர் நாசம்

தென்மராட்சி, பெப். 4

தென்மராட்சி தெற்கு தனன்கிளப்பு, மறவன்புலோ பகுதிகளில் விளைந்த நெற்பயிர்கள் பன்றிகளால் அழிக்கப்பட்டு வருவதாக நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த மழையையடுத்து கூட்டம் கூட்டமாக வரும் பன்றிகள் வயல்களில் புகுந்து நெற்பயிர்களை அழித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

2010/2011 காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டோர் ஆரம்பகாலம் தொடக்கம் இயற்கை மற்றும் கட்டாக்காலி மிருகங்களால் பாதிப்புக்கு உள்ளாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-207)

## தென்னங்கன்று வழங்குமாறு கோரிக்கை

தென்மராட்சி, பெப். 4

தென்மராட்சி தெற்கு மறவன்புலோ பகுதி மக்களின் ஒரு பகுதியினருக்கு தென்னை அபிவிருத்திச் சபையினரால் தென்னம்பிள்ளைகள் வழங்கப்படும் என அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

தென்னை அபிவிருத்திச் சபையினரால் கடந்த மாதம் மறவன்புலோ பகுதியில் தென்னை மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 4 பரப்புக்கு மேல் காணி உள்ளவர்களுக்கு பரப்புக்கு 4 கன்றுகள் வீதம் விநியோகிக்கப்பட்டன.

பாலாவி நாற்று மேடையிலிருந்து கொண்டுவரப்பட்ட தென்னம்பிள்ளைகள் முடிவடைந்ததாள் கிடைக்காதவர்களுக்குகொண்டு வந்து தருவதாகக் கூறிச் செல்லப்பட்டது.

தென்னம் கன்றுகள் நாட்டுவதற்கு இந்த மாதம் உகந்த காலமென்பதால் விரைவில் வழங்குமாறு அப்பகுதி மக்கள் தென்னை அபிவிருத்திச் சபையினருக்கு அறிவித்துள்ளனர்.

(த-202)

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயதேவி இராஜநாயகம் (தேவி அன்ரி)



யாழ்ப்பாணம் துணைவியைப் பிறப்பிடமாகவும், 850, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயதேவி இராஜநாயகம் (தேவி அன்ரி) கடந்த புதன்கிழமை 02.02.2011 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயராஜசிங்கம் இராஜநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நைட் தம்பதியரின் அருமை புதல்வியும் எட்வேட் ஜெயராஜகுமார் இராஜநாயகம் (குமார் - போதகர் ஏழாம் நாள் திருச்சபை - யாழ்ப்பாணம்), றோய் ஜெபக்குமார் இராஜநாயகம் (ஜேர்மனி), நோயல் தேவகுமார் இராஜநாயகம் (ICC - கண்டி), சாமலா தயாளினி (மாலா - கந்தானை) ஆகியோரின் பாசமிகு தாயும் கிஷானி, வசந்தி, யோகராஜா ஆகியோரின் அன்பு மாமியும், ஜெரின் - சவீந்திரா, மொறின், கொறின், ஜேம்சன், ஜெபசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சந்திரோதயம், ஞானோதயம் (ஞானி), தயாபரன் ஜோர்ஜ் நைட் மற்றும் அருணோதயம் (பபி - கந்தானை), மேரி ஜெயமலர் (நியூஸிலாந்து), ஜெயராணி (வட்டுக்கோட்டை), கருணாகரன் நைட் (கிறடி - கந்தானை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருள்வாசம், செல்வராஜா, தர்மராஜசிங்கம் (தருமு - கனடா), அழகப்பன் (போதகர் - நியூஸி லாந்து), குலரட்ணம் ராஜா (வட்டுக் கோட்டை), அனற் (லலி - கந்தானை- இத்தாலி), நிர்மலாதேவி (தங்கா - மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மைத் துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை 850, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் மாலை 3.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

850, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
எட்வேட் ஜெயராஜகுமார் இராஜநாயகம்
(போதகர் ஏழாம் நாள் திருச்சபை - மகன்)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Applications will be received by me up to 28th February 2011 from suitably qualified candidates for the following post.

**1. NURSING OFFICER, GRADE II - U-MT1 (II)**

**QUALIFICATIONS:**

1. G.C.E (Ordinary Level) Examination in six subjects at not more than two sitting with credit passes in three subjects.

2. Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

Salary Scale:U-MT1 (II) : Rs.16,260 - 5x130; 2x155;10x185-19,070/= p.m.
Age limit: Not more than 45 years
Note : Age limit is not applicable to those who are in service

**SELECTION :** By Aptitude Test and Interview

Application forms may be obtained from the Office of the Senior Assistant Registrar/ Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the Bursar,University of Jaffna, together with a self - addressed Rs.5.00 stamped envelope of 23x10 cm., in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the Office of the Registrar on or before 28th February 2011.

Applications should be sent in the *specified* form. Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment Trust Fund benefits.
5. Free medical care

Those who are in Public Service/ Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments / Corporations / Boards. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of department is not received.

**Registrar**
**02.02.2011.**


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசேந்திரம் இராசமலர் (மலர்)

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசேந்திரம் இராசமலர் (மலர்) நேற்று (03.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் ஞானசீலி (சுவிஸ்), லூர்துநாயகி, தங்கராசா (உயர் நீதிமன்றம், கொழும்பு), சுவேந்தினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் குணரட்ணம் (கிளி), காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் மரீனா (கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு), கெங்காதரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமியுமாவார்.


அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் பின் நல்லடக்கத்துக்காக ஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
இ. தங்கராசா (மகன்).

## திருமதி அருமை கந்தையா



ஏழாலை மேற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருமை கந்தையா நேற்று (03.02.2011) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு கந்தையாவின் அன்பு மனைவியும், அரியமலர், அரியநாயகம், புனிதமலர் ஆகியோரின் அன்புத் தாயும் நடராஜா, பிறேமாவதி, உதயகுமார் ஆகியோரின் மாமியும், டயானார்த்தி, திரோராஜ், தீபன்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 03.02.2011 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உசத்தியோடை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"முருக வாசம்",
ஏழாலை மேற்கு, ஏழாலை.

தகவல்:
க. அரியநாயகம்
(மாவட்ட நீதிபதி - மல்லாகம்)

# மேசைப்பந்தாட்டம் ஞாயிறன்று

வலி.வடக்கு, பெப்.4

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான மேசைப் பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் லீக் முறையில் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, அராலி சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயம், உடுவில் மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. (ஐ-86)

## விளையாட்டின் எதிர்காலம்...



அச்சுவேலி தோப்பு அருள் நந்தி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி உரையாற்றுகின்றார். வித்தியாலய அதிபர் மு.இராசவரோதயனும் அருகில் நிற்கின்றார். (11)

# ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர் சேவாக் - பீற்றர்சன்

இந்தியாவின் வீரேந்திர சேவாக், மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெயில் ஆகியோர் ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர்கள் என்று இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இக்கட்டான நேரங்களில் களமிறங்கி ஆட்டத்தின் போக்கை தங்களுக்கு சாதகமாக மாற்றக்கூடிய வீரர்கள் ஒரு சிலரே. அவர்களில் ஒருவர் சேவாக். டெஸ்ட் போட்டியானாலும் சரி, ஒருநாள் போட்டியானாலும் சரி, 10 முதல் 15 ஓவர்கள் வரை களத்தில் நின்றுவிட்டால் ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிடுவார்.

ஆட்டத்தை தன் வசமாக்கக்கூடிய மற்றொரு வீரர் மேற்கிந்தியத் தீவுகளின் கிறிஸ் கெயில். இவர்கள் இருவரின் ஆட்டத்தை பார்த்து ரசிப்பதை மட்டுமின்றி, இவர்களுக்கு எதிராக விளையாடவும் விரும்புகிறேன் என்றார் பீற்றர்சன். (15)




# பாகிஸ்தானை அலட்சியம் செய்யாதீர்

## - ரமீஸ் ராஜா எச்சரிக்கை



உலகக் கிண்ணத்தை வெல்லக்கூடிய அணியாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி பரவலாகக் கருதப்படவில்லை. ஆனால் பாகிஸ்தானை அவ்வளவு சாதாரணமாகக் கருதிவிடாதீர்கள் என்று எச்சரிக்கை விடுக்கிறார், முன்னாள் கிரிக்கெட் வீரரும், இந்நாள் வர்ணனையாளருமான ரமீஸ் ராஜா. பாகிஸ்தான் தற்போது ஓரளவு நன்றாக விளையாடி வருகின்றது. இது சிறந்த ஒருநாள் அணியும் கூட. ஒருநாள் ஆட்டக் கலையை ஆடும் விதம் அவர்களுக்குத் தெரியும். சமீப காலங்களில் அவர்கள் டெஸ்ட் போட்டிகளில் திணறி வந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அணியின் பல வீரர்களுக்கு, நீண்ட இன்னிங்ஸ் ஆடும் பொறுமை இல்லாததுதான் அதற்குக் காரணம். ஆனால் 50 ஓவர் போட்டி, பாகிஸ்தான் வீரர்களுக்கு நன்றாகப் பொருந்தும் என்கிறார் ரமீஸ். கிண்ணத்தை வெல்ல முடியாது என்று பாகிஸ்தானை தள்ளிவிட முடியாது என்பதே எனது கருத்து. எங்கள் வீரர்களுக்கு அதிக நெருக்கடி கிடையாது. ஒருநாள் போட்டி, இவர்களுக்கு மிகவும் இயற்கையான விஷயம் என்று உற்சாகம் காட்டுகிறார் ரமீஸ் ராஜா. (15)

# உலகக் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு 3.25 மில்லியன் டொலர் பரிசுத் தொகை

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணிக்கு 3.25 மில்லியன் டொலர் (சுமார் 35 கோடியே 75 இலட்சம் ரூபா) வழங்கப்படவுள்ளது.

இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு 1.5 மில்லியன் டொலர் வழங்கப்படவுள்ளது.

முதல் சுற்றுப்போட்டிகள் ஒவ்வொன்றிலும் வெற்றிபெறும் அணிகளுக்கு தலா 30 ஆயிரம் டொலர்கள் வழங்கப்படும்.

அத்துடன், ஒவ்வொரு அணியும் தாங்கள் பங்கேற்கும் அனைத்து ஆறு முதல் சுற்றுப்போட்டிகளிலும் வெற்றி பெற்றால் 1,80,000 டொலர்கள் வழங்கப்படும்.

அரையிறுதி ஆட்டங்களில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் தலா 5,00,000 டொலர்களும் காலிறுதியில் தோல்வியடையும் அணிகளுக்கு தலா 2,50,000 டொலர்களும் வழங்கப்படும். (15)

ICC Cricket World Cup 2011

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* அளவெட்டி கலைவாணி வி.க. எதிர் அளவெட்டி விநாயகர் வி.க.
* அளவெட்டி பாரதிதாசன் வி.க. எதிர் தெல்லிப்பழை யூனியன்ஸ் வி.க.
* காங்கேசன்துறை ஐக்கிய வி.க. எதிர் வயாவிளான் வின்மீன் வி.க.
* மல்லாகம் சன்மார்க்க வி.க. எதிர் தெல்லிப்பழை நாமகள் வி.க.
* பன்னாலை கணேசன் வி.க. எதிர் இளவாலை சென். லூட்ஸ் வி.க.
* மல்லாகம் ஆர்.டி.எஸ். வி.க. எதிர் மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் வி.க.

இரண்டாம் சுற்றில் இருந்து தெல்லிப்பழை பூமா விளையாட்டுக்கழகம் மோதும். (ஐ-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

சுழிபுரம், பெப்.4

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கல்லூரி அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சென்றவாரம் விளையாட்டுப் போட்டியையொட்டி மாணவர்களின் மரதன் ஓட்டப்போட்டி கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பமாகி சித்தன்கேணிச்சந்தி, வட்டு மாவடிச் சந்தி, மூளாய்ச் சந்தி, சுழிபுரம் சந்தி ஆகிய வீதி வழிகளால் கல்லூரி வாசலை வந்தடைந்தது. போட்டியில் பங்குகொண்டு ஓட்டத்தை நிறைவு செய்த வீரர்கள் யாவருக்கும் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (ஐ-28)

***

சுழிபுரம், பெப். 4

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை வித்தியாலய அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக சிவதர்ம வள்ளல் ச.சச்சிதானந்தம், கலாபூஷணம் இ.கிருஷ்ணதுரை ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-28)

***

வடமராட்சி, பெப்.4

கரணவாய் தாமோதர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் க.குருகுலலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.தவேந்திரராஜா, முன்னாள் அதிபர் ம.மகேஸ்வரராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். திருமதி புஸ்பகுமாரி புஸ்பலிங்கம் பரிசில்களை வழங்குவார். (ஐ-236)

***

வடமராட்சி, பெப். 4

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவனும் சட்டத்தரணியுமான பா.பார்த்தீபன் கலந்து கொள்வார்.

பரிசில்களை வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அபிராமி பார்த்தீபன் வழங்குவார். (ஐ-236)

***

கோப்பாய், பெப். 4

ஊரெழு கணேச வித்தியாசாலையில் விரிவாக்கப்பட்ட மைதானத்திறப்பு விழாவும் இல்ல மெய்வன்மைப் போட்டியும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை முதல்வர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவரும் பாடசாலையின் கல்வி அபிவிருத்தி நம்பிக்கை நிதிய நிறுவுநருமான பொ.ரஞ்சன், பாடசாலை ஓய்வு நிலை உப அதிபர் திருமதி லோ.இரகுநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக பழைய மாணவரான த.இராமச்சந்திரன் ஆகியோர்கள் கலந்து கொள்வர். (உ-72)

***

கோப்பாய், பெப். 4

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி (இசுறு பாடசாலை) வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினர்களாக இலங்கை வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் ரி.செந்திநாதனும் யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தரான திருமதி கலாவதி செந்திநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய கணித பாட ஆசிரிய ஆலோசகர் கே.விஜயகுமாரும் கலந்து கொள்வர். (உ-207)

# உலகக் கிண்ணத்துக்கு தயார் நிரூபித்துக் காட்டியது இலங்கை





வருணபகவான் வந்தபோதும் வரிந்துகட்டி தாக்குதல் நடத்தியது இலங்கை. தரங்க சதம் அடிக்க மலிங்கவின் வேகத்தில் மாண்டது மேற்கிந்தியத் தீவுகள்.

நாணயச் சுழற்சி நடத்தது முதலில் வென்றது இலங்கை; தடுத்தது களத்தை.

கெயில் - பரத் ஆட்டம் ஆரம்பிக்க வந்தனர். ஆரம்ப அடித்தளம் அமைத்தனர் பலமாக. சதம் அடித்திருந்தார் கடந்த போட்டியில் பரத். இம்முறை விரைவில் கழற்றிவிட்டார் குலசேகர. அணிக்கு அவர் பெற்றுக்கொடுத்தது 12 ஓட்டங்கள். பின்தொடர்ந்தார் கெயில். முரளி முடித்து வைத்தார் 28 ஓட்டங்களுடன் அவரது ஆட்டத்தை.

புதிய இணைப்பு டரன் மிச்சல் பிராவோ - சர்வான். நீண்டது இணைப்பு. ஆனால் கடக்கவில்லை அரைச்சதம். சர்வான் பிரிந்தது ஜோடி வெளியேறினார் சர்வான்.

தொடங்கியது சரிவு. நீடிக்கவில்லை எவரது ஆட்டமும். பிராவோ சகோதரர்கள் கைகொடுத்தனர் முடிந்தவரை. தலா 39 ஓட்டங்களை இருவரும் துடுப்பால் தடுத்தெடுத்தனர். மலிங்க அனுப்பிவைத்தார் அவர்களை பவிலியனுக்கு.

இலங்கையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கவில்லை பின்வரிசை. பொலாட் ஐ.பி.எல். இல் அதிரடிக்கு பெயர் போனவர். ஆட்டிப்படைத்துவிட்டார் மலிங்க அவரை. நான்கு அவரது கணக்கு.

முரளி தன் கணக்குக்குச் சுழற்றியதால் இரண்டு விக்கெட்டுக்கள் அவர் கைகளில்.

203/10 முடிவில் மேற்கிந்தியத் தீவுகளின் நிலை.

மன்னன் மலிங்க மூன்று விக்கெட்டுக்களுக்கு சொந்தக்காரன். முரளி, குலசேகர இவ்விரண்டு இருவருக்கும்.

மழையோ விடுவதாய் இல்லை. இலங்கையோ வெல்லாமல் ஓய்வதாய் இல்லை.

முடிவில் வந்தது டக்-வேத் லூயிஸ். இலக்கு நிர்ணயம் 47 ஓவர்களில் 199.

தரங்க - டில்ஷான். அதிரடிக்கு இவர்களின் பெயர் பரிந்துரை. அதனால் தொடங்கியது ஆட்டம் அமர்க்களமாக.

அதிரடியாய் தொடங்கியதால் ஆரம்பத்திலேயே விக்கெட் சரிவு. வீழ்த்தியவர் ரம்புள். பதினொரு ஓட்டங்களுடன் திரும்பிவிட்டார் டில்ஷான்.


புகுந்தார் தலைவர் களத்துக்கு. இணைந்தார் தரங்கவுடன். தொடங்கியது தாக்குதல் வேகமாய். ஏறியது ஓட்டவேகம். அதிர்ஷ்டம் இல்லை தலைவர் சங்காவுக்கு. இருபது ஓட்டங்களே அவரது பங்களிப்பு.

மறுமுனையில் தரங்க புரட்டியெடுத்தார். கடந்த அரைச்சதம். அவருடன் இணைந்தார் மஹேல.

கலக்கியது தரங்க - மஹேல சோடி. எப்படி பந்துவீசியும் வீழ்த்த முடியவில்லை. இறுதியில் தரங்க விளாசினார் சதம். மறுமுனையில் மஹேல நொருக்கினார் அரைச் சதம். வந்துவிட்டது வெற்றி இலங்கைக்கு.

பந்துவீச்சில் சிறப்புப் பெறுதி யாருமில்லை. வெற்றிக்கு வித்திட்ட தரங்க ஆட்டத்தின் நாயகன். (15)

# வெற்றிநடை போடுகிறது பாகிஸ்தான் தொடர்கிறது நீயூஸிலாந்தின் சோகம்



சொந்த மண்ணில் வாங்குகிறது அடி. திருப்பிக் கொடுக்க முடியவில்லை நீயூஸிலாந்தால். பறிபோனது டெஸ்ட் தொடர். இப்போது இழந்தது ஒரு நாள் தொடர்.

அகமட் அதிரடிச் சதம். வகாப் சிறப்பான பந்து வீச்சு. வீழ்ந்தது நீயூஸிலாந்து.

நாணயச்சுழற்ச்சி முடிவு. அதில் நீயூஸி வெற்றி. எடுத்தனர் களத்தடுப்பு.

அஹமட்-மொஹமட் களம் விரைவு. ஆரம்பம் சிறப்பில்லை. அதிகம் ஓட்டமமில்லை. அதற்குள் பிரிந்தார் மில்ஸின் பந்தில் மொஹமட். அஹமட்டுக்கு ஜோடி கொடுத்தார் கம்ரான். இணைந்து கடந்தனர் அரைச் சதம். அதில் அஹமட் தன் கணக்கில் அரைச்சதம் தாண்டினார். அவச ரப்பட்டு ஆட்டமிழந்தார் அக்மல். மிஷ்பா வந்தார் களத்துக்கு. சோபிக்கவில்லை பெரிதாய். பின் வரிசை பரவாயில்லை. அவரவர் பங்குக்கு கணக்கு முடித்து திரும்பினர் பாகிஸ் தானியர்.

நிலைத்து தொடங்கிய ஆட்டம் அஹமட். இதனால் அடித்தார் சதம். பாகிஸ்தான் எட்டியது 268 ஓட்டங்கள். அதற்காய் ஒன்பது வீரர்கள் இழப்பு.

மில்ஸ்,ஓரம்,ஸ்ரைரீஸ் தலா இரண்டு விக்கெட்டுகள். இது நீயூஸியின் பந்து வீச்சு.

பதிலாட்டம் ஆரம்பம்மே துரதிஷ்டம். ரன் அவுட்டில் ரைடர் வெளியேற்றம். கௌவ் வந்தார் நிற்கவில்லை சென்றுவிட்டார்.

தலைவர் ரெயிலர் இணைந்தார் குப்திலுடன். நம்பிக்கை இருவரது ஆட்டமும். சிறப்பாக நீண்டது இவர்களது ஆட்டம். வந்தார் ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் அக்தர். பிரித்து அனுப்பிவிட்டார் குப்திலை. வெளியேறுகையில் 65 ஓட்டங்கள் அணிக்காய் அவர் பங்களிப்பு. பின்னர் நின்று ஆடவில்லை யாரும். தலைவருக்கு கை கொடுக்க யாருமில்லை. பாகிஸ்தான் பந்து வீச்சில் நீயூஸிலாந்தே சரண்டர் ஆகியது. ரெயிலர் தன் கணக்கில் அரைச் சதம் கடந்தார். இருப்பினும் அணியின் வெற்றிக்கு அவை போதவில்லை.

இறுதி 41 ஓட்டங்களால் தோல்வி. அதனால் தொடரும் இழப்பு. ஆட்டத்தில் கலக்கியதால் ஆட்டநாயகன் அஹமட்.

(15)



15 நாள்களே

உதயன் உலகக்கிண்ண
கொண்டாட்டம் உங்களுடன்

உலகக்கிண்ணப் போட்டிகள்.
எதிர்பார்க்கின்றோம் உங்கள் எழுத்துக்களை.
பார்த்த அனுபவங்கள். ரசித்த போட்டிகள்.
எழுந்த எண்ணங்கள். எழுதுங்கள்....
எழுதுங்கள்..... எழுதிக் குவியுங்கள்.
சிறந்ததற்கு உண்டு பரிசு .

"உலகக் கிண்ண வாசகர் கணை"
தபால் உறையின் இடது மேல் மூலைக்குறிப்பு.
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே நான் கொண்ட இலட்சியம்-ஷரா

மாஸ்கோ, பெப். 04



முன்னாள் முதல் நிலை ரென்னிஸ் வீராங்கனையான ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதே தமது இலக்கு என்று கூறியுள்ளார்.

மாஸ்கோவில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே எனது மிகப் பெரிய இலக்கு. 2012ஆம் ஆண்டு லண்டனில் நடக்கவுள்ள ஒலிம்பிக்கில் ரஷ்யாவுக்காகக் கலந்துகொள்ளவேண்டும் என்பது எனது கனவு'' - என்றார்.

23 வயதான ஷரபோவா, தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக 2008ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சச்சினுக்குப் பரிசு உலகக் கோப்பைதான் அடித்துக் கூறுகிறார் கப்டன் தோனி

டில்லி, பெப்.4

இந்திய அணி சார்பில் சச்சினுக்கு வழங்கக்கூடிய மிகப்பெரும் பரிசு உலகக் கோப்பைதான். என இந்திய அணி கப்டன் தோனி தெரிவித்துள்ளார்.

இந்தியர்கள் அனைவருக்கும் சச்சினை மிகவும் பிடிக்கும் தொடர்ந்து ஆறாவது முறையாக உலகக் கோப்பைத் தொடரில் விளையாடவுள்ள இவருக்கு இது கடைசி வாய்ப்பாக அமையலாம். இவர் நிறை உலகக் கோப்பைத் தொடரில் பங்கேற்க வேண்டுமென விரும்புகின்றோம். ஆனால் அது சாத்தியமல்ல. எனவே, இம்முறை இந்திய அணி சச்சினுக்காக உலகக் கோப்பையை வெல்லவேண்டும். இதுதான் அவருக்கு அளிக்கப்படும் மிகப் பெரும் பரிசாக அமையுமென மேலும் கூறினார்.

(326)

# கண்ணீர் அஞ்சலி

வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்
அவர்களின் தந்தை அமரர் **கப்றியேல் ஜோசப்**
அவர்கள் 03.02.2011ஆம் திகதி இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளரும் சக உத்தியோகத்தர்களும்
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் பொன்னம்பலம் பாக்கியநாதன்

கடந்த 06.12.2010 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் பொன்னம்பலம் பாக்கியநாதன் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நினைவு அஞ்சலி நிகழ்வும் இன்று 04.02.2011 வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

# ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 548
சீட்டிழுப்பு திகதி: 02.02.2011

வெற்றி எழுத்து: E வெற்றி இலக்கங்கள்: 03 05 28 61

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.16,079,512.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 09 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 212 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 461 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10977 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6354 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 158312 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25331 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ.7,359,720.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 4607000, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.16,276,503.20


# பேருந்து சேவை சீரின்மையால் மாணவர் சிரமம்

வண்ணை, பெப்.04

கொழும்புத்துறை, மணியம் தோட்டம் பகுதியில் பஸ்சேவை சீராக நடைபெறாதமையால் மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதற்கான பேருந்து சேவைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் குடியேறியுள்ள மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்படுவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

தனியார் மற்றும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துகள் சில நாள்களில் தடைப்பட்டு வருவதால் அன்றைய தினம் மாணவர் பாடசாலைக்குச் செல்வதில்லை எனவும் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் மின்சார வசதிகள் இன்னமும் மணியம் தோட்டம் பகுதிக்கு விஸ்தரிக்கப்படாததால் பாடசாலையில் கற்கும் பாடங்களை இரவு நேரங்களில் மீட்டல் செய்வதற்கும் மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்திலேயே இரவுக் கல்வியைத் தொடர்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(த-160)


**ஐக்கெயா பாம் சென்ரர்** IKEA FARM CENTER

தரமான இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் - 420/=, சுத்தம் செய்யப்பட்ட கல்பேட் - 550/= மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:- ஐக்கெயா பாம் சென்ரர், 816, கண்டி வீதி, (ஏ-9 வீதி) அரியாலை.
தொலைபேசி:- 0729827024, 0213001997.

**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், மோதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும் டாசோன் பெண் நாயும், 45 நாள் பூர்த்தியான டாசோன் ஆண் குட்டியும், பொமேரியன் ஆண், பெண் குட்டியும் விற்பனைக்குண்டு
தொடர்பு:- லிங்கமூர்த்தி மயூரன்
இல. 209, ராஜா ரியல் முன்பாக, பலாலி றோட், கோண்டாவில்.

**தவறிவிட்டது**

மோட்டார் சைக்கிள் பெயர்மாற்றம் செய்வதற்காகக் கொண்டு சென்ற ஆவணங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் 02.02.2011 நண்பகல் 12 மணிக்கு தவறவிடப்பட்டுவிட்டது. ஆவணங்களில் உள்ள பெயர்கள் S.Rajkumar, வேலு அரிகிருஷ்ணன், வாகன இலக்கம் - VG8403 இந்த ஆவணங்களை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து, நல்லூர் பிரதேச செயலகத்தில் அல்லது [illegible] பத்திரிகை நிலையம்- திருநெல்வேலியில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
T.P:-0778329276

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதியில் பிறவுண் வீதி சந்திக்கும் கஸ்தூரியார் வீதி சந்திக்கும் இடையில் சகல வசதிகளுடனும் கூடிய மேல் வீடு வாடகைக்கு உண்டு. 4அறை, ஒரு குசினி, ஹோல், பல்கனி என்பன உண்டு.
தொடர்பு: 0776569893.

# 45ஆவது நினைவு நாள் அழைப்பு



## றஜனிகாந்தன் மதுசுதனா

தோற்றம்: 30.06.1982
மறைவு: 22.12.2010

கடந்த 22.12.2010 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் நினைவுப் பிரார்த்தனை இன்று 04.02.2011 வெள்ளிக்கிழமை மு.ப.11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கானை,கப்பண்டா முகாம்,
சங்கானை.
தொ.பே: 0771940055

கணவர்
றஜனிகாந்தன் (காந்தன்)

# ජාතික සම්පත

ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 96
திகதி - 02.02.2011
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: H அதிர்ஷ்ட இலக்கம்: 06 வெற்றி இலக்கம்: 8 3 2 6 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | H | 06 | 8 | 3 | 2 | 6 | 1 | ரூ. 8,551,121.00 | பரிசு | - |
| 1 பரிசு | | 06 | 8 | 3 | 2 | 6 | 1 | ரூ. 2,000,000.00 | பரிசு | - |
| 2 பரிசு | | | 8 | 3 | 2 | 6 | 1 | ரூ. 100,000.00 | பரிசு | 03 |
| 3 பரிசு | | | | 3 | 2 | 6 | 1 | ரூ. 10,000.00 | பரிசு | 27 |
| 4 பரிசு | | | | | 2 | 6 | 1 | ரூ. 1,000.00 | பரிசு | 260 |
| 5 பரிசு | | | | | | 6 | 1 | ரூ. 50.00 | பரிசு | 2549 |
| 6 பரிசு | | | | | | | 1 | ரூ. 20.00 | பரிசு | 24392 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 8 | 3 | 2 | 6 | | ரூ. 1,000.00 | பரிசு | 24 |
| 8 பரிசு | | | 8 | 3 | 2 | | | ரூ. 100.00 | பரிசு | 261 |
| 9 பரிசு | | | 8 | 3 | | | | ரூ. 50.00 | பரிசு | 2523 |
| 10 பரிசு | H | | | | | | | ரூ. 20.00 | பரிசு | 10013 |
| 11 பரிசு | H | 06 | | | | | | ரூ. 100.00 | பரிசு | 1118 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,933,600.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசை பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம் www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.8,923,069.00

# மாதகல் புனித லூர்து அன்னை திருவிழா



04.02.2011 அன்னையின் நவநாள் மாலை 4.30 மணிக்கு திருச் செபமாலையுடன் ஆரம்பமாகி 12.02.2011 அன்று மாலை 6மணிக்கு அன்னையின் தேர் பவனியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்று 13.02.2011 காலை 7.00மணிக்கு அன்னையின் திருநாள் திருப்பலி இடம்பெறும்.

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## அழைப்பின் பேரில் சாரதி சேவை (Driver on call)

அழைப்பின் பேரில் சாரதி சேவையை வழங்கக் கூடிய மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட அனைத்து வாகனங்களையும் செலுத்தக்கூடிய சாரதி அனுமதிப் பத்திரம் வைத்துள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 15.02.2011 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். வாகனம் செலுத்துவதில் சிறந்த தேர்ச்சி, அனுபவம், உடற்தகுதி மற்றும் வாகனம் செலுத்தும்போது ஏற்படக்கூடிய சிறு பிழைகளைக் கண்டறிந்து திருத்தும் ஆற்றல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகக்கிளையில் இருந்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அந்த விண்ணப்பப் படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்கவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், தொழில் அனுபவம் மற்றும் வேறு ஏதாவது பொருத்தமான விவரங்களுக்கான சான்றிதழ்கள் யாவற்றினதும் போட்டோ பிரதிகளை தவறாது இணைத்து
சிரேஷ்ட உதவிப்பதிவாளர், நிர்வாகக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பவும்.

பதிவாளர்
03.02.2011

# நீங்கா நினைவில் பன்னிரண்டு ஆண்டுகள்



அமரர் ஸ்ரீமான்
## செல்லப்பா கனகசபை

தங்கோடை,காரைநகர்.
(ஸ்தாபகர்:- யாழ்.கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோர்ஸ், )

தோற்றம்: 08.10.1925
மறைவு : 19.01.1999

திதி: 04.02.2011

பேரோடும் புகழோடும் பெருமையாய் வாழ்ந்த உத்தமரே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
பசுமையான நினைவுகள் என்றும் எங்களை விட்டகலாது
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.11, கஸ்தூரியார் லேன்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

PERSONAL CLASS
364, Stanly Rd, Jaffna.
(Near DMI)
BA - I
Revision & Paper
Tamil - தர்மராஜா
Pol. Sci. - புவனநாதன்
Hin. Cul. - சத்தியநாதன்
Philosophy - சிவா
ENGLISH 9-12
ஆரம்பம் நாளை

## 63 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும், இன்று இரவு கதிர்காமம் சூரன்கோட்டை ரஜமஹா விகாரையில் பிரித் வைபவமும் இடம்பெற உள்ளன. சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களுக்கு சுத்தமான குடிதண்ணீர், சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (த-சி)

## ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை பயணிகள் கவனத்துக்கு

மதவாச்சிக்கும் அநுராதபுரத்துக்கும் இடையே குளம் ஒன்று உடைப்பெடுத்துள்ளமையால் அந்த இரு இடங்களுக்கும் இடையே ஏ-9 வீதியூடான போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் பயணம் செய்யும் பயணிகளின் நன்மை கருதி ஈஸ்வரன் போக்குவரத்துச்சேவை மாற்றுப் பயண ஏற்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

இதன்படி கொழும்பில் இருந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை பஸ்களில் பயணம் செய்யும் பயணிகள் அநுராதபுரம் - வவுனியா இடையே ரயிலில் பயணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரயிலில் செல்லும் பயணிகள் அங்கு இறங்கியவுடன் ஏற்கனவே தயார் நிலையில் உள்ள ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை பஸ்களில் பயணிக்க முடியும்.

இந்த வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட தடை காரணமாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் எமது பஸ்களில் நேற்று இரவு புறப்பட்ட பயணிகள் இன்று காலை 3-5 மணித்தியாலங்கள் தாமதமாக உரிய இடங்களுக்குப் பாதுகாப்பாக வந்து சேர்வார்கள் என ஈஸ்வரன் போக்கு வரத்துச் சேவை நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு:
ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை,
69/115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2813, 021 222 4317 (சி/575710)

## மரண அறிவித்தல்

### எஸ்.எம்.ஜே.வில்பிறட்



*(கல்யாணி பான்சி ஸ்தாபகர்)*

கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சப்பல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.எம்.ஜே.வில்பிறட் நேற்று (03.02.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை-பொன்றோஸ் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரோற்றிரம்-விக்ரோறியா தம்பதியரின் அன்பு மருமகனும் பிலோமினாவின் அன்புக் கணவரும் வசிகரன் (லண்டன்), மேரிஅசம்ரா(றதி), தயாபரன், ரஞ்சினி(பிரான்ஸ்), பொன்றோஸ் (நோர்வே), பாஸ்கரன் (கனடா), சிறி(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜசிந்தா(லண்டன்), ஜெயறாஜ், (கல்யாணி பான்சி), அற்புதலீலா (ஆசிரியை, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி), பாலகுமார் (பிரான்ஸ்), சத்தியபால் (நோர்வே), சுவர்ணா (கனடா), செல்வி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வினோசினி, வினோஷிபன், பிரியா, கெபின், ஜொவித்தா, அல்வின் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இன்று(04.02.2011) வெள்ளிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கரம்பொன் புனித் செபஸ்ரியார் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*இல. 49, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.* (110265)
*சி.பி. ஜெயறாஜ். (மருமகன் ) (கல்யாணி பான்ஸி)*

## 9ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு
05 ★ 12 ★ 1953



இறப்பு
04 ★ 02 ★ 2002

### அமரர் கந்தையா சத்தியசீலன்

*ஆண்டுகள் ஒன்பது சென்றுவிட்டது - தங்களின்*
*ஆனந்த முகத்தைக் கண்டு !*

*சாந்தமான தங்களின் பேச்சைக் கேட்க*
*ஆவலாய் நிற்கின்றோம் !*

*அனுதினமும் தங்களின் நினைவுடன் - நாம்*
*அலை மோதி நிற்கின்றோம் !*

*உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் !*

*மறுபடி உங்களைக் காண்போம்*
*இறைவனின் வருகையிலே !*

*சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.* (110264) குடும்பத்தினர்.

## ஐக்கிய இலங்கையோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாட்டங்களை மிகுந்த பெரு மைக்குரியதாக ஆக்கியுள்ளன.

மிகப்பெரும் தியாகங்க ளைச் செய்து வெற்றிகொண்ட சுதந்திரத்தை அர்த்தமிக்கதாக ஆக்கவேண்டும் என்பதே இன்று முழு தேசத்தினதும் அபிலாஷையாகும். இனம், கட்சி அல்லது சமயம் என்ற எந்த வேறுபாடுகளுமின்றி மக்களின் கவலையைப் போக்கி மனநிறைவை அதிகரிப்பதற்காகவே சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதாக சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் அமரர். டி.எஸ். சேனநாயக்கா அன்று தேசத்தைப் பொறுப் பேற்ற சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.

இதுவே, சுதந்திரத்தை எதிர்பார்க்கும் எந்தவொரு தேசத் தினதும் நோக்கமாகும். அந்த நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டுமானால் தேசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டும். அபிவிருத்தியை நோக்கி எடுத்துவைக்கப்படும் ஒவ்வொரு அடியும் சுதந்திரத்தை நோக்கி எடுத்து வைக்கப்படும் அடியாகும். இந்தவகையில் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குகின்ற பயணம் மேன்மேலும் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

மிகப் பெரும் சுதந்திரத்தை நோக்கிய இந்தப் பயணத்தில் கடந்த கால, நிகழ்கால தவறுகளை நாம் சரிசெய்து கொள்ள வேண்டும். பிரிவினைகளினூடாக நாம் எந்த வெற்றியையும் பெற்றதில்லை. பிரிவினை எம் எல்லோருடைய சுதந்திரத்தையும் பறித்துவிடக்கூடியது.

நாட்டைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் நாம் செய்த அர்ப்பணத்தைப் போன்றே ஐக்கிய தேசமொன்றைக் கட்டியெழுப்புவதிலும் நாம் ஒன்றுபட்டு அர்ப்பணத்துடன் செயற்பட வேண்டியுள்ளது.

நாம் ஒரு மேன்மைமிக்க வர லாற்றுக்குச் சொந்தக்காரர்களாவோம். அந்த வரலாறு சுதந்திரத்திற்காக மிகப்பெரும் அர்ப்பணங்களைச் செய்த வீரர்களால் நிரம்பியுள்ளது. இந்த எல்லா தேசப்பற்றுள்ளவர்களுக்கும் நான் இச்சந்தர்ப்பத் தில் எனது கௌரவத்தை சமர்ப்பிக்கின்றேன் - என்றுள்ளது. (த-சி)

## வவுனியா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு வழங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்தார். இந்த சமைத்த உணவு எல்லா மக்களுக்கும் கிடைக் கவில்லை எனவும் தெரிவிக்கப் பட்டது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் கடந்த சில தினங்களாகப் பெரு மழை பெய்து வருகின்றது. இதனால் வன்னியில் மீளக் குடியமர்ந்துள்ள பெரும் எண்ணிக் கையான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்காலிகக் கூடாரங்களை அமைத்து குடியமர்ந்துள்ள குடும்பங்கள் இந்த மழை காரணமாக இடம்பெயர்ந்துள்ளன. அதிக நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்த நெற்செய்கையும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் கிராமத்தைச் சேர்ந்த 65 குடும்பங்கள் இடம்பெயர்ந்த நிலையில் கற்சிலைமடு பாட சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் பேராறு, குறிவிச்சை ஆறு என்பன பெருக்கெடுத்த நிலையில் பண்டார வன்னியன் கிராமம் நீரில் மூழ்கியுள்ளது.

இதனால் அங்கிருந்த மக்கள் படையினரின் உதவியுடன் வாகனங்கள் மூலம் நேற்று மாலை மீட்கப்பட்டு பாடசாலையில் தங்க வைக்கப்பட் டுள்ளனர்.

கற்சிலை மடுக்குளம் உடைப்பெடுத்துள்ளதுடன் ஒட்டுசுட்டான் - முல்லைத்தீவு பிரதான வீதியில் வெள்ளம் மேவிப் பாய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்துஐயன்கட்டு குளத்தின் வான் கதவு திறந்து விடப்பட்டுள்ளதாலும் குளத்துக்கு நீர் வரத்து அதிகமாக இருப்பதாலும் குளத்தின் தாழ்வான பகுதிகளில் இருக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-10-500)

## இலங்கை அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கடற் படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சித்திரவதை செய்யப்பட்டும், படுகொலை செய்யப்பட்டும் மீன்பிடி வலைகள் படகுகள் சிதைக்கப்பட்டும், தமிழக மீனவர்களால் பிடிக்கப்பட்ட மீன்கள் கொள்ளையடிக்கப்படுவதுமான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிகழ்ச்சிகளின் உச்சக்கட்டமாக கடந்த சில நாள்களுக்கு முன்னர், வேதாரண்யம் பகுதி, புஷ்பவனம் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஜெயக்குமார் இலங்கைக் கடற்படையினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தக் கொடுஞ்செயலுக்கு இலங்கைக் கடற்படையினர் காரணமல்ல என வாதிடும் இலங்கை அரசை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழக முதல்வர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எழுதிய கடிதம், அதனைத் தொடர்ந்து மேற்கொண்ட அவசர நடவடிக்கைகள் காரணமாக மத்திய அரசின் வெளியுறவுச் செயலாளர் நிருபமாராவ் தலைமையில் குழு ஒன்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்து இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாணும் அடிப்படையில் பேச்சு நடத்தியது.

புதுடில்லி சென்ற தமிழக முதல்வரிடம், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா , வெளியுறவுத் துறைச் செயலாளர் நிருபமாராவ் ஆகியோர் தமிழக மீனவர் பிரச்சினையில் இனியும் இத்தகைய விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறாது எனவும், மேலும் இந்தப் பிரச்சினையில் சுமுகமான முடிவுகள் மேற்கொள்வதற்காக இருதரப்பையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுக் குழுவை நியமிப்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டு - பின்னர் கைவிடப்பட்ட - கச்சத்தீவில் தமிழகத்திற்கு உள்ள உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்கேற்ற வகையில் - புதிய ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்பதையும் இப்பொதுக்குழு வலியுறுத்துகிறது. இந்தப் பிரச்சினையில் அக்கறையுடன் செயற்படும் தமிழக முதல்வருக்கும் இக்குழு நன்றி தெரிவிக்கிறது- என்றுள்ளது. (த-10)

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை (கனகரட்ணம்) பத்மராணி

வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை (கனகரட்ணம்) பத்மராணி நேற்று (03.02. 2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கரம்பன் தெற்கு காலஞ்சென்ற இராசதுரையின் (கனகரட்ணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை-பாக்கியலட்சுமி (பொன்னம்மா) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நிமலகுமார் மற்றும் தேவகலா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற நகுலாம்பிகை மற்றும் பாலச்சந்திரன், சிவகங்கை, இராமச்சந்திரன், சிவச்சந்திரன், கிருபாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, அரசரத்தினம் மற்றும் யோகம்மா, கமலாம்பிகை, காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் வசந்தாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2011) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5ஆம் வட்டாரம், வேலணை.* (110265)
*தகவல்: மகள் (தேவகலா)*

### திருமதி முத்துத்தம்பி நாகரத்தினம்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துத்தம்பி நாகரத்தினம் நேற்று (03.02.2011) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொண்ணு-பூரணம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்று சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் சகுந்தலாதேவி(கொழும்பு), கமலாதேவி, ஜெயரத்தினம் (ராஜி திருமணசேவை) ஆகியோரின் பாசமிகு தாயும் கேபேட் இக்னேசியஸ், சதாசிவம், இராஜசிறி ஆகியோரின் மாமியாரும் அன்ரன் பிரதீப், கரிதரன், ஜோதிகா, வெங்கடேஸ்வரன், கவிதாரனி, ஜெயசிறி(காந்தி), ஜெயகாந்தி (மீரா-ஜேர்மன்), ஜெயகோபி, ஜெயசந்துரு, நந்தகோபன், கிருஸ்ணசன்ரா, பாஸ்கரன்(ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியும் ஓவியா (ஜேர்மன்)வின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.02.2011) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*
*மு.ஜெயரத்தினம்-0774745647*
*சிவன் வீதி, ஆவரங்கால்.* (110266)
*தகவல் : பிள்ளைகள்.*

# கோட்டை அருகே மனிதப் புதைகுழி?

யாழ்ப்பாணம், பெப்.04

யாழ். கோட்டையை அண்டியுள்ள தேவாலயம் ஒன்றுக்கு அருகில் மனிதப்புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மனிதப் புதைகுழியில் மண்டையோடு ஒன்று இருந்ததாகவும் கூறப்படுகின்றது. யாழ். கோட்டைப் பகுதியில் அகழ்வாராட்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்த குழுவினராலேயே இந்தப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புகைகுழிக்குள் மேலும் மண்டையோடுகள் இருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது. இந்த மனிதப் புதைகுழி குறித்துத் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிகள் யாழ். பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். அத்துடன் கொழும்பில் உள்ள தொல்லியல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கும் இது தொடர்பாக அவர்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வாராட்சிப் பணிகளை இடைநிறுத்துமாறு தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரிக்குப் பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-10)

## கே.பி. தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லட்சம் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஹெய்ட்டியில் உள்ள நிலைமைதான் இலங்கையிலும் உள்ளது. இந்த நாட்டிலும் மக்கள் இந்த ஏகாதிபத்திய அரசுக்கு எதிராகப் போராடுவர். அந்தப் போராட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

சுதந்திர தினத்தன்று (இன்று) நாம் நடத்தும் போராட்டம் பாரிய போராட்டத்தின் ஆரம்பமாகும். இந்த தினத்தில் இலங்கை அரசு சரத்பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கினால், நாட்டில் முழுமையான சுதந்திரத்தை ஏற்படுத்துவதற்காகப் பொன்சேகாவையும் இணைத்துக்கொண்டு நாம் நாடளாவியரீதியில் போராட்டங்களை முன்னெடுப்போம்.

2011ஆம் ஆண்டு ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஆண்டாகும். இந்நாட்டு மக்கள் இந்த ஆண்டை உரிய முறையில் பயன்படுத்துவர் என்று நாம் நம்புகிறோம்.

நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த பொன்சேகா சிறையில், பயங்கரவாதத்துக்கு தலைமை தாங்கிய கே.பி வெளியில். இது எவ்வளவு அநீதியானது என்பதை மக்கள் புரிந்துள்ளனர். இலங்கையில் தடைசெய்யப்பட்ட தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தையும் கே.பியைக் கொண்டு இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதற்காக அரசு முழங்காவிலில் 100 ஏக்கர் நிலத்தையும் வழங்கவுள்ளது. இது தொடர்பாக இந்நாட்டு மக்கள் கடும் கவலை அடைந்துள்ளனர் - என்றார்.

## விடுதலையா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றிய ஐ.தே.க. எம்.பி. தயாசிறி ஜயசேகர இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

தேசிய சுதந்திர தினத்தில் வருடா வருடம் கைதிகளுக்கு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர்.1,500 கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றனர்.

விடுதலை செய்யப்படும் கைதிகளில் கொலைகாரர்கள், கொள்ளையர்கள், ஹெரோயின் வியாபாரிகள், உட்படப் பலர் அடங்குகின்றனர். கொலைக் குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுப வித்து வந்த அமைச்சர் ஒருவரின் மனைவிகூட கடந்த வருடம் விடுதலை செய்யப்பட்டார். -என்றார். (த-சி)

## தொடர்ச்சியாகப்...

குடும்பங்களைச் சேர்ந்த 98 ஆயிரத்து 735 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 134 தற்காலிக முகாம்களில் 8 ஆயிரத்து 167 குடும்பங்களைச் சேர்ந்த 29ஆயிரத்து 800 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மண்சரிவு, வெள்ளம் ஆகியவற்றால் 729 வீடுகள் முற்றாகச் சேதமடைந் துள்ளன. 3ஆயிரத்து 550 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

பதுளை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே உயிர்ச்சேதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தொற்றுநோயைத் தடுக்க நடவடிக்கை

கிழக்கில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதை அடுத்து அம் பாறை, மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் மூன்று விசேட வைத்தியக் குழுக்களை கிழக்கு சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் நேற்று நியமித்துள்ளார்.

அடைமழை மற்றும் வெள்ளப் பெருக்கால் ஏற்படும் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த விசேட வைத்தியக் குழுக்கள் செயற்படவுள்ளன.

வெள்ளப் பாதிப்புள்ள பகுதிகளிலும், மக்கள் இடம்பெயர்ந்துள்ள நலன் புரி நிலையங்களுக்கு அருகிலும் அம்புலன்ஸ் வண்டிகளை நிரந்தரமாகத் தயார் நிலை யில் வைத்திருக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கிழக்கு வைத்தியசாலைகளில் போதுமான அளவில் மருந்துகள் இருக் கின்றன என்றும், தற்போதைய நிலையைக் கருத்தில்கொண்டு வைத்தியர்களையும், ஊழியர்களையும் தியாக சிந்தனையுடன் பணியாற்றுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (த-சி)

## உயர்பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சசின்வாஸ் குணவர்தன ஆகியோர் பங்குபற்றினர்.

அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த 10ஆம் திகதி இடம் பெற்ற சந்திப்பின்போது கூட்டமைப்பு முன்வைத்த சில பிரச்சினைகள், கேள்விகளுக்கு அரச தரப்பினர் விளக்கமளித்தனர்.

"யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயமென்று ஒரு பிரதேசம் இல்லை. இருந்தும் சில இடங்களில் படையினர் நிலைகொண்டிருப்பர். உயர் பாதுகாப்பு வலயங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டது என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் மக்கள் படிப்படியாக மீளக் குடியமர்த் தப்படுவர்.

திருகோணமலை சம்பூர் பிரதேசம் வர்த்தமானி மூலம் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தும் அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களை அதே இடத்தில் மீள்குடியமர்த்துவது குறித்து ஆராயலாம்" - என்று அரச தரப்பு தெரிவித்ததாகவும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பினர் மேலும் சில தீர்வுத் திட்டங்கள் குறித்து பேச்சு நடத்தினர் என்றும் தொடர்ந்துவரும் பேச்சுகளில் இதுதொடர்பாக முடிவுகள் கிட்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உரிமைகள் அவர்களுக்குத் தேவையான அதிகாரங்கள் தொடர்பான பேச்சுக்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் பேச்சுக்களின்போது ஆராயப்படும்.

எதிர்வரும் மார்ச் முதல் வாரத்தில் மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார். (த-சி)

## ஏ-9 போக்குவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிப் பொலிஸார் தெரிவித்தனர். இத னால் நேற்று கொழும்பில் இருந்து வட பகுதிக்கும், வடபகுதியில் இருந்து கொழும்புக்கான போக்குவரத்து ஏ-9 வீதியில் தடைப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து புறப்பட்ட வாகனங்கள் அனுராதபுரத்திலும் வடபகு தியில் இருந்து புறப்பட்ட வாகனங்கள் மதவாச்சியிலும் மிக நீண்ட வரிசையில் பயணத்தைத் தொடர முடியாமல் காத்திருப் பதாகப் பொலிஸார் கூறினர். மழை தொடர்ந்து பெய்வதால் இந்த நிலைமை எப்போது சீராகும் என கூற முடியாது உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித் தனர். யாழ்ப்பாணத் திலி ருந்து வானங் களில் பயணித்த பயணிகள் சிலர் மதவாச்சி யுடன் போக்கு வரத்துத் தடைப் பட்டதால் அங்கிருந்து வவுனியாவுக்குத் திரும்பி வந்து ரயிலில் கொழும்புக்குத் தமது பயணத்தை தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-10)

A/L 2013
கலை, வர்த்தகர்
பிரிவு- 2
ஆரம்பம்:- 05.02.2011
சனி (நாளை) காலை 8.00மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

New Medi Care
யாழ்.பிரபல பொது வைத்திய நிபுணர் Dr.மகேசன் சாவகச்சேரி New Medi Care மருத்துவ மனையில் பிரதி சனிக்கிழமைகளில் மாலை 3மணியளவில் நோயாளிகளை பார்வையிடுவார்.
நிர்வாகி.
இல.32, கச்சாய் றோட், சாவகச்சேரி.
T.P: 021 3734505, 021 4920949.

BEACON யாழ்நகர்
வர்த்தகப்பிரிவு
A/L 2011 Day
A/L 2010, 2013
புதிய பிரிவு
ACC:- பாலகஜன்
ECO:- அருணன்
BU.S:- பாலசுபேஷ்
*பாடம் மாறிப் படிப்பவர்களுக்கு ஆரம்பஅலகில் இருந்து கற்பிக்கப்படும்
* உங்களின் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கித்தரப்படும்.
ஆரம்பம்:- 05.02.2011
சனி 9.00

Deutsch - (டொச்)
Deutsch - (டொச்)
Dutch - (டச்)
Dutch - (டச்)
எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch மற்றும் Nederland - Dutch, French, Italian மொழி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
No.3, 2nd Lane, palay Road.
Tel:- 0213216928, 0779927117, 0774842464

IBM Computers for Sale
(கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிகச்சிறந்த தரமானது)
Original IBM Think Center (With Lock)
Intel Pentium IV 3.20 GHZ
1 GB Ram 80 GB HD
LCD Monitor DVD Rom
நம்ப முடியாத விலையில் !!!
Internet Browsing Center களுக்கும் அரச, தனியார் நிறுவனங்களுக்கும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மிகவும் உகந்தது !!!
IBM System Keyboard,mouse
Rs.22500/=
இன்றே முந்துங்கள் !!!
IBM கணனி என்றால் No - 1 தரம் என்பது உலகறிந்த விடயம் !!!
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

உதயனின் கிளைக்காரியாலயம்
தற்போது சாவகச்சேரி நகரில்
தென்மராட்சி வாழ் மக்களே!
உங்களிற்கான உதயன் பத்திரிகையின் தேவைகளாகிய
* பிரதேசச் செய்திகள், ஆக்கங்களை வழங்கவும்
* மரண அறிவித்தல்கள், நினைவஞ்சலிகள்
* பாராட்டு வாழ்த்துக்கள்
* வர்த்தக விளம்பரங்கள்
பாடசாலை மாணவர்களிற்கான விஷேட Photo copy சேவை
போன்றன காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை வழங்கமுடியும்.
1ஆவது மாடி நவீன சந்தை, சாவகச்சேரி.
தொலைபேசி:- 0212270323
(வி/575704)

தேவை
Gate Way நிறுவனத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
* கணினி விரிவுரையாளர்கள்
* கணினி போதனாசிரியர்கள்
* ஆங்கில மொழிப்போதனாசிரியர்கள்
தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
பகுதி நேரமாக வேலை செய்யும் வசதிகள் உண்டு.
கல்வி தராதரப் பத்திரங்களுடன் இன்றும் நாளையும் நேரில் வரவும்.
UTHAYAN IT ISLAND
347, KASTHURIYAR ROAD,
JAFFNA.
0212220543
(சி/575703)

வெளிக் கொண்டு வருகிறோம்
தெரியப்படுத்துகிறோம்.
பின்வரும் நோய்களுக்கான சிகிச்சை முறைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன
(1) புற்றுநோய்கள் (மூளைக்கட்டி முதற்கொண்டு)
(2) இருதயநோய்கள் (சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த வேண்டியவை)
(3) சிறுநீரகக் கோளாறுகள்
(4) மனநோய்கள்
(5) காசநோயாளர்கள் (T.B)
★ எயிட்ஸ் நோய்க்கான சிகிச்சை பரிசீலிக்கப்படுகின்றன. மேற்கண்ட நோய்க்கான குணங்குறிய ள்ளவர்கள் தாமதியாது தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
பரிசோதனைமூலம் நிரூபிக்கப்பட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
சிறிபதி லம்போதரன் மருத்துவமனை,
இல.144, சுதுமலை வடக்கு, இணுவில் வீதி, மானிப்பாய்.
தொ.பே: 0776607576.
(110255)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.